வைத்திய அட்டவணை.

சித்த மருந்து திரட்டு

281

281

வயித்திய அட்டவணை. (சித்த மருந்து திரட்டு)

அட்டவணை.

சீலைத் தயிலம் இரசத் திரி கெந்த தாளி நெய்
சகல ரோகத்துக்கு மெழுகு சிந்தாமணிக் குளிகை அமுர்
அமுர்த சஞ்சீவிக் குளிகை, வயிற்றுக் கடுப்புக்கு மன்மத சிந்தாமணி லேகியம்.
அசன வில்வாதி தயிலம்
வலிகுணம் நிதானம்
பிரபாவத்திற்கு ரசம்
சகல வியாதிக்கும் குளிகை
வாயால் எடுக்கும் குளிகை
ஜன்னிக்கு குளிகை சிந்தாமணிக்குளிகை.
அகோர ஆசத்திர குளிகை பாசுபத ஆசத்திரக் குளிகை
இரசச் செந்தூரம், பரதர் பலங்கே சுரம்.
சீதாங்க ரசம்.
அர்த்தகுரி ஈச்பரக் குளிகை
வீர விக்கிரம ரசம் பிரதாப மண்ட ரசம்
பேய் பீர்க்கு தயிலம்
தானக் கேஸ்வர குளிகை
ரச கற்பூரக் குளிகை, கற்ப்பூர ரசாயனம்.
காரங்கி ரசக் குளிகை
நசியம் குலாங்கிஷம் அமிர்த சர்க்கரை,
ஏலாதிச் சூரணம், பஞ்சபாண ரசம்
மேகநாதி ரசம் விரோசனம், உதய மார்த்தாண்ட ரசம்.
வில்வாதி லேகியம் விரோசனம் சோபை நிதானம்
கசாயம், வாத சோபத்துக்குக் கசாயம், பித்த சோபத்துக்கு கசாயம்
கசாயம் மேற்கண்டவைக்கு
சர்வ சோபத்துக்கும் கசாயம், குறி தோஷத்துக்குக் கசாயம்
சீத பித்த நிதானம் மேற்கண்டவைக்கு இந்துப்பு நெய்
விஷபாக நிதானம், விஷ பாகத்தின் சோதனை
விஷ பாகத்துக்கு என்னெய் விஷபாகக் குணம்
மேற்கண்டவைக்கு மருந்து
நடை ஜன்னி நிதானம் ஜன்னி வாதத்துக்கு.
யோனி கலை நிலை நிதானம்
வெக்கை பாவை அருவை அருவை பீலிகை நிதானம்
மகோதரம் மேல் கவிசை எரி குணம்
எரி குணத்துக்கு மருந்து, விக்கல் வரட்சி காமாலைக்கு மருந்து
விக்கலுக்கு பித்த பாண்டுவிற் குணம் பித்த ஜன்னி வாத குணம்
ஜன்னி வாத ரத்தின் குணம் ஊது ஜன்னி வாத ஜன்னி குணம்.
சேத்தும ஜன்னி குணம், இரத்த பித்தத்துக்கு குணம் மேற்கண்ட நெய்
வெள்ளை நெற்றி குணம், உதட்டுப் புண்ணுக்கு, விஷபாகத்து குணம்
மலட்டு வலி குணம், மேற்கட் மருநது, வாத அதிசாரத்தின் குணம்.
தேற்றான் கற்பம், பித்த அதிசாரத்தின் குணம்.
மேற்கண்ட மருந்து, சேற்கும அதிசாரத்தின் குணம்
மேற்கண்ட குளிகை மருந்து.
பக்க சூலை குணம் மருந்து
பெண்களுக்கு குடல் வாதமானல் குணம்.
முலைப் புண்ணுக்கு மருந்து, குடல் வாதம் செய்யும் குணம் மேற்கண்ட மருந்து.

மேஹேக்கிய வாய்வுக்கு என்னை வாய்வுக்கு ~~என்னை~~, குளிகை.
சோகை செய்யும் சூரணம் இதுக்கு மருந்து
மண்டல வியாதி சூரணம் குழிக் கண்ணுக்கு
விடாத சுரத்துக்குக் குளிகை வாத சுரத்துக்கு
மூன்று சுரத்துக்கும் குளிகை குளிர் சுரத்துக்கு குளிகை.
மாறலுக்கு ஜன்னி சுரத்துக்கு முதியான குளிகை
சுர உருண்டை, கண்டங்கத்திரி குழம்பு.
நவசுரத்துக்கு, சீத சுரத்துக்கு, முதியான் குளிகை.
சுர உருண்டை, மரண வாதத்துக்கு ரசம், வாத சுரத்துக்கு குளிகை
சீத சுரத்துக்கு துக புஉஷ்லாதிக் குளிகை.
அமுதாதிக் குளிகை சீத மஞ்சரிக் குளிகை
தக்கஞ்சுக் கொடு, பஞ்சாங்கத்துக்கு மருந்து, தாபச் சுரத்துக்கு
தாப சுரத்துக்கு குளிகை சுர உருண்டை.
ஆனந்த வயிரவன் சுர உருண்டை, பிற வாப்பு குளிகை.
மார்த்தாண்ட குளிகை, ராமபாணக் குளிகை, சன்னிக்கு வீரபத்திர குளிகை.
விரோசலத்துக்கு, நீர்க்கடுப்புக்கு,
இரசம் சுத்தி, பிரமி கற்பம்.
சித்திர மூலகற்பம், சீந்தி கற்பம்.
கோற கற்பம்.
கோடாசூரிக் குளிகை.
சுரஉருண்டை
தாபசுரத்துக்கு
விரோசலத்துக்கு சித்த சுரத்துக்கு.
சுரத்துக்கு நெய், எதிர் கவிசை சூரணம்
பச்ச கவிசைக்கு வீக்கத்தில் கட்ட அகுவை மேல் கவிசைக்கு
மேற்கண்ட பொடி, வயிற்றில் விப்புருதி சூரணம்
ஒடு விப்புருதிக்கு கரப்பானுக்கு
குடல் வாதத்துக்கு
அமுர்த சர்க்கரை சூரணம்
சீதேவியார், வியாதி பலதுக்கும் நெய்.
வியாதி பலதுக்கும் பஞ்ச திரவிய நெய்
வேம்பின் கற்பம், வியாதி பலதுக்கும் கையாந்தகரை எண்ணெய்
அதப்பை நோவுக்கு பெருந்த லை நோவுக்கு
இரத்த ரோகத்து குன்மம், பித்தத்தின் சூரணம்.
பித்த பியத்தவதுக்கு
பித்தமாய் தலை மயிர் கழிகிறதுக்கு
பித்தத்துக்கு எண்ணெய் வடிக்க
சுக்கில பிரமியத்துக்கு
நாலு நாள் மாறலுக்கு
மாறல் வகைக்கு, ராம பாணம்
இரசமிரு காங்கிஷம், காந்திகி குளிகை, ஜன்னி வாததோஷம் இதுக்கு உருண்டை
பயித்திய வாய்வுக்கு.
கணப்பிட்டிகை பண்ணும் வகை
விஷமுட்டித் தைலம், சித்தவிபற்மமான சுரமும்
ஜன்னி வாதத்துக்கு தசை உருக்கி பண்ணும் உதரக் கழிச்சலுக்கு.
ஏலாதிச் சூரணம்
கிராணிக்கு, சத்தி குன்மத்துக்கு
பிரத பலங் கேசுரம், சூச்சிக் கற்பனம், ஜன்னி வாத சுரக்குளிகை.

ஜன்னி வாத சுரக் குளிகை

மஹா அக்கினி குமாரன் சீத சுரம் ஜன்னி வாத குளிகை

இரசக் குடிளகை நாலு நாள் மாலுக்கு , தாபசிரத்துக்கு.

சீத சுரத்துக்கு வாய் கட்டின சுரத்துக்கு குளிகை, தாப் சுரத்துக்கு ராவில் குடிநீர்

வாத சுரத்துக்கு, பிரமியத்துக்கு, இரத்த பிரமியத்துக்கு, முசல் கன்றுக்கு, மலம் ஜலக் கட்டுக்கு.

வாத எண்ணெய் மஹா வாய்வுக்கு, 13-வகை ஜன்னிக்கும் வேப்பம் பட்டைத் தயிலம்

அரக் கெண்ணெய், பிறங்க தயிலம்.

பஞ்சாக்கனி தயிலம், 13-ஜன்னிக்கும் எண்ணெய்.

வாத எண்ணை, மதக்கிறதை தயிலம், 80 வாதத்துக்கும் எண்ணெய்.

பேய்க்கு நசியம், முழங்கால் வாத எண்ணெய், பிறமியத்துக்கு எண்ணெய்.

சத்தி எடுக்கிறதுக்கு, கெற்பினி சத்திக்கு, இரும்பலுக்கு எண்ணெய்.

பின்ளைக்கு குளிர் தோஷமாகுல்.

சத்தி எடுக்க விக்கலுக்கு நவனீதம்.

பேதா பூருந்தி கசாயம், பித்த ஜன்னிக்கு லேபனம், தாதிர ஜன்னிக்கு.

சீதாங்க ஜன்னிக் குளம்.

அரிமாரி ஜன்னிக் குளம், அதிக ஜன்னிக் குளம், அசுவத ஜன்னிக் குளம்.

அலர ஜன்னி குளம், ஜன்னி வாதத்துக்கு பொட்டணம், ஜன்னிக்கு நிலப்பாதி தயிலம்

மரண வாத ஜன்னிக்கு

நசியம் எந்தெந்த ஜன்னிக்கும், அலத்த ஜன்னிக்கு எண்ணெய் அஞ்சனம்

ஜன்னி வாதத்துக்கு எண்ணெய், சகாதேவி தயிலம், அமுர்தகைத் தயிலம்.

அசுவ கந்தி பாலாசிஉதாத்தி தைலம், மஹா சக்கினித் தயிலம்.

சிலேற்சம சுரத்துக்கு வெருக்கு எண்ணெய்

வேர்வைக்கு கற்கம், வயிற்று விப்புருதிக்கு, குன்மத்துக்கு, குன்மத்துக்கு ஆவரை கற்பம்.

வலி குன்மத்துக்கு, குலைவலி குடல் வாதத்துக்கு, பிள்ளைக்கு குளிசம் கட்ட, பிரமியம் முதலானதுக்கும்.

அரக்கெண்ணெய்.

ஊபுன்றி வருகிற சுரத்துக்கு கசாயம், பெருடையார் தம்ம இளைப்புக்கு, குடிநீர்
வெந்த புண்ணுக்கு, காமாலைக்கு.

****

சு.ச:25.3.63.

தேதி:- 14.3.63.
புத்தகத்தின் பெயர்:- வயித்திய அட்டவணை. (சித்த மருந்து திரட்டு)
எழுதியவர்:- சி.அ.வெ.அப்துல் ரஹீம்.
எடுக்கப்பட்ட இடம்:- எச்.எம்.

*****

__சீலைத் தைலம்:-__

பன்றி நெய் பலம்.20, அரசம் பட்டை, உதியம் பட்டை நெல்லிப் பட்டை, வெலரம் பட்டை, செம்பபே பட்டை வகைக்கு பலம்.உ, புங்கம் வேர் பலம்.உ, சாதிலிங்கம் களிப்பாக்கு காசுக்கட்டி வகைக்கு பலம்.1 3 நாள் ஊற வைத்து சிறுக எரித்து புள்ளு புரைக்கு தடவ சகல ரணமும் தீரும்.

__இரசக் திரி:-__

ரசம் விராகனிடை.1, காரியம் விராகனிடை.வ, மனோசிலை கெந்தகம் சாதிலிங்கம் வகைக்குக் கட்டிடை 1, நாகம் கட்டிடை 4, கடுக்காய் தோல் எருக்கிலை சுட்ட சாம்பல் சமன் சமன் வேலிப் பருத்தி சாறு விட்டு அரைத்து திரியாகச் செய்து சகல ரணத்துக்கும் புகை போடவும்.

__கெந்த தாளி நெய்:-__

நருந்தாளி, மனத்தக்காளி, ஈருள்ளி, புளியாரை, சிறுக்கீரை, கருந்தாளி, வகைக்கு சாறு படி.ரு, ஏலம் மதுரம், கோஷ்டம், சாதிக்காய், கிராம்பு, வாலுளை சீரகம், மாசிக்காய், குகை நீர், கற்கண்டு, முந்திரி பழம் வகைக்கு ரூபாயெடை.4, பசு நெய் படி.4, மிளகுவாய் காய்ச்சி 12 நாள் சாப்பிடவும். மூலாதாரம் தொட்டு உண்டான ரணங்களும் கெந்த தாளி ரணம் தீரும்.

__சகல ரோகத்துக்கு மெழுகு:-__

வீரம் விராகனிடை.உ, லிங்கம் விராகனிடை.உ, பூரம் விராகனிடை.உ, கெந்தி விராகனிடை.4 இவை எல்லாம் பசுவின் நெய்யில் அல்லது வெண்ணெயில் நன்றாய் அரைத்து சீலையில் கட்டி இரும்பு குச்சியில் சுத்திச் சூடம் போல் எரித்து சிறு பாத்திரத்தில் ஒரு விராகன் ரசம் விட்டு அதில் மேற்படி சுடரை இறக்கி சீசாவில் அல்லது டப்பியில் வைத்து வியாதியை அறிந்து சர்க்கரை வெல்லம் பனம் கருப்பட்டியில் வைத்து கொடுக்க சகல ரண, மேக குஷ்ட, புண் புரை குலைப்புடம் முதலானதும் தீரும். இச்ச பத்தியம். போகம் ஆகாது. 5 நாள், 7 நாள் கொடுக்கவும்.

__சிந்தாமணி குளிகை விருத்தம்:-__

சிந்தாமணிக் குளிகை செய் முறை கேள் நாகலிங்கம்
கெந்தி அரிதாரம் கெடி நாவி முத்தும் திரிபாலை
காரம் திரிகடுகுதானே அரிய அக்கிராக் காரம்.
2. பதின் மூன்றும் ஆயிழையே ஓர் நிறையாய் ஈன மிது பார்த்து
வகைக்கு வாழ் மிரு ஈனமில்லா தேன் கரும்பின் சாற்றில்
திரள மிரள்டில் ஆட்டி உண்டை காசளவு சிறு பயிறு காண-
3. கண்டு செய்த உருண்டை தனை கையினாலின்
சாற்றிலிட நன்றாய் விரேசன மா கங்கையே
நிலத்தில் மோரில் அருகிக்காம் மீளும் விசம்
படிச் சார் காரிய வெல்லத்தில் பாச்சி விடு நீர் வலங்க கட்ட
குத்து நிற்ற கொழு நீர் கொள்ள.

__அமிர்த சஞ்சீவி குளிகை:-__

சுக்கு பலம்.1, சீரகம் பலம்.1, மிளகு பலம்.இ, ஏலம் பலம்.வ, இவைக்கு

சமன் நெல்லி வக்கல் இவை எல்லாம் ஒரு சட்டியில் யிட்டு கிளி கட்டி தண்ணீர் விட்டு வேக வைத்து அந்த சரக்கு வெந்த கசாயத்தில் தானே அந்த மருந்தை அரைத்து சுண்டக்காய் பிரமாணம் உருண்டை செய்து வைத்துக் கொண்டு சக்கலவாய்வுக்கும் இரண்டு குளிகை சாப்பிட்டு பச்ச தண்ணீர் சேர்க்கவும். புளிச்சேப்பம் மந்தம் மந்தம் வாய்வு தீரும். சிறவருக்கு மாந்தம் முதல் சகல வியாதிக்கும் ஆகும். கை கண்டது.

வயிற்றுக் கடுப்புக்கு பாட்டு:-

மாதுள வேரோடு மருவ அதிவிடயம் கோரை கொடசம் கொள் சுக்கு
:பாதருந்த சீத வள ரெத்தம் சேர்ந்த அதிசாரம் காத வழி போகும் கடந்து
ஆவீன கன்று ஒரு பிடியும், அரசும் புரசனில் தளிரும் காசக்க திரை புரந்
கோனியும் காட்ட வரையில் மிகருப்ப தாயை கொன்றுன் பூச்சாக்கில் தானே யரைக்க
நடிப்பீரய் பாவை போன்ற விழி மாதே வருடும் கமிழும் ஞமமாமே.

மன்மத சிந்தாமணி லேகியம் இதவே பெரிய பூரண வியாகம்:-

வாலுளுவை அரிசி, மதன காமேஸ்வரிப்பூ, குருசாணி ஓமம், அபினி, கஞ்சா விதை வெப்பாலை பட்டை, கோரக்கர் மூலிகை, விளாவரிசி, லவங்கப் பட்டை, பேய்ப் பீர்க்கன் விதை, முருங்கை விதை, நிலைப் பனங் கிழங்கு, சாரப் பருப்பு, பூனைக் காலி விதை, நாட்டு அமுக்கிரா வித்து சாதிக்காய், சாதிபத்திரி, ஏலம், கிராம்பு, முள்ளலவுன் பிஞ்சு, கசகசா, எட்டி விதை, நீர்முள்ளி விதை, பனை வெல்லம், முந்திரிகை பழம், பேரீச்சம் பழம், கச்சோலம், வெந்தயம், நாய் வேளை விதை, நெய்யத்த கதை விதை, தெசாவரம், பொடுதலை சுக்காய் விதை, விராலி விதை, முசுட்டை விதை, என்று, உலர்ந்த இலுப்பைப் பூ இவைகளெல்லாம் சமன் --------------- உழக்கு பசுவின் பாலில் வேக வைத்து வைத்துக் கொண்டு முருங்கை பூ கொண்டு வந்து ஒரு சட்டியில் வேடு கட்டி. அதின் மேலே முருங்கை பூவை வைத்து சட்டிக்குள் தண்ணீர் விட்டு புட்டு வேக வைக்கிறப் போல் வேக வைத்து பகலை பிழிந்து சங்கையை எரித்து போட்டு மேல் சொன்ன மருந்துகளை சூரணித்து புட்டு வைத்து எடுத்து முருங்கை பூ ரசத்தில் மேல் சூரணத்தை பூசி பாகம் செய்து முன் வைத்தபடியே இந்த சூரணத்தையும் மரபடி பால் விட்டு புட்டு கட்டி முன் படியே அவித்து இறக்கி அந்தப் பாலில் சூரணத்தை போட்டு தேன் சர்க்கரை, நெய் விட்டு இதில் சொர்ண பற்பம், வெள்ளி பற்பம், முத்து பற்பமும் இவைகள் சமன் அரை ஆக கூட்டி பதத்தில் கஸ்தூரி பச்சை கற்பூரம் கோரோசனம் குங்குமப்பூ இவைகள் சமன் அரை கூட்டி -------

இதுக்குத் தீரும் வியாதிகள்: இந்திரிய உடைச்சல் தீரும், காது புஷ்டம் உண்டாகும். சரீரம் பழ பழ வென அழகு கொடுக்கும். சரீரம் பொன்னிறமாய் ஆனை நடை குதிரை ஓட்டமும் பாம்புக்கு உண்டான செவியும் கருடனுக்கு உண்டான பார்வையும் உண்டாம். இப்படி இன்னம் வாத பித்த சிலேத்மமும் தீரும். சரீரம் மன்மதன் போலாம். அறிவு உண்டாம். இன்னம் அனேக வியாதிகள் குணமுண்டாகும். இதவே பெரிய பூரணாதி என்றும் மன்மத சிந்தாமணி என்றும் பேரும். இது தன மந்திரி பிரயோகம்.

இத மன்மத சிந்தாமணி லேகியம் ஒரு முறை:-

சாதுவகை சமூலம், வில்வ வேர் அருகன் வேர், விஷ்ணுகிரந்தி சீந்திக் கொடி, சந்தனக் கட்டை வகை.1-க்கு பலம் 10 வீதம் எட்டு வல்லம் தண்ணீர் விட்டு ஒரு வள்ளமாய் மூலிகை போட்டு காய்ச்சிய கசாயத்தில் சீனி சர்க்கரை பலம்.10, கூட்டி பாகு செய்து கடை மருந்து சூரணம் செய்து போடவும். கடை சரக்குகள் விபரம் சிறு நாகப்பூ, தக்கோலம், வால் மிளகு, சோம்பரிசி, சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம், சீரகம், கருஞ்சீரகம், செண்பகப்பூ, கடுக்காய், தான்றிக்காய், மாசிக் காய், சாதிக்காய், செண்பகப்பூ, நீர் முள்ளி விதை, சாதிப் பத்திரி, அக்கிராக் காரம், இலவம் பிசின், சடாமாஞ்சி, வாலுளுவை அரிசி, சன்ன லவங்கம், லவங்கப் பத்திரி, தாளிசப் பத்திரி, கோஷ்டம், குரோசாணி ஓமம், வாலுளுவை திப்பிலி, கஞ்சா வகை ஒன்றுக்கு விராகனிடை.10, அபினியை நெய்யில் இட்டு காய்ச்சி தேன் கூட்டி மூலிகை ஈதும்மையும் எலுமிச்சங்காய் பிரமாணம் சாப்பிடவும்.

அசன வில்வாதி தைலம்:-

மாவேங்கை மரச் சிறும் பலா, சித்தா முட்டி வேர் பலம்.௫, வில்வ வேர் பலம்.50, சீந்தில் தண்டு பலம்.45, வேங்கை மரச் சிறுயிக்கு தண்ணீர் படி.12-ல் 4 படியாக காய்ச்சி சீந்தி தண்டுக்கு தண்ணீர் படி 16-ல் 4 படியாக காய்ச்சி வில்வப் பத்திர வேருக்குத் தண்ணீர் படி 12-ல் 4 படியாக காய்ச்சி ஆக நாலு வகை மருந்தும் காய்ச்சின கசாயம் படி16-ம் எள்ளு எண்ணெ படி 8 விட்டு பசுவின் பால் படி.8 கசாயம் வைத்து மேல்படி மருந்து அமுக்கிரா வேர், சித்தாமுட்டி வேர், அரத்தை திரி பலம், அதிமதுரம், ஏலம், லவங்கம், மஞ்சள், மரமஞ்சள், மஞ்சட்டி, சடாமாஞ்சி, சுக்கு, கஸ்தூரி மஞ்சள், சமுத்திராப் பச்சை, சந்தனம், அகில் கட்டை, கஸ்தூரி, குங்குமப்பூ, விலாமிச்சம் வேர், வெட்டி வேர், முத்த காசு, தாமரை வளையம், செங்கழுநீர் கொட்டம், கற்பூரம், மரகத சந்தனம், இவை எல்லாம் பரிமளமான மருந்தெல்லாம் நாலு விராகனிடையும் மற்ற கடை சரக்கெல்லாம் எட்டு விராகனிடையும் பொடி பண்ணி முன சொன்ன கற்கத்தில் கடை சரக்கு மருந்தெல்லாம் அரைத்து கருந்த பரிமள மெல்லாம் பொடி பண்ணி வைத்துக் கொண்டு முன அரைத்த சரக்கு மருந்தெல்லாம் போட்டு எரிக் காய்ச்சி அந்த கருகு மெழுகு பதம் ஆன உடனே இறக்கும். பக்குவத்தில் பரிமள பொடியை எரி அந்த மருந்து வேகச்சே சலப்பு கட்டி அதிலே போட்டு சரிசெ பொருந்த எடுத்துப் போடப் பூ, மல்லிகை பூ முல்லைப் பூ இருவாச்சி சித்த செண்பகம் மருக்காளிப் பூ இவ வெல்லாம் மாலையாக கட்டிப் போட்டு இதுக்கு முன் குங்கும படி கோரோசனை கற்பூரம், கஸ்தூரி இவ வெல்லாம் வெங்கல சட்டியில் ரும் ஆனதும் பனவிடை பொடி பண்ணிப் போட்டு கோடி புடவையில் வடித்து கலத்தில் வார்த்து தானியப் புடம் வைத்து தலைக்கு அப்பியாசம் பண்ணுவிக்க இதுக்குத் தீரும் வியாதி சிர வாய்வு, நேத்திர வாய்வு, கண்டத்துக்கு மேல் பட்ட வியாதிகள் எல்லாம் கன்ன ரோகம் தலைச் சூலை கன்ன வாய்வு முங்களுந்து வோ வு பீனிசம் மத்தகசைத்தியம் முதலாம் இவை எல்லாம் தீரும்.

வலி குன்ம நிதானம்:-

வலி குன்ம நிதானம் மருகு வயிற்றை பிசகுது ஊசியை வட்டென யிழுக்கும். தொண்டைக்கு மூயளவாக வலிக்கும். வாய் நீர் சொரியும். நெஞ்சு புண் போல் இருக்கும். உண்ட சோறு அறக் காளிக்கும் உண்டால் தீரும். இதுக்கு மருந்து சுக்கம் 1, சருக 1, கடல் சுரை.1, இவை விராகன் எடை வெள் வெங்காயம் உழக்கு, நப்பு.௨, கல்லுப்பு உழக்கு, நல்ல கடுகு, உழக்கு சுக்கு பொடி உழக்கு வசம்புப் பொடி உழக்கு இவை எல்லாம் பொடி செய்து நாலு பெய்த் தூமட்டுக் கரண்டு பலம் பாலும் கூட வார்த்த இரண்டு படி வெள்ளாட்டு பாலும் கூட புகட்டி பானை வாய் சட்டி கொண்டு மூடி கலிந்து எருமைக் கொழுவிலே முப்பது நாள் புதைத்து வைத்து எடுத்து அவ்வி சாச சென்ற உடனே இரண்டு நாள் கருப்பு கட்டி தின்ன இரண்டு நாள் வாழை பழம் தின்ன இரண்டு நாள் மாமிசம் தின்ன மற்ற நால் மருந்தை எடுத்து உறைய வைத்து நாலொன்று உரித்த பச்சை பாச்சலவு தின்ன நாலா நாள் அருவை கிலேச, குளிமான வெக்கை பானை சவிசை உறம் மெழுகு வாதம் மடிவதை, மகுவை தீரும்.

பிரபாவத்திற்கு ரசம்:-

வேப்பந் தழை, மஞ்சள், திப்பிலி, மிளகு, வாய் விளங்கம், கொடி வேலி வேர், சுக்கு இந்த மருந்து எழுக்கும் சரியாக இந்துப்பு கூட்டி கொள்ளவும். கோரைக் கிழங்கு செங்கழுநீர் கோஷ்டம், வான் முசுட்டை இவ் வெல்லாம் சமன் கொண்டு வெள்ளாட்டு கோமயத்தில் ஏழு நாள் அரைக்கவும். கடலைப் பிரமாணம் உருண்டை பண்ணிச் செப்பு சட்டியில் உலர வைக்கவும். விநாயக பூசை பண்ணி எடுத்து வைக்கவும்.

இந்த உருண்டை கொடுக்கிற வகை:-

அதிசார சுரத்துக்கு:- திப்பிலியில் கொடுக்கவும்.
மந்தாக்கினிக்கு சுக்கு, திப்பிலி, மிளகில் கொடுக்கவும்.

வாய் நீர் ஒலிர்ந்து கொழுந்து வருகிறதுக்கு: எலுமிச்சம் பழச் சாற்றில் கொடுக்கவும்.
செரியாக் குணத்துக்கும், காச்சலும் வயிறு களிச்சலுமா இருந்தால்: நெய்யுக் சுக்கும், திப்பிலி, மிளகும் கூட்டிக் கொடுக்கவும் சர்வ சுரமும் தீரும்.
சீத சுரத்துக்கு: பசுவின் கோமயத்தில் கொடுக்கவும்.
பிரமியத்துக்கு நெய்யில் கொடுக்கவும்.
குன்ம சூலைக்கு வெல்லத்தில் கொடுக்கவும். மாந்த பித்தத்துக்கு நல்ல சந்தனம் நீரில் கொடுக்கவும்.
விடூத்துக்கு அமுக்கிரா வேர் சாற்றில் கொடுக்கவும்.
இளைஇருமல், இழுப்புண்டாகில் நெய்யில் கொடுக்கவும்.
கிருமிக்கு மோருடன் கொடுக்கவும்.
முததிரக் கிரிச்சிக்குப் பச்சை அரிசிக் கழு நீரில் கொடுக்கவும்.
பாண்டுவுக்கு பசுவின் பாலில் கொடுக்கவும்.
குத்த நோவுக்கு தானிக்காய் நெல்லிக்காய், கடுக்காய் பொடி செய்து வெந்நீரில் கொடுக்கவும்.
வாதத்துக்கு வெந்நீரில் கொடுக்கவும்.
தேள் கடிக்கு பசுவின் கோமயத்திலாவது, சிறு நீரிலாவது உரைத்துக் கொட்டு வாயில் தடவ தீரும்.
அபஸ் மாரத்துக்கு கையாந்த கரைச் சாற்றில் கொடுக்கவும்.
எட்டு வகை வாய்வுக்கு வாழைக் கிழங்குச் சாற்றில் கொடுக்கவும்.
அந்தி மாலைக்கு கையாந்த கரை சாற்றில் கொடுக்கவும்.

<u>வேறு குந்த அவுஷத முற்றும்:-</u> 16.3.63.

இரதம், கெந்தகம், பச்சை நாவிக் கொடி வேலி, எவாச்சாரம், வாய்விளங்கம், ரேணுகம், முத்தக் காசு, ஏலம், சிறுநாகப்பூவு, திப்பிலி மூலம், திரிபலை, கடுகு தாபுற சுத்த மருபை பதினெட்டும் சமன் கொண்டு சூரணம் பண்ணி இந்த மருந்தெல்லாம் ஒரு பங்கும் நல்ல வெல்லம் இரண்டு பங்கும் கூட்டி ஒரு நாள் இடித்து கடலைப் பிரமாணம் உருண்டை செய்து ஒரு உருண்டை தண்ணீரில் கொடுக்க சுவாச காசம் போம். க்ஷயரோகம், பிரமியம், விஷம், சுரம் கிராணி வயிறு நோவு, பாண்டு, மகா வியாதியான மூத்திரக் கிரிச்சினம் அபசுத்தம் ராம சன்னி வாதம், பாம்பு கடி, தேள் கடி, அசுத்த ரோகம், பாத ரோகம், முதலான சர்வ வியாதியும் போம். மருந்து உருண்டை கொடுக்கிற அநுபானம் பழந் தண்ணீரில் கொடுக்க பித்தம் போகும். காடியில் கொடுக்க வாதம் போகும். மோரில் கொடுக்க பிற நீர்க் கோவை போம். தயிரில் கொடுக்க குன்மம் போம். பாலில் கொடுக்க குட்டம் போம். காடியில் கொடுக்க வாதம் போம். சர்க்கரையில் கொடுக்க பித்தம் சாந்தியாம். நெய்யில் கொள்ளச் சர்வ வியாதியும் போம். இந்த மருந்து ஆறு மாதம் கொள்ள பிணியுண்டாம்.

வயது நூறு வருஷமிருப்பார்கள். முடக் கோபம் போம். சண்ட நாள்வரைக்கு தாரை வதத்திக்கும். உறைய தெல்லாம் கொடுக்கும். சகல வியாதியும் கெருடனை கண்ட சர்பம் போலே சகல வியாதியும் ஓடிப் போம். இந்த அவுஷதம் முற்றிற்று.

கவுரி பாஷாணம்.1, மடல் தந்தம்.1 இது இரண்டுக்கும் சரியாக சுண்ணாம்பு கூட்டி பேய்க் மெட்டிச் சாற்றில் ஒரு ஜாமம் அரைத்து துவரை பிரமாணம் உருண்டை பண்ணி குளவை குப்புக்கு வாயால் எடுக்க வேண்டுகில் நற் சீரகத்தில் கொடுக்கவும். வாயால் எடுக்க மாட்டாதாருக்கு சுக்கு தண்ணீரில் கொடுக்கவும். சித்துக் கருசி காய்ச்சி கொடுக்கவும். மறுபடி இரண்டு நாள் கொடுத்து மூன்று நாள் பத்தியம் கொள்ளவும்.

(வேறு) <u>குன்னி பதாப் பாரவம்:-</u>

கெந்தகம்.1, பொன்னரி தாரம்.1, இரதம்.1, நாபி.1, மனோசிலை.1 வெங்காரம்.1, சாதிலிங்கம்.1, எலுமிச்சம் பழச் சாற்றில் 1 நாள் அரைக்கவும்.

கொடி வேலி கசாயத்தில் ஒரு நாள் அரைத்து இஞ்சி சாற்றில் ஒரு நாள் அரைத்து உருந்து பிரமாணம் உருண்டை பண்ணி விடவும். இது எப்படி யெற்றல் விபரம் அறியவும். நிழலில் உலர்த்தி அனுப்பானத்துடன் கொடுக்க ஜன்னி முதலான வியாதிகள் தீரும்.

அநுபானம்:

ஜன்னிக்கு நொச்சிக் கொழுந்து, சுக்கு, மிளகு, திப்பிலி, வெள்ளுள்ளி, கூட்டி கொடுக்கவும். பஞ்ச லோக கசாயம் வைத்து பலப் பொடி, இந்துப்பு, திப்பிலி, நற்சீரகம் பெருங்காயம் கூட்டி கொடுக்கவும். தச மூலக் கசாயத்திலும் கொடுக்க இந்தப் படி அனுப்பானத்துடன் கொடுக்கவும்..

தாக சுரம், நஞ்சம், சிவப் பிரமம், சிந்தாமணிக் குளிகை:-

தாக சுரத்துக்கு பச்சை நாபி, .1, சாதிலிங்கம்.2, வெங்காரம்.3, இந்த மருந்து மூன்றுக்கும் சரி நிறை நேர்வாளம் கூட்டி அரைத்து காதட்டு பிரமாணம் உருண்டை செய்து நெய்யில் ஒரு குளிகை கொடுக்க வயிறு கழியும். மிக கழிஞ்சால் சிறு கஞ்சி கொடுக்கவும். மீறி கழிஞ்சால் காலிவக் கொழுந்தன்னம் நிற்கும்.

வேறு:-

பாதரசம், கெந்தகம், அரிதாரம், நாபி, நீர் விஷம், குருபி, வெங்காரம், அக்கிலா காரம், திரிபலம், திரிகடுகு, இதுவைந்தொரு நாள் அரைத்து உழுந்தப் பிரமாணம் உருண்டை பண்ணி நிழல் உலர்த்தாக உலர்த்தி பூசை பண்ணி சிமிழில் வைத்து கொண்டு இதுக்கு அநுபானம்.

சுரத்துக்கு நெய்யில் கொடுக்கவும். தேனில் கொடுக்கவும். சர்வ சுரத்துக்கும் சர்வ வியாதிக்கும் குளிர் சுரத்துக்கும் கையாந்த கரை சாற்றில் கொடுக்கவும். உஷ்ண சுரத்துக்கு வெந்நீரில் கொடுக்கவும். குன்மத்துக்கு பசுவின் கோமயத்தில் கொடுக்கவும். வாய் விளங்கம், நாயுருவிச் சாறு, கற்றாழை சாறு, ஆமரியில் கொடுக்க பஞ்ச குன்மமும் தீரும். வெகு மூத்திரத்துக்கு சுக்கு, கருங்காலி பிசின், சக்கரை கூட்டி கொடுக்கவும். மூத்திர கிரிச்சுக்கு, காஞ்சரட்டைச் சாறில் கொடுக்கவும். நெருஞ்சி வேர் சாற்றில் கொடுக்கவும். நீர் முறிய பாசனத்தின் நீரில் கொடுக்கவும். இரத்த பிரமியத்துக்கு செம்மறி ஆட்டு நெய்யில் கொடுக்க சுக்கில பிரமியத்துக்கு வெள்ளாட்டுப் பாலில் கொடுக்கவும். கல்லெரிப்புக்கு வாழை இலைச் சாற்றில் கொடுக்கவும். பிள்ளை யில்லாதாருக்குப் பிள்ளை உண்டாம். உடன் பிரமியத்துக்கு செம்மறி ஆட்டு நெய்யில் கொடுக்கவும். நிச்சன பிரமியத்துக்கு அிஞ்சி இது சாற்றில் கொடுக்கவும். உட்டண மறி கிரமிக்கும் பேரிச்சம் பழச் சாற்றில் கொடுக்கவும்.

விரோசனத்துக்கு விளக் கெண்ணெயில் கொடுக்கவும். மூல வியாதிக்கு சாதிக்காய் சாதிபத்திரி, கிராம்பு கூட்டிக் கொடுக்கவும். கிராணிக்கு வில்வப் பழச் சாற்றில் கொடுக்கவும். சங்கிரணிக்கு மோரில் கொடுக்கவும். ரத்த கிராணிக்கு எலுமிச்சம் பழச் சாற்றில் கொடுக்கவும். மலம் கட்டிக் கொண்டால் சாதிக்காய் சாற்றில் கொடுக்கவும். பயித்தியத்துக்கு கோமயத்தில் கொடுக்கவும். ரெத்த பயித்தியத்துக்கு தாம்பரம் கூட்டிக் கையாந்த கரைச் சாற்றில் கொடுக்கவும். பயித்தியத்துக்கு சக சுரயில் கொடுக்கவும் வாய்வு, பைத்தியமும் கூடினதுக்கு குங்குமப் பூச் சாற்றில் நசியம் பண்ணி கசாயம் கட்டி சர்க்கரையும் கூட்டி உள்ளுக்கு கொடுக்கவும். பெரிய விக்கலுக்கு நெல்லிக்காய் சாற்றில் கொடுக்கவும். குமித் தாமரை சாற்றில் கொடுக்கவும். உடம்பில் புண்ணுக்கு மூன்று கழஞ்சி ஓமம் கூட்டி கொடுக்கவும். கூட்டிக் குருக்கலுக்கு இரண்டு விராகனிடை சீரகம் தேன் கூட்டிக் கொடுக்கவும். பசி எடுக்க காஞ்சுரட்டை வேர் சாற்றில் கொடுக்கவும். புண்ணுக்கு கோமயத்தில் கொடுக்கவும். அஜீரணத்துக்கு பூசனிக்காய் சாற்றில் கொடுக்கவும். குட்டத்துக்கு தாம்பூர பற்பம் கூட்டி கொடுக்கவும். பயித்திய குட்டத்துக்கு நாற்பது நாள் இஞ்சி சாற்றில் கொடுக்கவும். கடுந் தாகத்துக்கு வெல்லத்தில் கொடுக்கவும். பூத சுரத்துக்கு பாகல் சாற்றில் கொடுக்கவும். வயிற்று நோக்காட்டுக்கு வசம்பில் கொடுக்கவும். வயிற்று குத்துக்கு வெள்ளைக் கத்திரிக்காய்ச் சாற்றில் கொடுக்கவும்

உடம்பில் எரிப்புக்கு பேரிச்சம் பழத்தில் கொடுக்கவும். மருந்தீட்டுக்கும் இச்சாற்றில் கொடுக்கவும். தயிரான மில்லாதவனுக்கு பிரமிச் சாத்தில் கொடுக்கவும். பாம்பு விஷத்துக்கு இஞ்சிச் சாத்திலாதல், எலுமிச்சம் பழச் சாத்திலாதல் கொடுக்க விஷம் மீளும். உடம்பு அவலை யிடுவதற்கு நஞ்சு தின்ற பேர்களுக்கு முந்திரிகை பழத்தில் கொடுக்கவும். காணுக் கடிக்கு நெல்லிக்காய் ரசத்தில் கொடுக்கவும். சூழ் வாதத்துக்கு கையாந்த கரைச் சாற்றில் நொச்சி இலைச் சாற்றிலாதல் கொடுக்கவும். அடைட்ட வாய்வுக்கு புளியம் பழத்தில் கொடுக்கவும். மிடி வாதத்துக்கு முந்திரிகை பழம் செந்திருக்கம் பூச் சாற்றில் கொடுக்கவும். வாதத்துக்கு கோமியத்தில் கொடுக்கவும். ஜன்னி வாதத்துக்கு குன்றி யிலைச் சாற்றில் கொடுக்கவும். வருத்தத்து நோக்காட்டுக்கு வாகை பட்டைச் சாற்றில் கொடுக்கவும். தலை நோக்காட்டுக்கு குன்றி இலை சமூலமும் அவைத்து சாற்றில் கொடுக்கவும். உடம்பு குத்து இருந்தால் வெந்நீரில் கொடுக்கவும். அம்மாம் பச்சை அரிசி சாத்தில் நாற்பத்தெட்டு நாள் கொண்டு கைப்பு, புளிப்பும் விட்டுச் சேவிக்க நரை மாறும். பாச்சி தண்ணீரில் உரைத்த படர் தாமரை போம். கடி விஷம் போம். சிரங்கு பிற்சேக்கு உள்ளுக்கொடுக்க சிரங்கு பிள்ளை விஷம் போம். பெரும் பூசனிக்காய் சாறும் கொடுக்கவும். மாலை கண்ணுக்கு கையாந்த கரை சாற்றில் அஞ்சனம் இடவும். நேத்திர ரோகத்துக்கு அக்கலா காரம் கூட்டிக் கொடுக்கவும். காசத்துக்கு திரி கடுகு கூட்டி கொடுக்கவும். ஜன்னிக்கு நொச்சி வேர் சாறும் திப்பிலியும் கூட்டிக் கொடுக்கவும். காக்கா வலிப்புக்கு நெய் கொட்டாம் வேர் சாறும் எலுமிச்சம் பழச் சாறும் கூட்டி கொடுத்து நசியமும் பண்ண தீரும். வெப்பாலை பட்டை கையாந்த கரை சாத்திலும் நசியம் பண்ண குழந்தைக்கு வலிப்பு தீரும். இந்தப் படி தன்மய கிரமம் செய்ய சர்வ வியாதியும் குணமாம்.

<u>அகோர அஸ்திர குளிகை:-</u>

எலி பாஷாணம் .1, தாளி பற்பம்.1, கெவுரி பாஷாணம் 2 நாபி நாலு இரதம் நாலு இவை எல்லாம் விராகனிடை தனிக் கல்லில் வைத்து நொச்சிச் சாற்றில் ஒரு நாள் துளசி சாற்றில் ஒரு நாள் இப்படி இரண்டு நாள் அரைத்து எள்ளு பிரமாணம் உருண்டை பண்ணி பஞ்ச லோக கசாயத்தில் கொடுக்க பதி மூன்று வகை ஜன்னியும் தீரும். எட்டு வகை சுரத்துக்கும் தேசு மூலிக் கசாயத்தில் கொடுக்க தீரும். சர்வ வியாதியும் தீரும். அகோர அஸ்திர குளிகை முற்றிற்று.

<u>பாசு பதாஸ்திர குளிகை:-</u>

மாங்கிஷ வேதி ஒன்று, இரதம் ஒன்று, தாம்பர பற்பம் ஒன்று, கெந்தகம் ஒன்று, ரேதகம் ஒன்று, நாபி ஒன்று இவை விராகனிடை எருக்கிலைச் சாறு வார்த்து ஏழு நாள் அரைத்து உளுந்து பிரமாணம் உருண்டை பண்ணி திரிகடுகும், வெள்ளுள்ளி கூட்டி பஞ்ச கோல கசாயத்தில் கொடுக்க பதிமூன்று வகை ஜன்னியும் தீரும். திரி தோஷமும், எட்டு வகை சுரமும் பஞ்ச குன்மமும் சர்வ வியாதியும் தீரும். சத்தியமு சொன்னோம். கை கண்டது.

<u>இரசம் செந்தூரிக்கிற வகை:-</u>

இரசம், கெந்தகம் இவை இரண்டும் சரியாக கொண்டு கற்றாழம் சாறு வார்த்து அரைத்து ஒரு ஜாமம் மத்திச்சு பாயவே பண்ணி சற்றே உதிர பதமான வாறே எடுத்து காசிக் குப்பியில் போட்டு ஏழு சீலை மண் செய்து புதுச் சட்டியில் குப்பியை வைத்து சுற்றி வர உப்பைக் கட்டி உப்பு மேல் மணலை கட்டி ஐந்து சாமம் எரித்து பார்க்க செந்தூரமாம். இச் செந்தூரத்துக்கு கொடுக்கிற அநுபானம் -------- தேன், திப்பிலி, சர்க்கரை நெய்யில் அநுபானம் இட்டு கொடுக்க சகல வாதமும் சகல ஜன்னியும் சகல பயித்தியமும் சர்வசிரமும் அநுப்பானத்துடன் கொடுக்க சகல வியாதியும் தீரும். இதற்கு பத்தியம் கைப்பு, புளிப்புந் தவிர்க்கவும். பாலும் சோறும் உண்வும்.

<u>வேறு: பிரதாபலங்கேசுரம்:-</u>

பிரதாபலங்கேசுரம் இரதம் 1, கெந்தகம்.1, அபிரக செந்தூரம்.1, மிளகு.3, லோகம்.7, சங்கு அவ்வோடு பலம்.19 நாபி.அ இவை விராகனிடை குழிக் கல்லில் இட்டு இஞ்சிச் சாற்றில் நாலு ஜாமம் அரைத்து கடலைப் பிரமாணம் குளிகை செய்து நிழலில் உலர்த்தி

கொடுக்கிற வகை அகோரமான ஜன்னிக்கு பஞ்ச கோலக் கசாயத்தில் கொடுக்கவும். இஞ்சிச் சாற்றில் கொடுக்க தேசு மூலக் கசாயத்தில் அநுப்பானமாகக் கொடுக்கவும். வெங்காரம் திப்பிலி வெள்ளுள்ளி தயிலம், கடுகுரோகணி, இந்துப்பு, கொத்தமல்லி, சுக்கு, மிளகு, பெருங்காய இவை எல்லாம் ஜன்னியான் பேருக்கு கூட்டி கொடுக்க எந்த ஜன்னியும் தீரும். இந்த மருந்து முற்றம்.

வேறு: சீதாங்க ரசம்:-

வெள்ளை பாஷாணம், காந்தம், கெந்தகம், இம் மூன்றும் கூட்டி மிதிப் பாகலச் சாறு வார்த்து மிதிப் பகல் புளிச் சாரம் மூன்றும் சமம் அரைத்து நரிப் பயறு பிரமாணம் குளிகை செய்து நிழலில் உலர்த்தி வைத்து குளிர் சுரத்துக்கு முலைப் பாலில் நீச்சு தண்ணீரில் பச்சை அரிசி கழுநீரில் அருந்த அநுப் பானத்துடன் கொடுக்கவும். பயித்திய காத்துக்கு திரி கடுகு கூட்டிக் கொடுக்கவும். இதற்கு பத்தியம் கைப்பு, புளிப்பு தள்ளி விடவும்.

(வேறு) அத்தஜுரீஸ்வரக் குளிகை:-

பாதரசம் ஒன்று, வெள்ளு மனோசிலை கெவுரி பாஷாணம் இது நாலும் கூட்டி பொடி செய்து ஒரு சீலையில் முடிந்து வெள்ளறுகம் வேர்ச் சாறு ஒரு படி சாத்தில் லோலாந்திரமாக கட்டி அந்தச் சாறு சுவற வெந்து எடுத்து சூரணம் பண்ணி அந்த சூரணம் வைத்து ஒரு புறம் காதில் ஊத ஒரு புறத்தில் காச்சல் விடும். இரண்டுபுறமும் ஊத காச்சல் நிற்கும்.

(வேறு) விரலிக்கிர மாசம் பிரதாப மண்டரசம்:-

பாதரசம், கெந்தகம், வெங்காரம் எட்டிக் கொட்டை, சயிந்த லவணம், கொடிவேலி வேர் பெருங்காயம் இது வெல்லாம் சரியாக நிறுத்து சீலையில் கட்டி டோளாந்திரமாக கட்டி தண்ணீரில் வேக வைத்து மத்தினில் அரைத்து குன்றி பிரமாணம் உருண்டை பண்ணி நிழலில் உலர்த்தி அநுபானமாக கொடுக்க ----ஜன்னி வாத சுரம் இது வெல்லாம் தீரும.

(வேறு) பிரதாப மண்ட ரசம் நாபி. 1, வெங்காரம். 2, நேர்வாளம், சாதிலிங்கம் 4, இவை விராகனிடை குழிக் கல்லில் போட்டு சிவனார் வேர் கசாயம் வைத்துக் கொண்டு இதில் அரைத்து குன்றி பிரமாணம் உருண்டை ஒரு உருண்டை திப்பிலி சர்க்கரை அநுபானம் கூட்டி கொடுக்க மூன்று தரம் விரேசனமாம். காச்சல் விடும். இதற்கு பத்தியம் கைப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

(வேறு)

பேய்ப் பீர்க்கஞ் சாறு படி இரண்டு, வெள் ளாட்டுப் பால் படி இரண்டு, கையாந்தகரைச் சாறு படி இரண்டு, நெய் படி ஒன்று, விளக்கெண்ணை படி ஒன்று, நல்லெண்ணை படி அரை இது மூன்றும் கூட்டி காயிற போது இதுக்கு மற்ற பொடி எல்லாம் சிறும்பு லவங்கப் பத்திரி, தான்றிக்காய், நெல்லிக்காய், கடுக்காய், செங்கழு நீர், கோஷ்டம், அதிமதுரப் பட்டை, இலாமிச்சம் வேர், வெட்டி வேர், குடப் பாலை வேர், நற் சந்தனம், அகில் சந்தனம், மஞ்சட்டி சதகுப்பை மஞ்சள், மரமஞ்சள், இவை சமனாக கூட்டி பொடி செய்து வேகிற தைலத்தில் போட்டு சிறுக எரித்து மெழுகு பதம் ஆனவாறே இறக்கி பூஜை பண்ணி எண்ணெய் தானிய புடத்தில் வைத்து வைத்து எடுத்துத் தலையில் தப்பி முழுக இதற்கு தீரும் வியாதிகள் கண் குத்தி நோகிறது உச்சியை குத்தி நோகிறது, காதில் நோகிறது இடுப்பில் நோகிறது இது வெல்லாம் தீரும்.

தாள கேஸ்வர குளிகை:-

கெவுரி பாஷாணம், பொன்னரி தாரம் இது இரண்டும் புடம் போடுகிற வகை சுத்தி பண்ணி பாஷாணம் எண்ணெயில் டோளாந்திரமாக் கட்டி வைத்து பாலில் ஒரு க்கால் வெந்து பொன்னரி தாரம் சுண்ணாம்பில் வைத்து இரண்டும் கூட்டி புதுச் சுண்ணாம்பு ஒரு கொட்டை பாக்களவு கூட்டி வேலிப் பருத்தி சாற்றில் அரைத்து சோள அரிசிப்பிரமாணம் குளிகை செய்து இதுக்கு அநுபானம் இதில் குளிகை ஒன்று, மிளகு ஐந்து தின்று வெந்நீர் குடிக்கவும். பச்சை பயறும் அரிசியும் கஞ்சி காய்ச்சி குடிக்க குளிர் வெதுப்பு மாறும். கைப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

(வேறு) ரச கர்ப்பூரம் பாசம் படி.க நவாச்சாரம் ௰க, காலிக் கல்.௰உ, இந்துப்பு.௰ங,
இது எல்லாம் குளிகை கல்லில் இட்டு அரைத்து எலுமிச்சம் பழச் சாறு விட்டு அரைத்து உருண்டை
செய்து இந்த உருண்டையை நடு சட்டியில் வைத்து மேல் சட்டி.1, வைத்து சீலை மண் செய்து
அடுப்பில் வைத்து எட்டு ஜாமம் எரித்து சாங்கசி தளமாக ஆனப் பிறகு விநயகர் பூஜை
செய்து இறக்காமல் சட்டியில் பற்றினது பரம் சீவி எடுத்து சிமிளில் அடைத்து கொள்ளவும்.
நல்ல வெல்லத்தில் சர்க்கரையில் ஆதல் அரை பணவிடை பல்லில் படாமல் முழுங்குவது. இதக்கு
தீரும் வியாதி அரோசிகம், சீக்கிரணி தோஷம், மந்தாரக்கினி, நாசி திப்பனம், பாரிச் குனம்
உதர் வாதம், இருந்து ரோகம் அசிலக் ரச கற்பூர மிதங்கிய மான குஷ் விரசன் மருநதக்கு பத்தி
யம் பசுவின் பால் சர்க்கரை நல்லவெல்லம் கூட்டவும். கஞ்சியும் சோறும் குடிக்கவும். முப்பது
நாள் இந்தப் படி கொள்ளவம். இதற்கு பத்தியம் கைப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

(வேறு) கற்பூர ரசாயனம்:-

ஏலம், சடாமாஞ்சி, கிராம்பு, திரிகடுகு, முத்த காசு, பச்சை கற்பூரம், கொத்த
மல்லிகை, பேரீச்சம் பழம், தாளிச பத்திரி அதிமதுரம், சுநந்தப் போளம், வெள்ளை
போளம், தாமரைக் கிழங்கு, முந்திரிகை பழம், நல்ல சந்தனம், செங்கழுநீர், கோஷ்டம்,
சிறநாகப்பூ, கைை நீர், ஜாதிப் பத்திரி, நெருஞ்சி வேர், சாரணை வேர், நிலப் பனம் கிழங்கு,
அமுக்கிரா வேர், வேப்பந் தழை இது வெல்லாம் சமமாக இடித்து இதுக்கு சரியாக சர்க்கரை
கூட்டி கொள்ளவும். நாலு காசிடை நெய்யில் குழைத்துக் கொள்ள பாண்டு உடம்பு உலர்ந்து
போரது பித்தம் யோனியில் கமல முத்திரங்கள் உஷ்ணம் விக்கல் மலபந்தம், ஊமத்தம் இந்த
ரசாயனம் கொள்ள ஆசி பட வியாதிகள் எல்லாம் தீரும்.

(வேறு) சுராங்கிஷ குளிகை:-

பாதரசம்.1, கெந்தகம்.2, வெங்காரம், பச்சை நாபி, திப்பிலி, மிளகு, நேர்
வாளம் இது வெல்லாம் சூரணம் பண்ணி முக்கால் பணவிடை வெந்நீரில் கொடுக்க இதுக்கு வெறும்
கஞ்சி குடிக்கவும். கைப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

(வேறு) இரசம்.க, நாபி.க, கெந்தகம்.க, ஜாதிக்காய்.ரு இது வெல்லாம் சூரணம் செய்து
திப்பிலி மூன்று விராகனிடை கூட்டிக் கொண்டு இஞ்சி சாற்றிலாகுதல் வெற்றிலைச் சாற்றிலாகுதல்
அரைத்து குன்றி பிரமாணம் உருண்டை செய்து கொண்டு இஞ்சி சாற்றில் கொடுக்க சிர வாய்வு
சீத ஜுரம், ஜன்னி வாத சுரம், சொரியாக் குணம், விஷ சுரம், மந்தாக்கினி இவை எல்லாம்
தீரும். பத்தியம் கைப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

நசியம்:-

கோரைக் கிழங்கு எவாச்சாரமும் சூரணம் பண்ணி தேனில் கூட்டி நசியம் பண்ண சுரம் விடும்.

சலகுலாங்கிஷம்:-

பெருங்காயம் 1 திகடை 2 திப்பிலி.3 சுக்கு.4, ஓமம்.5, கடுக்காய்.6, கொடி
வேலி வேர்.7, செங்கழுநீர் கோஷ்டம் இவை தனித் தனியே சூரணம் பண்ணி நிறுத்து சாரித்து
வெருகடி பிரமாணம் வெந்நீரில் கொள்ள சர்வ சூலக் கட்டும் தீரும்.

வேறு. அமிர்த சர்க்கரை:-

சீந்திச் சர்க்கரை, குடசப் பாலை வேர் பட்டை, நற்சீரகம், எலம், லவங்கம்,
இலவுங்கப் பத்திரி, லவங்கப் பட்டை, செங்கழுனீர் கோஷ்டம், கொத்தமல்லிகை,
நெல்லிப் பருப்பு, ரேணுகம், குங்குமப்பூ, சிறநாகப்பூ, பெரு நாகப்பூ, கத்திரி தகரம்,
கற்பூரம், ஜாதிக்காய், சாதிபத்திரி, நல்ல சந்தனம், திரிகடுகு அமுக்கிரா வேர்,
நிலைப் பனை, தண்ணீர் விட்டான் கிழங்கு, கற்கடக சிங்கி, தக்கோலம் தருஞ்சீரகம் நெல்
பொரி, இது வெல்லாம் சமன் கொண்டு சூரணம் பண்ணி இதற்கு சரியாக சர்க்கரை கூட்டி
சாரித்து வெருகடிப் பிரமாணம் தேனுடன் ஆகுதல் பசுவின் நெய்யாகுதல் கொள்ள இதுக்கு
தீரும் வியாதி க்ஷயம், மாந்த பித்தம், கை கால் எரிகிறது சேற்ம மிருபத்தொரு பிரமியங்
கள் பாண்டுவம் தாப சுரம் அங்க தாப சுரம் இவை எல்லாம் அமுதச் சர்க்கரையில் தீரும்.

<u>ஏலாதி சூரணம்:-</u> 21.3.63.

ஏலம், லவங்கப் பட்டை, முந்திரிகைப் பழம், திப்பிலி, இச் நாலும் வகைக்கு அரைப் பலம் சர்க்கரை த்வ திராகைஷ அதிமதுரம் பேரிச்சம் பழம் இவை நாலும் நாலு பலம் இது வெல்லாம் சூரணம் பண்ணி தேனில் அரைத்து கடுக்காய் பிரமாணம் குளிகை பண்ணி இரண்டு தேச காலமும் கொள்ள பித்த சொரித வாய்வு காச்சு வாதம் அரோசிகம், வாந்தி மார்பில் நோவு, ரெத்தபித்தம், பிரமியம் இடருள்ள சுரம் இவை எல்லாம் தீரும்.

<u>பஞ்ச பாண ரசம்:-</u>

வெங்காரம், கொடிவேலி, தாளிச பத்திரி, பச்சை நாபி, திரிகடுகு, நேர் வாளம், தானிக்காய், நெல்லி முள்ளி, கடுக்காய். இந்துப்பு செங்கழநீர் கோஷ்டம், இவை சமன் சூரணம் பண்ணி நெல்லிக்காய் சாறு வார்த்து அரைத்து குன்றிப் பிரமாணம் குளிகை செய்து உலர்த்தி தேனில் கொள்ள உஷ்ணம். இதிகமானல் சர்க்கரையில் கொடுக்கவும். தேனில் கொடுக்க நீர் பிரமியம் வாய்வு ~~கொள்ளுவதற்கு புளிப்பு ஆகாது.~~ / உடம்பு வறட்சி, அங்கவாதங்கள், கன்டிப்பட்டம், இதுபோன்ற வியாதியும் தீரும். தேனில் கொள்ளுவதற்கு புளிப்பு ஆகாது.

<u>மகுதி ரசம் விரேசனம்:-</u>

சாதிலிங்கம்.1, வெங்காரம்.2, திரிகடுகு.3, இந்துப்பு.1, காக்கனும் வேர். வசம்பு.1, வெப்பாலை அரிசி.1, பெருங்காயம்.1, வாய் விளங்கம்.1, கெர்தகம்.1, குரசாணி ஓமம், எவாசாரம், சத்திச் சாரம் ஓமம் இந்த மருந்துக்குச் சரியாக நேர் வாளங் கட்டி கொண்டு இவை எல்லாம் கூட்டிக் கொண்டு எலுமிச்சம் பழச் சாறு வார்த்து அரைத்து ஒரு நாள் அரைத்து குன்றிப் பிரமாணம் குளிகை செய்து ஒரு உருண்டை க்கு கசாயத் தில் கொடுக்க விரேசனமாம். பின்பு மொருஞ் சோறும் கொடுக்கவும்.

<u>உதய மார்த்தாண்ட ரசம்:-</u>

ஜாதிலிங்கம்.1, நேர்வாளம்.4, நாபி.1, மிளகு.1, திப்பிலி.1, சுக்கு.1, ச கு பற்பம்.1 தேற்றான் கொட்டை.1, கடுக்காய்.1, ஆமணக்கம் வேர்.1, புங்கம் விரை. நீலாஞ்சனம்.1, மலைசிலை.1, இரசம்.1, சுத்தம் அரிசி.1, வெப்பம் விரை 1 மஞ்சள். மரமஞ்சள்.1, இந்தப்படி சமன் கொண்டு பொடி செய்து வெள்ளாட்டுப் பால் வார்த்து அரைத் து மெழுகு பதமானல் கடலை பிரமாணம் குளிகை செய்து அதில் இரண்டு உருண்டை பிடித்து மிளகும் வெல்லமும் கூட்டிக் கொள்ள வெந்நீரில் கொள்ள ஆமாத்திய விரேசனமாம். பஞ்ச குன்மும் நாலா சூலையும் தீரும். இஞ்சிச் சாற்றில் கொடுக்கவும். ஏக கசாயிக்க திரு திரு வாயிக்க திரியா விக்கச் சாத்து சிக்கம் சீத சுரம் மஉறா சுரம் விடும் பத்தியம் தயிர் அன்னமும் கூட்டவும். வியாதியை அனுசரித்து கொடுக்கவும்.

<u>வில்வாதி லேகியம்:-</u>

விரேசனம்.1, விளங்காயம் பலம்.ரு, இதின் வேர் பலம்.ரு இதை பதக்கு நீரில் விட்டு எட்டொன்றுக் காய்ச்சி சிறுகக் கசாயத்தில் மூன்று வருஉஷத்து வெல்லம் முப் பலம் போட்டு சற்றே பதம் செய்து இறக்கி இஞ்சி மிளகு, திப்பிலி, உழக்கு, செவ்வி யம் ஒரு சிறங்கை தாளிசப் பத்திரி, ஒரு பிடி, சிறநாகப்பூவு, பாதிப் பிடி, திப்பிலி மூலம் பலம். கொடி வேலி வேர் பலம். , ஏலம், லவங்கம், லவங்கப் பத்திரி, இவை இரண்டும் களஞ்சு அரை சீரகம் பலம் இவை பொடி செய்து லேகியத்தில் தூவி தேன் விட்டு பாகம் பண்ணி இறக்கின லேகியம் கொள்ளத் தீரும். தீரும் வியாதிகள் சகல சத்தியும், நெஞ்சில் நோவும் காமாலை மன்மம், சிக்க ஆரோசிகம், மூக்கு நீர் பாய்ச்சல், விக்கல் இரும்பல், கீரிப்புழு மேச்சல், மேல் இளைப்புபீலிகை குடல் வியாதி மூல வியாதி பாண்டு ரோகம் இவை எல்லாம் போம்.

<u>சோப நிதானம்:-</u>

பித்த சோபம், சிலேற்ம சோபம், வாத பித்த சோபம், பித்த சிலேற்ம சோபம் சிலேற்றும வாத சோபம், சன்னி வாத சோபம் என்ற அபிக்காறத்திலுண்டான சோபம். விஷத்திஞல் உண்டான சோபம் அதவ மன்றில் சர்வாங்க

ஏகாங்க சோபம் என்றும் உசத்தி என்றும், அதல மென்றும் மூன்று வகையாக வடிவே எழுந்து இருக்கும் இந்த எண்பது வகை பட்ட வீக்க மானது சாத்திய மென்றும் அசாத்திய மென்றும் இரண்டு வகைப் பட்டு இருக்கும் இதில் அசாத்தியம் எது வென்னில் அதற்றி ஆருச்சி சத்தி விக்கல், வயிறு பொருமல் கழிச்சல் இவை முதலாக அனேகம் உபத்திரங்கள்கூடி காலிலே. வீங்கினால் புருஷனைக் கொல்லும். முகத்திலும் வயிற்றிலும் குய்ய தனத்திலும் வீக்க முண்டானால் வநரிகளைக் கொல்லும் என்ற வாறு பிரிற பனி நீர் பாபத்து சத்தியும் அதிசாரமும் மேலிளைப்பு வீருதிற் கூடியிருக்குற வீக்கமும் வீக்கத்தின் பின் சுரமும் அதிசாரமும் இசு விட்ட போது உண்டான வீக்கமும் அசாத்தியம் என்றவாறு யாதொரு வனுக்கும் அரையிலே காலிலே கண்டத்திலே வீக்க மான பேர்க்கு அசாத்திய மென்றும் விட கடவான் என்றவாறு,

(வேறு)

- சுக்கு, சாறணை வேர், ஆமணக்கம் வேர், பஞ்ச மூலக் கசாயத்தில் வெள்ள கொள்ள ஆசனத்தோடே கூடி வந்த வீக்கந் தீரு மென்றவாறு,

சாறணை வேர், தேவதாரம் கடுக்காய், சுக்கு, கசாயங் கொடுக்க வாத சோபம் தீரும்.

பேய்ப்புடல், கம்பந்திராய் அதிமதுரம் கடுகு திமிட்டி வேர், திப்பிலி இக் கசாயத்தில் நெய் விட்டு செவிக்க பித்த சோபம் அதினால் உண்டான சோபம் தண்ணீர் தாகம் உழன்று வருகை தீரும்,

நாரை கொத்தான முதலானதுகளிலே பண்ணின எண்ணை செவிக சச்சே சுரம் சோபம் தீரும்.

வெல்லம் கடுக்காயும் களிப் பாக்கு ஆகுதல் சாறணை வேர் ஆகுதல் இவைகளிலிட்ட கசாயங்களாகுதல் சேவிக்க சோபந் தீரும்.

இஞ்சி, நெருஞ்சி, கடுக்காய், தேவதாரம் சார் முரி விழி இது கடுக்காய் கசாயமாகுதல் செவிக்கத் தீரும்.

செவ்வியம் சுக்கு, திப்பிலி, நெருஞ்சி, அத்தி கொடிவேலி வேர் இந்த கசாயம் சேவிக்க முதலான வலி அக்கினி மாந்தியமந் தீரும்.

நாவலை நீர் முள்ளி பருத்தியிலை இது மூன்றில் மருக் கசாயத்தில் தண்ணீர் செய்விக்க சர்வ சோபனந் தீரும்.

ஆனை சாரணை வேர் சுக்குச் சரி பாலில் கசாயமிட்டு செய்விக்க வீக்க மாறும்.

காராட்டுப் பாலில் நாவளம் பழத்தை வேக வைத்து உப்பு நெய்யும் விட்டு பாகம் பண்ணிச் செய்விக்க வீக்கந் தீரும்.

அசமதாகம் பங்கம் பாலை முத்தக் காசு பஞ்ச கோலம் சிறுவழுதிலை வேர், மஞ்சள் அரைத்துச் சாறு கூட்டித் தண்ணீரில் செவிக்க அல்லது நிலவேம்பு கசாயத்தில் தண்ணீரில் செய்விக்க சர்வாங்க சோபமும் தீரும்.

அசமதாகம், பங்கம் பாலை, முதந காசு, பஞ்ச கோலம், சிறுவழுதிலை வேர், மஞ்சள் அரைத்துச் சாறு கூட்டித் தண்ணீரில் செவிக்க அல்லது நிலவேம்பு சுக்கு மிளகு கசாயத்தில் செவிக்க குறி தோஷத்திலுண்டான வீக்கந் தீரும்.

சுக்கு, அதிவிடையம், தேவதாரம், விழலரிசி, துவரை, மிளகு இவை யாகுதல், கடுக்காய், சுக்கு, தேவதாரம், சாறணை இவையாகுதல், சுக்கு, தேவதாரம் இவையாகுதல் கசாயமிட்டு அசனத்துக்கு முன்னே சவைக்கத் தீரும் என்றவாறு.

<u>சீத பித்த நிதானம்</u>:-

சீத பித்தமாவது பித்தமும் சேற்றமமும் கைக்க கோவித்து கூட்டிக் கொண்டு சரீர மெங்கும் ரத்தம் போலே சிவந்து வட்டப் பட்டு நரம்பு புடைத்து உடம்பு குளிர்ந்திருக்கும். இது சீத பித்தம் என்றும் பேர், ஆம்பலப் பித்த மென்றும் பேர். இதற்கு நெட்டிக் கோரைக் கிழங்கும் சந்தனம் முதத சாசு வேப்பம் பட்டை வெட்பாலை யரிசி அதிமதுரம் மஞ்சள் குக்கில் கசாயத்துக்கு சீத பித்தம் தீரும். நினைவு மத்தியும் போகும் என்றவாறு.

மஞ்சள் சந்தனம், கொட்டம் விலாயிச்சை வேர் அரைத்துக் கொடுக்க பூச்சித பித்தம்

தீ...ர

துளசி இலை, என்று ஆத்தி இலை விலாமிச்சை அரைத்துக் கொடுக்கப் பூச்சித பித்தம் தீரும்.

இந்துப்பை பொடி செய்து சிறு சூட்டு நெய்யில் கலக்கி அப்பியங்கம் பண்ண பூச்சித பித்தம் தீரும்.

கோட்ட மிலவம் பிசின் பங்கம் பாலை மிளகு தேவதார மரைத்து என்ணெயில் கலக்கி வெய்யிலில் காய வைத்து மேலே பூச சீத பித்தம் தீரும் என்றவாறு,

இவை முற்றும்.

<u>விஷபாக நிதானம்.</u>

முன் சொன்ன சோபத்துக்கு வாத விஷ பாகம் என்றும் பித்த சோப மென்றும் சிலேற்றும சோப மென்றும் மூன்று வகைப்படி இருக்கும் என்றவாறு.

ஒன்றுக் கொன்று இதிலே அகுவடிவு மாசிலேற்றுமத் தாலும் வாய்வுமு முண்டான விஷ பாக்கிரந்தி திமலை போலே வடிவை யுண்டாயிருக்கும்.

சிலேற்றுமத் தாலும் பித்தத் தாலும் உண்டான விஷ பாகம் மாங்கிஷம் போலே வடிவா இருக்கும். இதுக்குப் பொத்த மென்கிற விஷபாகம் என்றவாறு.

திரி தோஷங்களினுடைய வெற்றில் உண்டான விஷபாகம் அசாத்தியங்களாயும் இவ்விரண்டாலே உண்டானதுகள் உபத்திர சாத்தியாங்களாயிருக்கு மென்றவாறு.

ஐன்லி பாதத்திலே உண்டான விஷபாகம் அசாத்தியமாய் இருக்கும். இதுக்கு சிறு நரம்புகள் நெடு நரம்புகள் எல்லாம் நஞ்சு மாங்கிஷம் போலே புழகி வெடிப் புண்ணும் குருமல் நிறம் வெற்றி சுரம் மூர்ச்சை முறை சுழன்று வருகை ஆதாரம் உலந்துருக்கை நெஞ்சு நோக்காடு உடல் சொருகை அதிசாரம், இதுமுடனே கூடின விஷ பாகம் அசாத்தியம் என்வாறு நாக சுரம் ஊத்தி பாபரென்றவருகையி முண்டாகுல் விஷ பாகம் என்றவா உபாசம் பண்ணி விக்கவும். அக்குஷமாக குசை சத்ததி பண்ணி விக்க விரோசனம் பண்ணி விக்கை என்றவாறு சத்தி பண்ணி வித்தால் விஷபாகத் தீரும்.

அதிமதுரம் கடுக்காய் இவை கசாயம் இட்டு கொடுக்கவும். அல்லது சிவதை வேர பொடி பண்ணி பாலாகுதல் நெய்யாகுதல் கூட்டிக் கொடுக்க விரோசனமாம். இது பித்த சிலேற்றும பாண்டு போமாத்தம் வாங்க கடுவான் உட்டை விடக் கடவன்.

சிறுகாஞ் சொறி வேர், பற்படாகம், சீந்தி தண்டு, சுக்கு இக் கசாயம் தாகம் விஷபாகம் போம் என்றவாறு.

ஆடாதோடை கருங்காலி பேய்ப்புடல் வேப்பம் பட்டை சீந்தித் தண்டு கடுக்காய் இக் கசாயத்தில் தேன் நெய் விட்டு செவிக்கா விஷ பாகம் போம்.

நன்னாரி, நெல்லி, விலாமிச்சம், பேய்ப் புடல், சுக்கு, சிறுகாஞ் சொறி, முத்த காசு இக் கசாயம் வயிற்றுக் களிச்சல் தாகம் சுரம் விஷ பாகம் போம்.

நெல்லி, சிவதை வேர், தாலிக்காய், நன்னாரி, சுக்கு, வேப்பம் பட்டை, இக் கசாத்தில் வெ----த்து செவிக்க விஷ பாகம் ஊற்றி சுவாசம் வயிற்று வீக்கம் இவை போகும். என்றவா .

நன்னாரி, அதிமதுரம் இவை பச்சைப் பாலில் அரைத்துச் சேவிக்க அல்லது சீனி சர்க்கரையில் வெண்ணெயில் கூட்டிச் சேவிக்க இதை நெய்யிலாகுதல் சேவிக்க சிறிது நாளிலே விஷபாகம், தண்ணீர், தாகம், வெதுப்பு, வுமலிகம் இவை போம் என்றவாறு.

நற்பலா, முகிள், தாமரைப்பூ, இலாமிச்சம் வேர், அதிமதுரம் அரைத்துப் பூச பித்தத்தினுல் உண்டான விஷ பாகம் தீரும்.

வெட்டி வேர் விலாமிச்சை சந்தனம் இந்துப்பு முத்த அரைத்து பாலில் கலக்கி நெய்யும் விட்டுப் பூச விஷ பாகம் போம்.

(வேறு) வாகை, அதிமதுரம், சிறு குறிஞ்சா, சந்தனம், ஏலம், மஞ்சிஷ்டம், மஞ்சள், கோஷ்டம் அரைத்து நெய்யில் குழைத்துப் பூச விஷ பாகம் உஷ்ணம் சுரம் விக்கலும் தீரும்.

<u>விஷ பாகத்தின் சோதனை</u> :-

விஷ பாகத்தின் சோதனை:-

கசாயமுங் கொடுத்து ரத்தமும் வாங்கி விரன பரிகாரம் செய்யக் கடவான்.

மரமஞ்சள், விழலரிசி, திப்பிலி, இதில் பாகம் பண்ணிப் பட்ட எண்ணெ.

விபரம்:---

அத்தி முகிள் சோளப்பூ தாமரை வளையம், அதிமதுரம், காச்சுப்பு அரைத்து பாலில் செவிக்க கரகு மென்ற விஷ பாகந் தீரும். பத்தியம் பயறு அவரை, கடலை இதில் உண்டான போஜனங்களாலும் தண்ணீர் சோரியாக மாங்கிஷ சாறுகளிலும் நெய் கோதும்பை நெல்லு அசனத்தில் உண்டான போஜனங்களிலும் பரிகரிக்கக் கடவன். இதுவு மன்றி புளி வாதம், பித்தம் மற்ற பதார்த்தங்களிலேயும் இருப்பு கோபம். வழி நடை இளைப்பு பகல் நித்திரை இவை விடக் கடவான் என்றவாறு.

நாறப் பாலமரத்தில் முகிள் எண்ணெயிலே போட்டு சந்தனம் விலாமிச்ச ஏலம், லவுங்கம், கோஷ்டம், நன்னாரி, தேவதாரம், வெட்டி வேர், அமுக்கிரா வேர் அரைத்துப் பாகு பண்ணின எண்ணெ மேலில் பூச விஷ பாகத்தைப் போக்கி விக்கும். பலத்தை விருத்திப் பண்ணும் என்றவாறு.

(வேறு) விஷ பாகத்துக்கு எண்ணெ வைக்கிற வகை: புங்கம் பட்டை பலம். 2 இடித்து நாலு மரக்கால் தண்ணீர் வார்த்து அஷ்ட பாகமாகக் காய்ச்சி வற்ற விட்டு வெள்ளாட்டுப் பால் தயிர்த் தண்ணீர் வை வொன்று நாழி விட்டு எண்ணெ உழக்கு நெய் உழக்கு பாகமாக விட்டு இதில் கொடிவேலி வேர், திரிகடகம் அசமதாகம் சாறணை வேர். சமஞக வைத்து சவுக் காரம், காச்சுப்பு, ஊழக் காரம், புளியங் காரம், அரசங் காரம், பொரிக் காரம், எருமை கொடி கொன்றைக் காரம் கள்ளிப் பால், சீரகம் பலம் ஒன்று, கருஞ் சீரகம் ஒன்று இரு பலமாக பொடி செய்து விறவித்திர கரி காஞ்ச லவணம் என்றது புது சட்டியில் வைத்துக் கொண்டு வெந்நீரில் செவிக்கவும்.

மூலை பீனிசம் அஷ்டிலே அருமான ஆறுக மருவை போக்கு மென்ற வாறு.

(வேறு) எள்ளுக் கசாயமிட்டு நறு நெய்-வெல்லம் திருக்கடுகம் சிற தேக்குப் பொடி செய்து காவிக் கசாயம் செவிக்க ரெத்த குன்மம் தீரும்.

குறிகளுக்கு இதுவாகா விட்டால் குரு ஆவாள். எள்ளைப் பாலில் வேக வைத்து வெடி வேரை செவிக்காத்க் குன்மந் தீரும்.

விஷ பாக குணம்:-

உள்ளங் காலைச் சுள்ளு சுள்ளு என்று நெருப்பு பட்ட புண் போலே கொப்பளிக்கும். எரிக்கும். சென்ன கரிப் பதம் போலே இருக்கும். தலையும் நொந்து குளிரும். வெதுப்பும் வரும். உடம்பு வீங்கும். கை கால் வீங்கும். இதுக்கு மருந்து:

வக்கணம் பட்டை, வெள்ளருகு வெருகன் கிழங்கு குப்பை மேனி விழும்பிவேர்ப் பட்டை, வெள் வெங்காயம், வசம்பு, கழுதை விட்டை, ஈர வெங்காயம் இவை எல்லாம் கூட்டி இடித்து விளக்கெண்ணெயில் எரித்து உள்ளுக்கும் தின்று மேலும் பூச விஷ பாகம் போகும். வீக்கும் மீறும். இதுக்கு குடிநீர், நீர் முள்ளி, நாவல்லை, சாறணை வேர், நுறவிலி இலை விழும்பி வேர், வக்கணம் பட்டை, சுரைத் தண்டு, கழுதை முள்ளி இவை தண்ணீரில் லொக்க கொண்டு ஒரு பானையிலிட்டுச் சுட்டுச் சாம்பலாக்கி வைத்து இந்த சாம்பலிலே ஒரு குத்துச் சாம்பல் எடுத்து ஒரு படி தண்ணீரில் கரைத்து தெளிய வைத்து குடிக்கவும். உடம்பு வீக்கம் வாடும்.

இதுவுங் குடிநீர்:-

இஞ்சி, நருவிலி, நீர் முள்ளி, நெருஞ்சி வேர், விஷ்ணு கிராந்தி, சுரைத் தண்டு இவை கூட்டி வெள் வெங்காயம், வசம்பு மிளகுங் கூட்டிக் கசாயம் வைத்துக் கொடுக்கவும். விஷ பாகமும் உடம்பு வீக்கமும் போகும். விஷ பாகம் முற்றும்.

நடை ஜன்னி நிதானம்:-

உடம்பு ஊசி யிட்டுக் குத்தினப் போலே இருக்கும். நெஞ்சிலேயும் யாதொன்று ...சிலைப் போலே ஊங்கம் வாய்கு மமகு என்று இருக்கும் நாலு திக்கங் கடுப்பு எழுந்திருக்கும்.

கண் சிவந்திருக்கும். உடம்பு விரு விரு என்று இருக்கும்.

இதற்கு மருந்து:-

புளியம் பிரண்டையைக் கொண்டு வந்து ஒரு வீட்டில் சுட்டுத் தனலை தள்ளிப் போட்டு முருங்கையிலையைத் தவைத்துச் சாறு கொண்டு புளியஞ் சிறுய் சுட்ட இடத்தில் வார்த்து கொதிக்கிற போது எடுகிற இடமெல்லாம் இட்டு முருக்கிப் பிடித்து முள்ளி உமியாந் நாளையுங் குருவை அரிசியுடன் இடித்துக் களிக் கிளறி தின்ன நடை ஜன்னி நிற்கும்.

(வேறு) ஜன்னி வாதத்துக்கு:-

சாதிலிங்கம் ஒரு பலம் உழக்கு எலுமிச்சம் பழச் சாற்றில் இரண்டு நாள் வெய்யிலில் வைத்து பின்பு திரிபலை கூட்டி அரைத்து பயரளவு உருண்டை செய்து நிழலிலுலர்த்தி வைத்து ஒரு உருண்டை எலுமிச்சம் பழச் சாற்றிலரைத்து கண்ணிலிடச் சன்னி வாத சுரம் நிற்கும். இவ்வுருண்டை ஒன்று இஞ்சி சாற்றிலரைத்து உள்ளுடகளு கொடுக்க ஜன்னி வாதம் நிற்கும். இவ்வுருண்டை தேனிலுரைத்திட ஜன்னி வாத கிரகணி அதிசாரம் க்ஷயரோகம் இவை நிற்கும். இவ்வுருண்டை இஞ்சி சாற்றில் இட அக்கினி மந்தம் நிற்கும். அரியாமலக்கு நசியம் பண்ணி உள்ளுக்கு கொடுக்கவும். இதுக்கு குடிநீர் கொத்தமல்லி சுக்கு சிறு மல்லி வேர் இவை சமன் நறுக்கி கசாயம் வைத்து இந்தப்பு திப்பிலி மேற் பொடி இட்டுக் குடிக்க ஜன்னி வாத சுரம் நிற்கும்.

பேய் பீர்க்கத் தாள் எண்ணையில் குடிக்கவும். நசியம் பண்ணவும். ஜன்னி வாதம் நிற்கும்

சுக்கு, திப்பிலி, சீரகம் இவை சமன் பொடி செய்து நெய்யில் நக்க விக்கல் இரும்பல் ஜன்னி வாதம் உதரத்தில் உள்ள வியாதி எல்லாம் நிற்கும். ஜன்னி வாதம் முற்றும்.

யோனி குலைக் குணம்:-

யோனிவாயுவது வக்கி நேராக நெஞ்சளவாக உள்ளே சுருங்க வலிக்கும். உடம்பைக் குத்திக் குடையும். உண்ண வேண்டிராது. நித்திரை வராது. நீர் சற்றே பிருந்து பிருந்து விழும்.

இதற்கு மருந்து:-

வெள் வெங்காயம் உரித்தது இருபது பலம், சுனி நீர் விட்டு நாலிலொன்றாக காய்ச்சி பிசைந்து வடித்து கொண்டு இதற்கு கற்கம் தேவதாரம் இந்துப்பு கடுக்காய், நெல்லி தான்றிக்காய் கொடுவேலி வேர், புறந்தோல், பெருங்காயம், திப்பிலி வகை ஒன்று. பலம் கொண்டு அரைத்துக் கரைத்து இதிலே சிவதை வேர் ஆறு பலம் கொண்டு அரைத்து கசாய நீரிற் கரைத்து சிற்று மணக்கெண்ணை மூன்று நாழி கொண்டு வெள்ளாட்டுப் பால் நாழியும் கள்ளிப் பால் உழக்கும் கூட்டி மூன்று நாள் வெந்து நாலாவதுநாள் வடித்து காசத்தனை எண்ணை நக்க யோனிச் சூலை மகோதரமும் தீரும். யோனி சூலை முற்றும்.

வெக்கை பார்வை நீராமை அகவை பீலிகை நிதானம்:-

இவை ஒரு விசியிலே குடப் புறத்திலே வயிற்றை அடைத்தாப் போலே இருக்கும். இதற்கு உப்பிட்ட நார்த்தங்காய் தின்ன உடனே வந்து சிறும். இதற்கு மருந்து பெருங்காயத்தைப் பழத்துடனே மூன்று நாள் விழுங்க நிற்கும்.

மகோதரம் மேல் கவிசை மருந்து:-

மகோதரம், மேற்கவிசை வெப்பாலை இதற்கு மருந்து மிளகு உரிசன்ன குரிசாலை. கடுகு அரிதாலம் ஐந்து காசிடை சாதிலிங்கம் இரண்டு பலம், சதுரக் கள்ளிப் பால் மூன்று முத்தின தேங்காய் பன்னிரண்டு உடைத்து துருவிச் சாறு கொண்டு முற்பட்ட மருந்தெல்லாம் தேங்காய் பால் வார்த்து அரைத்துக் கரைத்து காய்ச்சி இருப்புட கறண்டகங் கொண்டு அளாவி கருப்பு நிறமான பொழுதே தயிலந் தோன்றும் மருந்தை கோடி சீலை இட்டுப் பிழிய தயிலம் விழும். இந்த தயிலம் பரணியில் அடைத்து வைத்து கொண்டு நித்தம் ஒரு பணவிடையாக பக்க நாள் நக்கிறுல் இதற்குத் தீரும் வியாதி மகோதரம், மேற் கவிசை, வெப்பாலை, ஒளிசை அகுவை இவை எல்லாம் தீரும்.

<u>எரி_குன்ம_குணம்:-</u>

மிஞ்சிற பக்குவத்தில் வயிற்றை எரிக்கும். அன்னம் செரியாது. ஏப்ப மிகும்.

<u>இதற்கு_மருந்து:-</u>

வெருகன் கிழங்கு இரண்டாய் வெட்டி நடுவே குழித்து நாற் களஞ்சு இரதத்தை விட்டு இரண்டையும் மூடி சீலை மண் செய்து மேலுமிரண்டு மூன்று பிரகாரம் மண்பூசி இதை ஒரு குடத்தில் நாட்டி வைத்து மூன்று நாளாக எரித்து இந்தக் கல்லு தீர்ந்த வாறெடுத்து வைத்து நித்தம் களஞ்சு நீரிலே வெந்நீரில் குடிக்கவும். எரி குன்மம் தீரும்.

(வேறு) மயிர் மாணிக்கத்தின் இலையும் பச்சைப் பயறும் பச்சை அரிசியிலிட்டு சுக்கு சர்க்கரை மண் பாண்டத்திலிட்டு தின்ன தீரும்.

(வேறு) இந்துப்பு ஒரு காசிடை பொடி செய்து பசுவின் நெய்யிலே குழைத்து விழுங்க எரி குன்மம் தீரும்.

<u>விக்கல்_வறட்சி_காமாலைக்கு:-</u>

ஏலம், லவங்கம், சீரகம், சடாமாஞ்சி, சுக்கு, திப்பிலி, முந்திரிக் காசு, கற்பூரம், அதிமதுரம், கோஷ்டம், சாதிக்காய், கொத்தமல்லி, சந்தனம், பேரீச்சம் பழம், முந்திரிகைப் பழம், குடப் பாலை விரை, நாகப்பூ, இருவேலி வேர், விலாமிச்சம் வேர், அமுக்கிரா வேர், நெருஞ்சி, நிலைப் பனை இவை இரண்டும் பொடி செய்து வடி கொண்டு இதற்கு இடைக்கிடை சர்க்கரை கூட்டி கலந்து நாள் ஒன்றுக்கு ஒரு கடி பிரமாணம் நெய்யில் குழைத்து நக்க இதற்கு தீரும் வியாதி காலை விக்கல் காமாலை,. உடம்பு எரிப்பு,. அரியாம். கல் வறட்சி இவை தீரும்.

<u>விக்கலுக்கு:-</u>

மயிலிண்ட இறகை சுட்டு தேனில் குழைத்து நக்க அடைச்சல் விக்கல் மாறும். இஞ்சியை முலைப் பாலில் அரைத்து கொடுக்க தீரும். வரகு வைக்கோல் சுட்டு தேனில் கொடுக்கவும்.

<u>பித்த_பாண்டுக்_குணம்:-</u>

உதடும் வாயும் வெளு வெளுத்திருக்கும். சிறு நீர் பச்சென்றிருக்கும். கை கால் ஒஞ்சிருக்கும். உடம்பு அதிருக்கும். நடக்கும் போது கால் பொய்க் கால் கட்டினாப் போலே இருக்கும். உண்ண வேண்டியிராது. கண் பச்சென்றிருக்கும். சிறுநீர் இறைச்சி கழுவினநீர் போலே இருக்கும். சுண்ண நீர் போல இருக்கும். மிகவும் நித்திரை வரும். கால் எரச் சீலை போல் இருக்கும். நெஞ்சம் வயிறும் கம கம வென்று இருக்கும். நடக்க மாட்டார்கள். புறங் கால் வீங்கி யிருக்கும். கண் கடு வீங்கி இருக்கும். இது

<u>இதற்கு_மருந்து:-</u>

அரப்பொடி.உரி, புளிய பிரண்டை பொடி நாழி, கையாந்தகரை சாறு நாழி, ஆடா தோடை யிலைச் சாறு நாழி, பொடுதலைச் சாறு நாழி, மருதம் பட்டை சாறு நாழி, இதற்கு கற்கம் சுக்குப் பொடி.உரி, மிளகுப் பொடி.உரி, திப்பிலிப் பொடி உரி, அசமதாகம் பொடி உழக்கு, சன்னக சாதிக் கடுகுப் பொடி உழக்கு, தானிக் காய் பொடி உழக்கு, நெல்லிக்காய் பொடி உழக்கு, இந்தப் பொடி முன் சொல்லி யிருக்கிற சாற்றில் நித்தம் ஒரு சாற்றில் பிசைந்து உலர்த்தி உலர்ந்த வாறே வெள் வெங்காயம் முருங்கு பன்னி இந்த பலம் உரித்து அரைத்து பிசைந்து மூன்று நாள் உலர்த்தி ஒரு பாண்டத்தில் வைத்துப் புடமிட்ட நேர் வாளங் கொட்டை பத்து கொட்டை பொடி செய்து போட்டுக் கலந்து நித்தம் ஒரு வெரு கடிப் பிரமாணம் நெய்யில் ஆமுதல், தேனில் ஆமுதல் குழைத்துக் கொள்ள இதற்கு தீரும் வியாதி பித்த பாண்டு விடு சோபம் காமாலை தீரும்.

<u>பித்த_ஜன்னி_வாதத்து_குணம்:-</u>

மெய் பிதற்றும். கல்லுங் கட்டியும் மாக விட்டெரியும்,

<u>இதற்கு மருந்து:-</u>

நிலத்தில் படர்ந்த வெள்வேலம் வேர், பாதத்துடை

நந்தச் சூரி வேர், ~~பாதத் துடை கயிறும் மயிலிறகும் கோழிக் காறலும் இவை~~

கயிறும் மயிலிறகும் கோழிக்காறலும் இவை உலர்த்தி பொடியாக்கி புகை காட்ட

~~உலர்த்திப் பொடி செய்து புகை காட்டிடில் பேயிதல் வந்த ஜன்னி வாதம் தீரும்.~~

பேய் மேலிறங்கி வந்த ஜன்னி வாதம் தீரும்

சந்தனமும் கோஷ்டமும் எலுமிச்சம் வேரும் கவிழ் கடுக்காயும் இவை பொடி செய்து புகை காட்டிடில் பேயிதல் வந்த ஜன்னி வாதம் தீரும்.

<u>ஜன்னி வாத சுரத்தின் குணம்:-</u>

கை கால் எடுக்க வொட்டாமல் இடக் காலும் இடக் கையும் எடுக்கப் படாமல் பண்ணும்.

<u>இதற்கு மருந்து:-</u>

அவுரி வேர், சிற்றவரை கிழங்கு, சத்திச் சாரணை வேர், வெள்வேலம் வேர், சிறுசடைச்சி வேர், குதிரை வாலி வேர், குப்பை மேனி வேர், வேலிப் பருத்தி வேர், சிறு குப்பை வேர், கிராம் வேர், முடக் கொத்தான் வேர், மாதுக்காளி வேர், பிரமி அரை முரி வேர், கற்றாழைச் சோறிவை வொன்று இதற்கு சர்க்கம் ஏசம்பு, வெள் வெங்காயம் பச்சை பாம்புக் கண்டம் கஸ்தூரி மஞ்சள் வெளிசை பிசின் கருங் குங்கிலியம் சிறு தேக்கு திப்பிலி, கருஞ்சீரகம், செண்பகப்பூ, இத்தப்பு, அரத்தை கடுரோகணி, மரமஞ்சள், அதிமதுரம், கோஷ்டம், தேவதாரம், ஏலம், கிராம்பு, கோஷ்டம், செவ்வள்ளி கொடி, செவ்வியம் இவை ஒவ்வொன்று இரண்டு பலம் கொண்டு முன சொன்ன காட்டு மருந்த கடை மருந்தும் இரு நாழி ஆட்டாதோர்டை சாற்றிலரைத்து கரைத்து இதிலே நந்தெண்ணெயும் தன்னிலொக்க கொண்டு இருநாழி எண்ணெ விட்டு பதத்தில் வடித்து உள்ளுக்கும் நக்கி மேலும் பூச ஜன்னி வாத சுரம் தீரும்.

லக்ஷணம் முன் சொன்ன சுரங்களில் அடையாள முண்டாயிருக்கும். மிகவும் நித்திரை வரும். அல்லா விட்டால் இளப்பு பாடுதல் ஆடுதல் சிரித்தல் கண் சிவக்குதல் உதடு சிவந்திருக்குதல் இவை குணங்கள் உண்டாயிருக்கும். இ

<u>இதற்கு மருந்து:-</u>

சீந்திக் கொடி, ஆடாதோடை நிலவேம்பு, பற்படாகம் இவை ஒவ்வொன்று கொண்டு சுக்கு இரண்டு பலம், முத்த காசு மூன்று பலம், சிறுகாஞ்சொரி வேர் மூன்று பலம் ஆக இவை இடித்து ஒரு நாழி நீர் வார்த்து உழக்காக காய்ச்சி ராத்திரிக்கு குடிக்கவும். பகலுக்கு இதில் பாதி குடிக்க ஜன்னி வாத சுரம் தீரும். முலைப் பாலில் திப்பிலி, ஏலரிசி, ஏலம், சந்தனம் கலங்கொம்பு, முசுமுசுத் தேன் முட்டை கோரோசனை முந்திரிகை பழம், பேரீச்சம் பழம் இலுப்பை பூ நீர்பூநாகம் இவை தன்னில் ஒக்க கொண்டு ஒரு பச்சைப் பாக்களவு அரைத்துக் கொடுக்க ஜன்னி வாதம் தீரும்.

<u>அறி வற்றுக் கிடக்கிற ஜன்னி வாதத்துக்கு:-</u>

பூசனிக் குடல், சாற்றிலே சுக்கு, நல்ல வெல்லமும் கூட்டி நசியம் பண்ண ஜன்னி வாதம் தீரும். வாழைக் கிழங்கு விரைப் பருப்பும், திப்பிலி மிளகும், இத்தப்பு இலை தன்னில் ஒக்க கொண்டு சிறு நீர் வார்த்து அரைத்து உருண்டை பண்ணி வைத்துக் கொண்டு ஜன்னி வாதமாய் மயங்கி கிடந்தால் இதிலே ஒரு உருண்டை எலுமிச்சம் பழச் சாற்றிலரைத்து கண்ணிலிட ஜன்னி வாதம் தீரும். அறிவற்று கிடந்த ஜன்னி வாதத்துக்கு இரண்டு குதிகாலும் நெற்றியிலும் தேய்க்க ஜன்னி வாதம் தீரும்.

<u>ஊது ஜன்னி வாத ஜன்னி குணம்:-</u>

ஊது ஜன்னி உடம்பெல்லாம் ஊதும். புண் போலேயிருக்கும். செவிசில்லென்று இருக்கும். வாத ஜன்னி உடம்பெல்லாம் கடுக்கும்.

<u>இதற்கு மருந்து:-</u>

ஐம்பது கோழி முட்டை கருவு கொண்டு சுத்தி நீர் ஊற்றி போட்டு பானையில் இட்டு இதிலே கொடிவேலி வேர் நறுக்கி இட்டுத் தயிலம் வைத்து எடுத்து கொண்டு ஒரு பணவிடை தயிலம் உள்ளே கொள்ள வாத ஜன்னி தீரும்.

சேற்றும ஜன்னி குணம்:-

நெஞ்சுக்குள்ளே. சோளச் சோறு கொறிக்கிறாப் போலே இருக்கும்.

இதற்கு மருந்து:-

நொச்சி வேர், தழுதாழை வேர், சிற்றா மணக்கின் வேர், மிளகு, சாறணை வேர் எருமைப் பாச்சான் கொடி முத்திருக்குஞ் செவி வேர், நாய் வேளை வேர், வெள்ளெருக்கம் வேர், நாயுருவி வேர் பட்டை பொடுதலை சமூலமும் இவை எல்லாம் எலுமிச்சம் பழச் சார் வார்த்து அரைத்து. வசம்பு. வெள். வெங்காயம் வெளிச்ச பிசின் கருஞ்சீரகம் இவை தன்னி லொக்க கொண்டு ஒவ்வொன்று மூன்று பலம் கொண்டு பொடி செய்து ஒன்றொன்றை கூட் உள்ளுக்கு நக்க கொடுத்து மேலுக்கு பூச சிலேற்றும ஜன்னி தீரும்.

ரத்த பித்தத்தின் குணம்:-

நெஞ்சைக் குத்தி நருக்கு நருக்கென்று நோவும் உடம்பு கிறு கிறுவென்று வரும். வாயாலும் மூக்காலும் எலிக் கழுவின தண்ணீர் போலே விழும். கை கால் ஓய்ந்து வரும். உடம்பு வெந்திருக்கும். உண்ண வேண்டி இராது. முகங் கடுத்திருக்கும். இது

இதற்கு மருந்து:-

மூன்று அழிஞ்சி கொழுந்தும் சற்று மிளகும் அரைத்து முழுங்க இரத்த பித்தம் தீரும். இதற்கு குடிநீர். சந்தனம், இருவேலி வேர், விலாமிச்சை வேர், பற்பாடகம், முத்தகாசு இலுப்பை பூ இவை எல்லாம் ஒவ்வொன்றும் கொண்டு நறுக்கி இரு நாழி நீர் வார்த்து உழக்காக காய்ச்சிக் காலமே கொடுத்து ராத்திரிக்கு இரண்டத்தை குடிக்க இரத்த பித்தம் தீரும்.

இதற்கு நெய் வைக்கிற வகை:-

அருகஞ்சாறு நாழி; வெள்ளாட்டு பால் நாழி, அருகம் வேர், கொத்தான், செங்கழுநீர்க் கிழங்கு, தாமரை வளையம், அதிமதுரம், ஏலம், இலவுங்கம், கோஷ்டம், முந்திரிகை பழம், பேரீச்சம் பழம், முத்த காசு, நன்னாரி வேர், சந்தனம், இலுப்பைப் பூ, இவை ஒவ்வொன்று பலம் கொண்டு அருகஞ் சாற்றில் அரைத்து இரு நாழி பசுவின் நெய்யுங் கூட்டி பதத்தில் வடித்து நக்கவும். நசியம் பண்ணினால் இரத்த பித்தம் தீரும்.

கற்றாழையும் சர்க்கரையும் நெல்லி தான்றி கூட்டி விழுங்க இரத்த பித்தம் தீரும்.

நிலப் பனை கிழங்கும், செம்பருத்தம் பூவும், சர்க்கரையும் பாலில் குடிக்க தீரும்.

சீலைச் சாம்பல் மஞ்சள் முள்ளி மிளகு நீக்கரட்டை ~~வே~~ வேர் இவை பொடி செய்து ஒரு குந்துமணி பொடி எண்ணெயில் குழைத்து முழுங்க இரத்த பித்தம் தீரும்.

அருகும் பருத்தி இலையும் நசுக்கி சீலையில் கட்டி முகர்ந்து பார்க்க தீரும்.

கடுக்காயை சுட்டுப் பொடி செய்து அரக்கும் சீலை சாம்பலும் எண்ணெயில் கொதிப்பித்து நசியம் பண்ண பித்தம் தீரும்.

மாங்கொட்டை முலைப் பாலில் நசியம் பண்ண இரத்த பித்தம் தீரும்.

சாணகச் சாற்றில் திப்பிலி கூட்டிக் கொடுக்க ரத்த பித்தம் தீரும்.

குதிரை லத்திச் சாற்றில் தேத்தாங் கொட்டை குடிக்க இரத்த பித்தம் தீரும்.

வெள்ளை நெற்றி குணம்:- உடம்பு வெளும்பும். உளக்கும். வாய் வறண்டு வரும். பிடரி கால் கை இடுப்பும் தேள் கொட்டினப் போல் கடுக்கும். நாக்கு புளித்திருக்கும். வயிறு எரியும். வயிற்றைக் கட்டினால் பூசனிக்குடல் பிசைந்தாப் போல் கக்கலும் பந்தமுமாக கழியும்.

இதற்கு மருந்து:-

எருமை வெண்ணெயும் விளக் கெண்ணெயும் கூட்டி மூன்று நாள்த் தலைக்கு தேய்த்து அரிச்சு போட்டு ஊமத்தை இலை போட்டு கட்டி வைத்து ~~மலை~~ நாலா நாள் அவிழ்த்துப் போட்டு முழுக வெள்ளை நெற்றி தீரும்.

வெள்ளை நெற்றி குணம்:-

கால் பிடரி, கீழ் வயிறு முதுகு இவை குத்தி குடையும். தலை கனத்திருக்கும். வயிறு எரிக்கும். வாய் வறண்டு கறக்கும். மூக்காலும் வாயாலும் அனல் எழுந்திருக்கும். வயறு பசனிக்காய் பிசைந்தாப் போல் கழியும். கடுப்பும் சீதமும் இரத்தமும் நுரையும் போலே பலவிதமாக கழியும். சற்றே சீயும் விழும். கடுத்து கழியும். அனல் எழுந்திருக்கும். இவை குணம் முன்பு போலே தலைக்கு வெண்ணை கட்டவும் தீரும்.

குழந்தை பிள்ளைகளுக்கு வெள்ளை நெற்றி யானால் கழுத்து திரும்பி இருக்கும். உடம்பு வெதும்பும். முலை முலை உண்டு அருவெருத்தன்மம் சளியும் இருமலும் போல் இருக்கும்.

வேறு:-

பித்தப் பிதற்றலுக்கு பெண் பாவைக் கிழங்கு பசுவின் பாலில் குடிக்க பித்த பிதற்றல் தீரும்.

இலவம் பட்டையை அவைத்து காடியில் குடிக்க பித்தம் தீரும்.

உதட்டு புண்ணுவுக்கும் வெடித்த புண்ணுக்கும்:-

சிறுபூளை வேர், மிளகு குட்டி தக்காளி வேர், காசு கட்டி இவை கொடிவாள் பிடங்கால் கொட்டி அரைத்து உதட்டில் பூசி உஞ்சரித்துக் கொண்டால் கண்ணீரில் விழும் புழுவும் சாம கட்டு கொடிவேர் உசிலம் பட்டை இவை பொடி செய்து மண் வெட்டிக் காயப் போட்டு மருந்தை நல்லெண்ணையில் பிசைந்து காஞ்ச மண் பெட்டியில் இட்டு மூடி உதட்டில் புகை காட்ட உதட்டிலிப் பிழு விழும்.
(வேறு) ஆலம் பாலிட உதட்டுப் புண் ஆறும்.

விடாபாகத்துக் குணம்:-

கால், கை முகம் உடம்பு வயிறு மேல் நோக்கி வீங்கும். கால் கை தான் போல் வீங்கும்.

இதுக்கு மருந்து:-

நீர் சுள்ளி கொண்டு வந்து சுட்டு நமுக்கித் தண்ணீரில் கரைத்து தெளிய வைத்து ஐந்து நாள் குடிக்க வீக்கம் வாடும்.

சம்பை இலை அவைத்து கழுதை லட்தி கூட்டி பிசைந்து வசம்பு வெள் வெங்காயம் கூட்டி நல்லெண்ணையில் எரித்து வீக்கத்திலும் பூசி உள்ளுக்கு நக்க விடாபாகம் வீக்கம் மீளும்.

கிளிமுக்கு கிழங்கு ஒரு படி குறுவை அரிசியில் பால் வார்த்து சோறுக்கி கருப்புக் கட்டியும் கூட்டி உண்ண விடாபாகம் தீரும்.

உடனடியிலே யானால் நல்லெண்ணையில் எரித்து உள்ளுங் கொண்டு மேலும்பூச விடாபாகம் தீரும்.

மலட்டு வலி குணம்:-

குரல் நீரில் திலையை பற்றி வலிக்கும். குரல் நிலையை எற உளைந்துத் தக்கைப் ப மலர் வலிக்கும். பிள்ளை பெற்ற பெண்டுகளுக்கும் வழி தப்பிறல் இப்படி வலிக்கும்.

இதுக்கு மருந்து:-

பேய் கொமட்டிக் காயொன்று பொவரிக்காயா யிருகும் ஒரு காயைப் பிளந்து விரை வாங்கிப் போட்டு பச்சை பாக்கு மாத்திரம் அரைத்துக் கல்லுப்பும் அம்மாத்திரம் அரைத்து இள வென்னீரில் மூன்றாங் குழியில் தின்று குடிக்க மலட்டு வலி தீரும். நெய் பால் வார்த்து உண்ணவும். பின்பு பெரு மட்டைப் பிஞரிச் சாறு உழக்கும் சற்று நல்லெண்ணையும் கூட்டிக் குடிக்க மலட்டு வலி தீரும்.

(வேறு) பெருங்காயம், இந்துப்பு, வெள்ள வெங்காயம் இது மூன்றுங் கூட்டி அரைத்து விளக்கெண்ணையில் குழைத்து விழுங்கவும். நோகிற இடத்தில் எருக்கிலை கல்லை ஒத்தி வைத்து சட்டியில் காய்ச்சி வைத்து அமுக்கி இருக்க தீரும்.

(வேறு) அதிசாரம் வரும்படி குணம் வாதத்தாலும் பித்தத்தாலும் செற்பமத்தாலும் தோஷங்கள் மூன்றினும் நீரட்டிக்குடித்தாலும கசியுரு செத்தாலும் மூலை திரும் பனத்தாலும் கொடியாதிருந்த கள்ளாலும் மிக நெய் குடித்தாலும் கிருமி யாலும் தோன்றிமை பலம் விட்டமையாலும் அதிசாரம் வரும் மென்றறிக.

__வாத_அதிசாரத்தின்_குணம்__:-

பிறப்பாடு ஒரு கைப் படுக்கையும் வயிறு நோகையு மருப்பையில சிரையொடு கூடுகையும் வயிறு மந்தமாயிருக்கையும் கன்றிக் குழம்பிப் போகையும் கருப்புக் கட்டிச் சாறு போலே வழு வழுத்துப் போகையும் கீழ் வயிற்றை வலித்தாப் போலே நோகையும் வாயு லர்த்துகையும் மயிர் குற்றிட்டிருககையும் முககு கை உண்டாயிருக்கையும் மென்பது இது.

__இதுக்கு_மருந்து__:-

ரூயிலப் பட்டை பலம். ௪ இடித்துக் கலநீரில் இட்டு சதுர பாகமாக காய்ச்சி இதை பிசைந்து வடித்துக் கொண்டு சக்கு பலம். ௰௨, இடித்து பதக்கு நீரில்ப் போட்டுச் சதுர பாகமாக காச்சிப்பிசைந்து வார்த்துக் கொண்டு இரண்டு சாறும் ஒக்க கூட்டி இதுக்கு கற்கம் திரிகடுகு, திரிபலை அதிமதுரம், அசமதாகம், பெருங்காயம், வெள்ளி லொத்திரம் விழலரிசி கருஞ்சீரகம், வட்டத் திருப்பி புங்கந் தோல் கொடுவேலி வேர், பிறந் தோல், கீழா நெல்லி வேர், இவை ஒவ்வொன்று கு பலம் கொண்டு கசாய நீரில் அரைத்துக் கரைத்து முன்னாழி நெய் புகட்டி மூன்று நாள் வெந்து நாலாநாள் பதத்தில் வடித்திறக்கி கொள்ள வாத அதிசாரம் திர்கும். கிரணி எல்லாம் திர்கும்.

__தேற்றான்_கற்பம்__:-

தேற்றான் விரை அமரியில் உரைத்து நசியம் பண்ண மண்டெலி கடி மீளும். இவ்விரை கழுநீரில் குடிக்க பெரும்பாடு மீளும். இவ்விரை கைய்யாந்த கரைச் சாற்றிலுரைத்து அஞ்சன மிட மாலை கண் தீரும். இவ்விரையும் ...மத்தின் வேரும் நசியம் பண்ண விஷம் மீளும். இவ்விரை நீரிலுரைத்துக் குடிக்க காமாலை தீரும். இப்பொடி நெய்யில் நக்க பாண்டு சோகம் அழலை நீராமையுந் தீரும். இப்பொடி எண்ணையுடன் நக்க குடல் வாதந் தீரும். இப்பொடி கோசலத்தில் கொடுக்க வாதம் மண்டெலிக் கடி மீளும். இப் பொடியும் மஞ்சளும் தின்ன இருமல் மீளும். இப்பொடி ஆழாக்கு வெந்நீரில் குடிக்க வயற்று வியாதி தீரும். இந்த காயை பொடி செய்து வேப்பெண்ணெயில் நக்க பதினெட்டு குட்டமும் மீரும். இப் பொடி எருமை மோருடன் குடிக்கச் சிலந்தி தீரும். தேற்றான் பழம் உலர்த்திப் பொடி செய்து வெருகடிப் பிரமாணம் ஆறு மாதம் தின்ன பதினெட்டு குட்டமும் தீரும். இப் பொடி எண்ணையுடன் கொள்ள வாத பித்தம் சேற்பமம் அறும். இப் பொடி பசுவின் பாலாகுதல் நெய்யாகுதல் கொள்ளப் பல முண்டாகும். இப் பொடியும் மிளகும் சுக்கு, திப்பிலியும் தேனுடன் குடிக்க இளைப்பு இரும்பலந் தீரும். தேற்றான் பழம் காயும் பூவும் கொழுந்தும் வேரும் மேல் பட்டையும் உலத்திப் பொடி செய்து கோசலத்துடன் விழுங்க வெளுப்பும் தீரும். இப் பொடி எண்ணெயில் கூட்டி நசியம் பண்ண கபால குட்டம் மீளும். தேற்றான் காய் முற்றினது கொண்டு வந்து மேல் தோலை வாங்கி இடித்துச் சீலை வடி கொண்டு இப் பொடி எண்ணையுடன் நக்க இருமல் ஈளைதீரும். இப் பொடி நெய்யுடன் நக்க பாண்டு சொகமதலை நோவு நீராமை கிரணி இவை எல்லாம் தீரும். இப் பொடி நெய்யில் குழைத்து கண்ணில் இட பூப் பரியும். மோருடன் கொள்ள வெளுப்பு தீரும். இப் பொடி வேப்பஞ் சாறுடன் குடிக்க மூன்று நாள் மாறல் தீரும். இப் பொடி புளி இலைச் சாற்றில் குடிக்க உடம்பிலும் தடவ ~~...~~ காமாலை தீரும்.

தேற்றான் காய் நடுப் பதமானது காய் கொண்டு வந்து கொட்டை வாங்கிப் போட்டு தோலை உலர்த்திப் பொடி செய்து புதுக் கலசத்தில் வைத்து இப் பொடி எண்ணெயில் குழைத்து நக்க ஈளை இருமல் தீரும். இப் பொடியை தேனில் கொள்ள நீராமை அருவை கிரணி தீரும். நீரில் அரைத்துக் குடிக்க வெள்ளைக் காளம் தீரும். எண்ணெயில் குடிக்க கண்ணெரிவு தீரும். இப் பொடியும் தேற்றான் வேரும் அரைத்து எண்ணெயில் ஊறப் போட்டு தலைக்கு வார்க்க

தலையில் உள்ள வியாதி தீரும். தெற்றான் விரையை பாலுடன் குடிக்க பித்தம் தீரும். தெற்றான் பட்டை பத்து பலம் இதில் விரை பத்து பலமும் வேர் பட்டை பத்து பலமும் வேர்ப் பட்டை முந்தி இடித்த மைத்ததையும் பிந்தி இடித்து இதற்கு மேல் பொடி திரிகடுகு இந்துப்பு இவை கழஞ்சு கூட்டி இடித்து பொடியாக்கி கலந்தப் புர வெளி கண்டாங்கி யாக்கி திரட்டி உலர்த்தி கருப்பு கட்டியிலே ஒரு வெரு கடிப் பிரமாணம் கொள்ள எல்லா வியாதியும் குட்டமும சரீரமும வச்சிர காயமாம்.

தேற்றான் வேர் பொடி .... மட்டம் தீரும். இதக்கு உளவு சாற சமூலமும் அரைத்து அரிசியுடன் கலந்து உய்யலாக்கி உண்ணவும்.

தேற்றான் பழத்தை உலர்த்தி பொடி செய்து வெரு கடி பிரமாணம் நெய்யுடன் கொள்ள யீளை இருமல் இளைப்பு பாண்டு ரோகம் அடசயமும் தீரும்.

இப் பொடியை கோசலத்தில் கொள் இஞ்சி சாற்றிலாகுதல் கொள்ள குஷ்ட மட்டம் தீரும்.

இப் பொடி நசியம் பண்ண தலை கனப்பு தீரும். இப் பொடி பாலுடன் குடிக்க பெரும்பாடு தீரும. இதின் இளங்காய் அவித்து வைத்து அரைத்து சுண்டாங்கியாக உலர்த்தி பொடி செய்து நர நெய்யில் முருங்க குன்மம் நீராமை அழுவை பாண்டு ரோகமும் தீரும்.

நெய்யில் கொள்ள குடல் வாதம் தீரும்.

தேற்றான் காயும் மூலக் குமும் ஊமத்தம் விரையும் கூட்டி அரைத்து சரீர மெல்லாம் பூசிக் கொள்ள உடம்பை காண்பவர்கள் பிரியப் படுவார்கள். தெற்றான் கற்பம்.

<u>பித்த அதிசார குணம்:-</u>

பொன் வர்ணமாயிருக்கும். மஞ்சள் சாற போலே இருக்கும். சிறியும் வெண் பாசி போலே யிருக்கையும் மூத்திரத்தோடே கூடி நாற்கையும் வெகப் போடே கூடிக் குமுழி எழுந்திருக்கையும் புளிக்கையும் மாயிருக்கும் என்பது.

<u>இதக்கு மருந்து:-</u>

நீர் புலா வேர் அரைத்து எருமைத் தயிரில் கொடுக்க தீரும்.

நாயுருவி அரிசியை கோணியில் தேய்த்து கழல் கொடி மாத்திரம் வெண்ணையில் விழுங்க பித்த அதிசாரம் தீரும். தென்னம் பாலைச் சாறு உழக்கு உதியம் பட்டை சாறு உழாக்கு நாவல் பட்டை சாறும் மாம் பட்டை சாறும் தன்னில் ஒக்க உழக்குச் சாறு கொண்டு இதில் அபினி அதிவடயம் மாங்கொட்டை கஞ்சாப் பொடி காசு கட்டி குடப் பாலை பட்டை இந்துப்பு இவை தன்னில் ஒக்க ஒவ்வொன்றும் ஒரு கழஞ்சு கொண்டு அரைத்து எருமை தயிரில் குடிக்க பித்த அதிசாரம் தீரும்.

<u>சேற்றம அதிசாரத்தின் குணம்:-</u>

மலம் திரண்டு இருக்கையும் வெளுத்து இருக்கையும் நெய் தோன்றியிருக்கையும் வயிறு கடுத்து பிற்பாடு தோன்றி பிறப்பட்டால் வலம் நாறுகையும் பக் காற்று புறப்படுகையும் சூத்திர மயங்கி யிருக்கையும் சோறு வேண்டி யிராமல் இருப்பதும் அறப மாறி மயக்கி வருகையும் மயிக குத்திட்டுருக்கையும் மூத்திரம் செறிந்திருக்கையும் வலம் போயிருக்கையும்.

<u>இதக்கு மருந்து:-</u>

கொடா குரிப் பட்டை கடை சரக்கில் விற்கும். அதை கொண்டு வந்து கொள்ளு மாத்திரம் தின்ன நெஞ்சில் உள்ளது அத்த வயதும் கரைந்து போகும். மோரும் சோறமிட சேற்றம அதிசாரம் தீரும்.

<u>பக்க சூலை குணமாம்:-</u>

இரண்டு விலாவிலும் நெருக்க நெடுர வலிக்கும். கீழ வயறு நெஞ்சளவாக வலிக்கும். தொப்பிளிலே ஒரு புறத்திலே சூல மிட்டு குத்திறப் போல் தோணும்.

<u>இதக்கு மருந்து:-</u>

சிறுக்கீரை சமூலம், வெள்ளை அம்பல பிலே, சிறு பீளை சமூலம், பேயன் வாழை

குருத்தம் சீந்தி வளையிலை சிறு புள்ளடியிலை ஆடாதோடை யிலை, இவை தன்னில் ஒக்க கொண்டு புது பானையில் உலர்த்தி பொடி செய்து இந்த பொடி நாழிக்கு சன்னச் சாலைக் கருகு உழக்கு மஞ்சள் பொடி உரி கச்சு பொடி உரி இவை எல்லாம் ஒக்கக் கலந்து புதுப் பானையில் வைத்து மருந்து கொள்ளுகிறவன் ஒரு நேரம் அசனம் பண்ணி மற்றனாள் விரோசனத்துக்கு கொண்டு மூன்று நாள் காலையில் ஒரு வெருகடி பிரமாணம் தேனில் கொள்ள இதுக்கு தீரும் வியாதி பக்க சூலை குன்மம் வயிற்றில் வியாதி அசுபற எரி குன்மம் வலி குன்மம் இவை நிற்கும்.

பெண்டுகளுக்கு குடல் வாதமாலல் குன்ம தானத்திலே பிறப்படும்.

இதுக்கு மருந்து:-

ஆனை வணங்கி வேர் பெருவாகு சோறியும் கோழிச் சுடு மண் இது மூன்றும் அரைத்து பசு வெண்ணையில் சாரித்து பிறப்பட்ட இடத்தில் உள்ளே தள்ள போம். போம்.

முலைப் புண்ணுக்கு மருந்து:-

முருக்கிலை மஞ்சள் மிளகு வறுத்துப் பொடி செய்து எண்ணையில் குழைத்து பூச முலைப் புண் ஆறும்.

குடல் வாதம் செய்யும் குணம்:-

குடல் பிறண்டு மேலேறி உண்ணும் பொழுது அவ்விக்கு ஈரல் பூரிக்கும். அடி வயறு எழுச்சியும் அந்தாமாகும் பொழுது அவிடத்தில் ஒன்றைக் கொண்டு அமுக்கி இருக்க வேண்டியிருக்கும். அன்னமயம் கொள்ளும் போது குடல் வாயுவை ஒதுக்கி அன்ன மயங் கொள்ள வேண்டி இருக்கும்.

இதுக்கு மருந்து:-

மணலை வமத்து வில்லை வேர் கூடப் போட்டு சுக்கு, மிளகு, கடுக்காய், அதி விடயம், அரத்தை பெருங்காயம், இந்துப்பு அசமதாகம், வெள் வெங்காயம் நேர் வாளங் கொட்டை வசம்பு கழச்சிப் பருப்பு கருஞ்சீரகம் கடுகுரோகிணி கழச்சி இலை சாறு நொச்சி யிலைச் சாறு முடக் கொற்றான் சாறு இது வெல்லாம் மணலில் வறுத்து அரைத்துக் கொண்டு இந்த சாற்றில் அரைக்கவும். முத்தின கோழிக் குள்ளே வேக வைத்து காலமே பாக்களவு கொள்ளவும். இயச் சாற்றில் வேக வைக்கவும்.

மேல் நோக்கிய வாய்வுக்கு எண்ணை:-

ஆமணக் கெண்ணை ஈர வெங்காயம் முடக் கொத்தான் வெள் வெங்காயம், வெள்ளை உகாய் வேர், வெளிச்செசப் பிசின் வறுத்து நெருப்பாகச் சென்ற பக்குவத்தில் உரித் தண்ணீர் வார்த்து இறக்கும் பொழுது ஒரு படி நொச்சி கொழுந்தும் போட்டு மூடி வைத்து தண்ணீர் இறுத்து சுக்கு வெதுப்பி பொடி செய்து வெள்ளை வெங்காயம் எலுமிச்சங் காய் அளவு அரைத்து சுக்கு பொடியும் கூட்டி கொடுக்கவும்.

வாய்வுக் குளிகை:-

இரதம் ஒரு பலம், அபின் ஒரு பலம், வசுவாசி ஒரு பலம், சிறும்பு ஒரு பலம், கஞ்சதமப பொடி ஒரு பலம், கற்பூரம் ஒரு பலம், சீந்தவளை சாறு வார்த்து அரைத்து கடலை பிரமாணம் உருண்டை பண்ணி இஞ்சிச் சாற்றில் இடவும்.

சோகை செய்யும் குணம்:-

கண் கரு வீங்கும். காலுங் கையும் அதிக் கொள்ளும். மண் தின்ன வேண்டி யிருக்கும். வயறு பெருத்திருக்கும். உடலும் பீர்க்கம் பூப் போல் நிறமாய் பத்தியஞ் செரியாது. தண்ணீர் தவிக்கும். நாவும் பல்லும் வறண்டு வரும். விரோசனம் கட்டுப் படும். கண் பசித்திருக்கும். நெஞ்சும் பாரை செரும் தொண்டைக் குழியில் துடிப்பா யிருக்கும். வெயில் பொறுத்தலை நெருடி யிருக்கும். வயிறு பெருத்திருக்கும். உந்தி அடி வயறு சுரந் திருக்கும்.

இரத்த_மருந்து:- 22.3.63.

கடுக்காய், ஏலம், வெந்தயம், திரிகடுகு, அரைப் பொடி, கறிப பெருங்காயம் கடுகு ஆக இவை சமன் கொண்டு பருத்தி யிலை செருப்படி கையாந்த கரை காட்டு மல்லிகை நாயுங் காந்தை இலைசாறு கொண்டு முந்தின கடை சரக்கு மருந்தை பச்சிலை சாறு வார்த்து அரைத்து முற்றின எலுமிச்சங் காய்க் குள் வளையமாக அறுத்து மருந்து திணித்து புதுக் கலசத் தில் இலைக் கள்ளி இலைக் கீழ் படுத்தி அதில் மேல் காயை வைத்து மேலும் இந்த இலை இட்டு மூடி ஆட்டு எருவில் புதைத்து எட்டு நாள் கழித்து எடுத்துஆற வைத்து அந்தி சந்தி ஒவ்வொரு கீழ்றை கொள்ள அமருத கைகண்டது.

சோகைக்கு_கல்லுப்பு_இரு_நாழி:-

கடுக்காய் பொடி உழக்கு இருப்புக் கிட்டம் பொடி உழக்கு, அமசகாகம் நாழி, வெந்தயம் உழக்கு இது வெல்லாம் ஓப்பை மேனி சாறு அவுரி இலை சாறு முருக்கிலை சாறு கையாந்த கரை சாறு, கற்றாழஞ் சாறு இந்த பொடியுடனே இந்த சாறு வார்த்து வேக வைத்து திரண்ட வாறே எடுத்து காமாலைக்கு தயிரில் கொடுக்கவும். விப்புருதிக்கு மோரில் கொடுக்கவும். கவுசைக்கு வெல்லத்தில் கொடுக்கவும். தலைக்கு முக்கூட்டு கட்டிக் காமாலைக்கு கொடுக்கவும்.

சோகைக்கு பழு பாகற் கிழங்கு ஆவரை வேர், அருகம் வேர் இந்த மூன்று தன்னில் ஒக்க நூராக்கி ஒரு கடிப் பிரமாணம் கோமூத்திரத்தில் கொள்ள. ஆரந்தப் பொடி வர்க்க மாலைக்கு மோரில் கொள்ளவும். பித்தத்துக்கு பாலில் குடிக்க இரும்பலுக்கு தேன் திப்பிலியும் கூட்டிக் கொள்ளவும். சாறணை வேர் எலுமிச்சங் காய் அளவு அரைத்த தயிரில் கொள்ள சோகை தீரும்.

மண்டல_வியாதி_குணம்:-

தலை சொறியும். சோம்பியாது. முலை சுருங்கும். இரும்பு உதிரும். முகக் காரை காலிக்கும், சிறு நய சத்திய சத்த முண்டாயிருக்கும். முகம் அதைத் தயிருக்கும். தலை நரம்பு தெறிக்கும். உச்சி இடிக்கும். நாசி வறளும் பல்லு கூசுங்கும். அலகு திறக்க விட்டா து ஞரிப் பிடனி கடுக்கும். நிமிர்ந்தால் அதிக பாரமாக இருக்கும். நாசியாலே மோர் போலேயும் பருத்திக் கொட்டை போலும் விழும். சலமுந் தெறிக்கும். முற்றினால் நாசியிலே இரத்தம் விழும். வெடி நாறும். நெஞ்சளாவி நோகும். உடல் வறளும். கடுப்புண்டு.

இதக்கு மருந்து:-

பசு நெய்யாமுதல் சருகரை.

குளிக்_கண்ணுக்கு:-

கண்ணுக்கு இளநீர் குழம்பு தேற்றான் கொட்டை சங்கிலைச் சாறு, சுக்கு, கடுக்காய் திப்பிலி, இந்துப்பு, மஞ்சள், புங்கம் விரை நெல்லி முள்ளி தானிக்காய் இளநீர் எலுமிச்சம் பழச் சாறு இது கூட்டி அரைத்து கண்ணிலிட ஒளிக் கண் குணமாம்.

விடாத_சுரத்துக்கு_குளிகை:-

இரசம், கெந்தகம், காம்புர பற்பம், நேர்வாளம், கடுகுரோகணி, கடுக்காய், எட்டிக் கொட்டை இவை தன்னிலொக்கக் கொண்டு கள்ளிப் பால் வார்த்தரைத்து குன்றிப் பிரமாணம் உருண்டை பண்ணி தேனிலிட்டு விடாத சுரத்துக்கு கொடுக்க தீரும்.

வாத_சுரத்துக்கு:-

இரசம்.1, கந்தம்.1 பலம் நல்ல சுண்ணாம்பு 5 பலம் இவை கூட்டி உத்தம தாளிச் சாற்றில் அரைத்து பின்பு பருத்தி இலைச் சாற்றிலரைத்து மிளகு பிரமாணம் உருண்டை பண்ணி இதிலொரு உருண்டையும் குன்றி மணி அளவு சுண்ணாம்பும் கூட்டிப் பாக்கு வெற்றிலை யோடே கொடுக்க வாத சுரம் தீரும். இதுக்கு பத்தியம் தினை யரிசி சோறும் வெள்ளாட்டுப் பாலுமிடவும்.

மூன்று சுரத்துக்கும் குளிகை:-

பச்சை நாவி முத்தம் சாதுக எலிப் பாஷாணம், லோக பிறமம் இவை தண்ணீரில் ஒக்கக் கொண்டு பொன் மதமத்தை சாறு வார்த்தரைத்து பாசிப் பயிர் அளவு உருண்டை பண்ணி வாத சுரத்துக்கு சுக்கு தண்ணீரில் கொடுக்கவும். பித்த சுரத்துக்கு சர்க்கரையில் கொடுக்கவும். சிலேத்தும சுரத்துக்கு திப்பிலியுடன் கொடுக்கவும். நீர் பாட்டுக்கு சாறணை வேரில் உப்பு தடவி சுட்டு நருக்கி ஒரு கறணையில் சாறு கொண்டு இந்த சாற்றிலே ஒரு உருண்டை இடவும். ஜன்னி வாதத்துக்கு நீர்ப் பூலாச் சாற்றுடன் கொடுக்கவும்.

குளிர் சுரத்துக்கு குளிகை:-

வெள்ளைப் பாஷாணம் ஒரு பலம், கௌரி பாஷாணம் ஒரு பலம், முத்தம் கால் பலம் அரிதாரம் கால் பலம் இவை எல்லாம் பாகையிலைச் சாறு வார்த்து அரைத்து சிறு பயறு பிரமாணம் உருண்டை நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு ஒரு உருண்டையும் எழு மிளகும் இடவும்.

தாப சுரத்துக்கு எலுமிச்சம் பழ சாற்றில் இடவும். சேற்றும இசமலு மண்டாளல் சுக்கு சுட்டு தண்ணீரில் கரைத்து அந்த நீரில் ஒரு உருண்டை இடவும்.

மாறலுக்கு:-

வெள்ளைப் பாஷாணம் இரண்டு பலம், இரசம் ஒரு பலம், சுண்ணாம்பு மாக்கிஷ வேதி ஒரு பலம், இவை உத்தமதாளிச் சாறு, ஊமத்தை யிலைச் சாறும் சேர்த்தரைத்து சிறு பயறு பிரமாணம் உருண்டை பண்ணி நிழலில் உலர்த்தி ஒரு உருண்டை இஞ்சி சாற்றில் இடவும். மாறல் தீரும். இதற்கு பத்தியம் பாலும கஞ்சியும் காய்ச்சி கொடுக்கவும்.

சன்னி சுரத்துக்கு முதியான் குளிகை:-

முந்திரிகை பழம், பேரிச்சம் பழம், திரிகடுகு, கோஷ்டம், அதிமதுரம், ஏலம், இலவங்கம், திரிபலை, நுள்ளி வேர், இருவேலி வேர், விலாமிச்சம் வேர், இலுப்பைப் பூ இவை யெல்லாம் தண்ணீரில் ஒக்க கொண்டு கருப்பன் சாறு வார்த்து அரைத்து சூ வளங்காய் பிரமாணம் உருண்டை பண்ணி நிழலில் உலர்த்தி ஒரு உருண்டை தேனிலாகுதல் முலைபாலிலாகுதல் இடவும். ஒரு உருண்டை இட ஜன்னி மீரும்.

இந்த உருண்டை முலைப் பாலில் நசியம் பண்ண சன்னி மீரும்.

சுர உருண்டை:-

இரசம், கெந்தகம், வெங்காரம், ஜாதிலிங்கம், கிராம்பு, சாதிக்காய், பச்சை நாவி, சுக்கு, மிளகு, இவை தண்ணீரில் ஒக்க கொண்டு எலுமிச்சம் பழச் சாறு வார்த்தரைத்து குன்றிப் பிரமாணம் உருண்டை பண்ணி நிழலில் உலர்த்தி வைத்து கொண்டு ஒரு உருண்டை இஞ்சிச் சாற்றில் இடச் சுரம் தீரும்.

கண்டங்கத்திரி குழம்பு:-

திரிகடகம், செவ்வியம், அத்தி, திப்பிலி, வெட்பாலை அரிசி, அசமதாகம், சிறுதேக்கு, கர்கடக சிங்கி, கொடுவேலி வேர், சீரகம், கசகசா நீர் ஆக இவை ஒவ் வொன்றும் மூன்று காசிடை கொண்டு பொடி செய்து முன் சொன்ன குழம்பில் பொடியாக இட்டு கொடுக்க சுரம் தீரும்.

சுவ சுரத்துக்கு:-

பச்சை நாவி, மூன்று பலம், கெந்தகம் ஒரு பலம், எலுமிச்சம் பழச் சாறு வார்த்து இரண்டு நாள் இரண்டு ஜாமம் அரைத்து வெயிலிலே வைத்து கலசத்தில் இட்டு மூடி லை மண் செய்து குழி நெல்லிக் குழிக்குள்ளே வைத்து மேலே மணல் கொண்டு மூடி ந்து எரு முட்டை கொண்டு மூடி புடமிட்டு எடுத்து குன்றியில் பாதி இள வெந்நீரில் கொடுக்க வ சுரமும் தீரும்.

<u>சீத சுரத்துக்கு:-</u>

துருசு ஒரு பலம், இரசம் அரை பலம், சாதிலிங்கம் ஒரு பலம், கடுகு ரோகணி அரை விராகனிடை, அபினி கால் பணவிடை, நேர்வாளம் இவை மத்தை யிலை சாறு வார்த்து அரைத்து ஒரு ஜாமம் செல்ல அரைத்து மிளகு பிரமாணம் உருண்டை பண்ணி இஞ்சி சாற்றிலும் எலுமிச்சம் பழச் சாற்றிலும் இட குளிர் வெப்பு நிற்கும்.

<u>முதியோர் குளிகை:-</u>

முந்திரிகை பழம், பேரிச்சம் பழம், ஏலம், அதிமதுரம், கடுகுரோகணி, சந்தனம், இலவேலி வேர், விலாமிச்சம் வேர், நன்னாரி வேர், சர்க்கரை, இலுப்பை பூ, திப்பிலி, தேவதாரம் இவை தம்மை ஒக்கக் கொண்டு மூலைபால் பூசனிக் குடல் சாறு கருப்பஞ் சாறு இவை அரைத்து சுண்டக்காய் பிரமாணம் உருண்டை பண்ணி நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு வாத சுரத்துக்கு ஒரு உருண்டை. முலைப் பாலில் ஆகுதல் புளுக்கின இளநீரில் ஆகுதல் இடவும். சன்னி வாதத்துக்கு பூசனிக்காய் குடல் சாற்றிலாகுதல் அகத்தி பழுப்ப சாற்றிலாகுதல், முலைப் பாலிலாகுதல் நசியம் பண்ண ஜன்னி வாதம் நிற்கும்.

<u>சுர உருண்டை:-</u>

நவாச்சாரம் சவுக்காரம், நேர்வாளம் இவை கூட்டி எலுமிச்சம் பழச் சாறு வார்த்து அரைத்துகுன்றி பிரமாணம் உருண்டை பண்ணி இள வென்னீரில் இட சுரம் நிற்கும்.

<u>மரண வாதத்துக்கு ரசம்:-</u>

ஒரு பலம் கெந்தகம் ஒரு பலம் பச்சை நாபி ஒரு பலம், ஊமத்தம் விரை ஒரு பலம், வெங்காரம் ஒரு பலம், மிளகு, திப்பிலி ஆறு இவை எலுமிச்சம் பழ சாறு வார்த்து அரைத்து குன்றிப் பிரமாணம் உருண்டை பண்ணி பூசினியிலும் ஒரு உருண்டை இஞ்சி சாற்றிலிட மரண வாதம் நிற்கும்.

<u>வாத சுரத்துக்கு குளிகை:-</u>

அபிரக்ச் செந்தூரம், சாதிலிங்க காரிய சூரணம் இவை தன்னில் ஒக்கக் ~~கொள்~~ கொண்டு எலுமிச்சம் பழ சாறு வார்த்தரைத்து குன்றி பிரமாணம் உருண்டை பண்ணி சீனியிலும் முலை பாலிலும் ஒரு உருண்டை இட வாத சுரம் நிற்கும். இதுக்கு குடிநீர் மருந்தானி வேர், ~~விலாமி~~ விலாமிச்சு காந்தி, ஆடாதோடை இவை தன்னிலொக்கக் கொண்டு இரு நாழி தண்ணீர் வார்த்து உழக்காகக் காய்ச்சி கொண்டு சர்க்கரையும் தேனும் கூட்டி கொடுக்க வாத சுரம் நிற்கும்

<u>சீத சுரத்துக்கு:-</u>

சாதிலிங்கம் ஒரு பலம், வெள்ளை பாஷாணம் 1 பலம், சுத்தம் ஒரு பலம், துருசு ஒரு பலம் இவை ஊமத்தையிலை சா வார்த்து அரைத்து மிளகு பிரமாணம் உருண்டை பண்ணி நிழலில் உலர்த்தி வைத்து ஒரு உருண்டை கருப்பு கட்டியும் இதுக்கு குளிர்ந்த வருகிற ஒன்றை விட்டு ஒரு நாள் வருகிற சுரம் இதுவெல்லாம் நிற்கும். இது கை கண்டது.

<u>அக புரூலாதிரு குளிகை:-</u>

இலுப்பை பூ, கழற்சு, திப்பிலி ஒரு பலம், நேர்வாளம்.௺, செங்கழநீர் கோட்டடம் ச பலம் மஞ்சிட்டி, இ.பலம் கடுகுரோகணி ௧௪, இவை பொடி செய்து இலுப்பை பூ முன்னாழி இதுக்கு ஆறு நாழி தண்ணீர் வார்த்து முத்திய மருந்துடன் உரிய நிரய காச்சி பிழிந்து கொண்டு சீலை வடி கொண்டு இந்த நீர் வார்த்து அரைத்த சிறு சுண்டைக்காய்ப் பிரமாணம் உருண்டை பண்ணி நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு முலைப்பால் புளுக்கின இளநீரில் இரண்டு உருண்டை அரைத்து சர்க்கரை மோர் பொடி இட்டு கொடுக்க இதுக்கு பித்த சுரம், தாப சுரம் சன்னி வாத சுரம் இவை நிற்கும். இவை கை கண்டது.

<u>அமுதாதிக் குளிகை:-</u>

ஏலம்.உ, இலவங்கம்.2, அதிமதுரம்.உ, ஒரிலை தாமரை வேர் இரண்டு பலம், பற்படாகம் இரண்டு பலம், சாஸ்திர பேதி இரண்டு பலம், சந்தனம்.2, செங்கழுநீர்

கிழங்கு இரண்டு பலம், கோரோசனம் இவை இள நீர் வார்த்து அரைத்து இரண்டு குன்றி பிரமாணம் உருண்டை பண்ணி நிழலில் உலர்த்தி புழுக்கின இளநீரிலே சர்க்கரையும் கூட்டி இரண்டு உருண்டை இடவும். இதற்கு உறமலே தண்ணீர் தாசம் தேக சுரமும் நிற்கும்.

இதுக்கு குடிநீர்:-

கொத்தமல்லிகை ஒரு பலம், சுக்கு ஒரு பலம், பசளித் தண்டு ஒரு பலம், இவை நசுக்கி இரு நாழி நீர் வார்த்து உழக்காய் காய்ச்சி கொடுக்கவும்.

இதுக்கு பத்தியம் பொரியைக் கழாக்கிக் கொடுக்கவும்.

சீத மஞ்சரி குளிகை:-

நொச்சிக் கொழுந்து ஒரு பலம், வேப்பங் கொழுந்து ஒரு பலம், நெல்லிக்காய் கெந்தகம் இரண்டு பலம், அரிதாரம் இரண்டரைப் பலம், மிளகு ஒரு பலம், இந்துப்பு ஒரு பலம் இதைப் பசுவின் நெய் வார்த்தரைத்து மிளகுப் பிரமாணம் உருண்டை பண்ணி நிழலில் உலர்த்தி வைத்து தாப சுரத்துக்கு புழுக்கின இளநீரில் இவை பெற்ற தோனிலிட தாப சுரம் நிற்கும். சீத சுரத்துக்கு இஞ்சிச் சாற்றிலாகுதல் கஞ்சாங் கோரை சாற்றிலாகுதல் கொடுக்க சீத சுரம் நிற்கும்.

தக கற்கக் கொடு:-

இந்துப்பு சாதிலிங்கம், பச்ச நாபி, திப்பிலி, உதரி மான் மங்கவிரை ஒக்க நிறுத்தி கற்பஞ் செய்து பஞ்சாங்கம் வார்த்தரைத்து இஞ்சி சாற்றிலிட பஞ்சாங்கமே சுரம் மாறும்.

பஞ்சாங்கத்துக்கு மருந்து:-

ஆடாதோடை கஞ்சாங்கபி காறு, பொடுதலை, கையாந்த கரை பாகலிலை இவை சமன் கொண்டு சாறு பிழிந்து அரைத்து கடுகு போல் உருண்டை செய்து இஞ்சி சாற்றிலிட சுரம் நிற்கும். இதுக்கு பத்தியம் ப்ரவம் சோறம்.

தாப்ச சுரத்துக்கு:-

சாஸ்திர பேதி, கல்நார், பூரகம், அதிமதுரம் இவை முலைப் பாலில் அரைத்து கொடுக்க தாக சுரம் நிற்கும்.

தாக சுரத்துக்கு குளிகை:-

முள்ளிலவன் பிசின் ஒரு பலம், இலுப்பை பூ இரண்டு பலம், சாஸ்திர பேதி ஏலம்.1, இலாமிச்ச வேர்.1, லவுங்கம்.1, வெட்டி வேர்.1, சந்தனம்,1, சர்க்கரை.2 இவை எல்லாம் முலைபாலும் தேனும் விட்டு அரைத்து விளாக்காய் பிரமாணம் உருண்டை பண்ணி உலர்த்தி உருண்டையில் இரண்டு புழுக்கின இளநீரில் சர்க்கரையும் கூட்டி கொடுக்க தாக சுரம் நிற்கும்.

சுர உருண்டை:-

எலிப் பாஷாணம், பொன்னரிதாரம், நேர்வாளம், கடுகுரோகணி, கெந்தகம், துரிசு, மடல் துத்தம் இவை சமன் கூட்டி பொடி செய்து அந்தப் பொடியை ஒன்று பாதியாக பிரித்து பாதியில் நொச்சிச் சாறு வார்த்து அரைத்து குன்றி பிரமாணம் உருண்டை செய்து நொச்சிச் சாற்றிலிட சீத சுரம் நிற்கும். மற்ற பாதியையும் முருங்கையிலை சாற்றில் அரைத்து குன்றியளவு செய்து உலர்த்தி கீழா நெல்லிச் சாற்றில் சமூலங் மூடி நீரிட்டு ஒரு உருண்டையிட தாக சுரம் நிற்கும். இதுக்குப் பத்தியம் முருங்கையிலை சாறும் பாலும்.

ஆனந்த வயிரவன்:-

கெவுரி பாஷாணம், சிறுக்கீரைச் சாற்றில் புடமிட்டு பின் புட சுண்ணம்பு நீரில் புடமிட்டு எடுத்து முலைப் பாலில் அரைத்து சிறு பயறு அளவு செய்து ஒரு உருண்டை இஞ்சிச் சாற்றிலிட குளிர் வெதுப்பும் மாறும். பத்தியம் பால் கஞ்சி கொடுக்கவும்.

<u>இரவு_மது:-</u>

பச்சை நாபி, சாதிலிங்கம், வெங்காரம், மிளகு, திப்பிலி இவை சமன் கொண்டு எலுமிச்சம் பழச் சாற்றில் அரைத்து குன்றிப் பிரமாணம் குளிகை செய்து நிழலில் உலர்த்தி சுரத்துக்கு. வயறு கழிந்சால் தேனிலிடவும். வயறு நொந்தால் இஞ்சி சாற்றிலிடவும். இருமலுக்கு குடல் தீ பனைத்துக்கும் மீறு பொடியுடனே இடவும். குளிருக்கு சங்கம் பழ சாற்றி லிடவும். சுரம் நிற்கும்.

<u>சுர_உருண்டை:-</u>

கஞ்சா விரை.2, அரிதாரம் ஒரு பலம்., மடல் தத்தம்.1, தாரிசி.1, எலி பாஷாணம்.1, பிரார் வேர் பொடி.1 இலை கள்ளி வேர்ப பொடி.1 இவை ஜமத்திலே சாறு வார்த்து அரைத்து குன்றி பிரமாணம் குளிகை செய்து உலர்த்தி ஒரு உருண்டை வெள்ளாட்டுப் பாலில் இட சுரம் நிற்கும். பத்தியம் முல்லிக்காய் முருங்கக் காயிலை ஆகும்.

<u>பிறவாப்பு_குளிகை:-</u>

எலிப் பாஷாணம் அரக்கு பொன்னரிதாரம், மடல் தத்தம், கஞ்சா விரை, பிரம் வட்க்கு போர் வேர்ப் பொடி இவை சமன் கொண்டு பேய் கருப்பன் சாறு விட்டு அரைத்து குன்றி பிரமாணம் குளிகை செய்து பாலில் ஆகுதல் கருப்பு கட்டியில் ஆகுதல் மிளகிலாகுதல் பாக்கு வெற்றிலையில் ஆகுதல் இட சுரம் நிற்கும்:

<u>மார்த்தாண்ட_குளிகை:-</u>

பச்சை நாபி, வெங்காரம்.2 பலம் இந்தரதம் மூன்று பலம், சாதிலிங்கம் 4 பலம் இவை எலுமிச்சம் பழ சாறு வார்த்தரைத்து ஒரு ஜாமம் செல்ல அரைத்து குன்றி பிரமாணம் உருண்டை செய்து உலர்த்தி ஒரு உருண்டை முலை பாலிலுரைத்து இட சுரம் நிற்கும்

<u>ஸ்ரீராம_பாணக்குளிகை:-</u>

கந்தகம், துருசு, அரிதாரம் இரதம் வெள்ளைப் பாஷாணம், வெங்காரம், இந்த மருந்து சரி ஒக்க கூட்டி நிலப் பாகலிலைச் சாறு வார்த்து அரைத்து சிறு பயிறளவு மாத்திரை செய்து தக்க அனுபானங்களில் கொடுக்கச் சகல சுரங்களும் சன்னிகளும் தீரும். பத்தியம் காக்கவும்.

<u>(வேறு)_சன்னிக்கு_வீர_பத்திர_குளிகை:-</u>

எலிப் பாஷாணம் இருபத்தொரு நாள் எருக்கிலைப் பால் குத்தி வெய்யிலிலே ஒரு ஜாமம் செல்ல ஊற வைத்து எடுத்துக் கொண்டு எலிப் பாஷாணம் இரண்டு பலம் இரதம் ஒரு பலம், சாதிலிங்கம் ஒரு பலம், கெந்தகம் ஒரு பலம் இவை இஞ்சிச் சாற்றில் அரைத்து உளுந்து பிரமாணம் உருண்டை பண்ணி வெய்யிலில் உலர்த்தி வைத்துக் கொண்டு நாக்கு கறந்து உலர்ந்திருக்கிற சன்னிக்கு முலைப் பால், சந்தனம், கலைக் கொம்பு, திப்பிலி இவை கூட்டி ஒரு உருண்டையும் முலை பாலிலிடவும். அவத்து ஜன்னி, செவி கேளாமல் வாய் பேசப் போகாமல் நாக்கு குளறிய ஜன்னிக்கும் சிலேற்பனம் கட்டின ஜன்னிக்கும் இசக்கும் திப்பிலியும் ஒரு உருண்டையும் முலைப் பாலில் இடவும். பூரகமும் திப்பிலியும் ஒரு உருண்டையும் முலை பாலில் இட ஜன்னி தீரும். இதக்கு பத்தியம் கொள்ளுப் பயறு அரிசி பொரித்துக் காய்ச்சி கொடுக்கவும். இதக்கு குடிநீர் பெருவாகை வேர், பெருங் குமிழம் வேர், கொத்தமல்லியும் சிற்றமல்லி வேர், பேராமல்லி வேர், வில்வ வேர், முன்னை வேர், பாதிரி வேர், சிறு வழுதிலை வேர், கண்டங்கத்திரி வேர், பெய்புடல் மெருட்டி வே நெருஞ்சி வேர், ஆடாதோடை வேர் இவை தன்னில் ஒக்க கொண்டு நருக்கி இரு நாழி நீர் வார்த்து உழக்காகக் காய்ச்சி ஒரு உருண்டை கரைத்து திப்பிலி மேற்பொடி தூவி ரா ராத்திக் குடிக்க ஜன்னி பலவும் தீரும்.

<u>விரோசனத்துக்கு:-</u>

நேர்வாளங் கொட்டையும், கடுக்காயும், முருக்கு கள்ளி மரத்தைத் துளைத்து அதிலே வைத்து அடைத்து ஒரு மண்டலம் சென்ற பிறகு எடுத்து உலர்த்தி பொடி செய்து

நீர்க் கடுப்புக்கு:-

சங்கிலே வேண்டி வாய் பேசாமல் பிடுங்கி வந்து வாய் பேசாமல் அரைத்து பசுவின் நெய்யில் குழைத்து உண்ணக் கொடுக்க கண்டிலேயும் பூச சலம் விடும்.

வெள்ளை சாறனை வேர் பிடுங்கி வந்து குருக நறுக்கி பசுவின் பாலில் வேக வைத்து பசுவின் பாலில் கொடுக்க உரி மூத்திரம் மூத்திர பாலை கல்லெரிப்பு எல்லாம் போகும்.

(வேறு) கீழா நெல்லியும், கலைங் கொம்பும் பசுவின் பாலில் குடிக்கவும். இரத்தம் விழுந்தால் புல்லி மான் கொம்பும் கீழா நெல்லியும் பசுவின் பாலில் கொடுக்கவும்.

(வேறு) ரச சுத்தி வெள்ளை பசலை அரிசியில் பொடியிட்டுக் குளிக் கல்லில் இரண்டு சாமம் விட்டு மத்திச்சு ஊதிப் போடவும். மஞ்சள் பொடியில் மத்திச்சு மத்திச்சு ஊதிப் போடவும். அழுஞ்சி வேர் பட்டை பொடியில் மத்திச்சு போடவும். அரிசி லடிப் பட்டை பொடியில் மத்திச்சு ஊதிப் போடவும். இரசம் சுத்தியாம்.

பிரமி கற்பம்:-

பிரமியை இடித்தச சாறு வடி கொண்டு அந்த சாற்றில் நாழியும், நெய் நாழியும் இரண்டும் நாழியாக காய்ச்சி இறக்கி ஆறின பின்பு மிளகு, திப்பிலி, சுக்கு, ஒவ்வொன்றும் கழஞ்சு ஆகப் பொடி செய்து கொதிக்க நெய்யிற் போட்டு கிளறி வைத்து பின்பு இது கொள்ளும் போது நெல்லிக்காய் பிரமாணம் நாள் ஒன்றுக்கு கொள்ளவும். இந்தபடி அறுபது நாள் கொள்ள சயம் பாட வல்லவமாம். தொண்ணூறு நாள் கொள்ள பதினாறு காலை வயது வாலையாகும். பதினெட்டு குட்டமும் தீரும். புருஷன் கொண்டால் திருவுண்டாம். கலியான புருஷனொன் பெண்சாதி ஆறு மாதம் கொண்டால் பிள்ளையுண்டாம், கற்ப முற்றம்.

சித்திர மூல கற்பம்:-

சித்திர மூலியாவது கொடுவேலி இவை பிடுங்கும் பொழுது இரவு பட்டினி இருந்து அதிகாலமே சரீரம் சுத்தி பண்ணி சிவப்பு சீலை உடுத்தி கொண்டு ஓம் காசி என்ற மந்திரம் சொல்லிப் பூசை பண்ணிப் பின்பு பிடுங்கும் பொழுது சொல்லுகிற மந்திரம் ஓம் மந்திரி சக்தி பெரிய நதி ரசத்தி ஆதித்திய சக்தி என்னும் மந்திர ஆகை மூலை வாச்சத்தி என்னையும் உயக்கிடாயக வாக என்ற மந்திரம் சொல்லி சமூலமும் பிடுங்கி உலர்த்திப் பொடி செய்து தேனாகுதல் நெய்யாகுதல் கூட்டி ஊர வா நிதூர செம்பி வைத்துத் தனக்கு பொருந்தின நீரிலிலோனம் பண்ணி வடக்கு முகமாக விருந்து ஓம் நமா வென்று நித்தம் ஒரு பலம் பொடி சர்க்கரையுடன் கொள்ள அட்டரோக மான குட்டம் தீரும். ஆ நாள் கொள்ளச் சுத்தியுண்டாம். ஒரு திங்களில் யகம் வயது உண்டாம். மூன்று திங்களில் காச்சல் செகுவளம் போவன் ஆறு திங்களில் நினைத்த விடம் போவான். அம விருத்து வெல்லுவான், நீரிலும் நெருப்பிலும் நடப்பான். இந்த மருந்து கொள்ளும் பொழுது உடம்பில் உப்பு, புளி, எண்ணை, சுண்ணாம்பு கழிப் பக்கும் பட எண்ணைத் தட உடம்பு எல்லாம் நனைத்து பகல் அசன் பண்ணி இரவு பட்டினி யிருந்து கோழி கூப்பிடுகிற நேரத்திலே எருமை வெண்ணை பிரண்கி விடிந்ததின் பிறகு சிற்று மணக்கு விரை ஒப்பிசகை விரை, ஓடும் உள்ளி தாறு போக்கி வெந்நீர் விட்டரைத்து இள வெந்நீரில் குடிக்க சீதமுள்பட களியும். இப்பால் முப்பட்ட காரியங்கள் செய்து கொள்ளவும். சித்திர மூல கற்பம் முற்று பெற்றது.

சீந்தி கற்பம்:-

சீந்திக் கொடியை சிறுக நறுக்கித் தலைத்து ஒரு மிடாவில் தண்ணீர் விட்டு ஊறப் போட்டு நன்றாக பிசைந்து நீர் ஊற்றிப் போட்டு இப்படி நாலு பிரகாரம் ஆறு பிரகாரம் கழுவி போட்டால் அடியிலே வெள்ளையாக உறைந்திருக்கும். அந்த பொடி அ கடுக்காய் பொடி நெல்லிக்காய் பொடி. 4, அங்க கோலப் பெருப்பு. இப்பால் வேர் பொடி. இவை பலங் கொண்டு நித்த கூட்டிக் கொள்ளக். கைப்பாந்த கரை சாறு வார்த்து அரைத்து பிசரி உலர்த்திப் பொடி செய்து வஸ்திர காயம் பண்ணி ஒரு புகப் பானையில் இட்டு வைத்துக் கொண்டு சரீர சுத்தி செய்து கொண்டு தனக்கு பொருந்தின நாளில் விநாயகர் பூசை பண்ணி யோகினி பூஜை பண்ணி இந்தத் தூள் தேனில் கலந்து கொள்ள அறுபது நாளில் நரை திரை மாறும். குட்ட ரோகம், மற்றுள்ள வியாதி எல்லாம் தீரும். காயம் பச்சை முங்கிப் போலயாம். இருபது வயது புருஷன் ஆறு மண்டலம் கொண்டால் சிவத்திலே

வெள்ளி சுறக்கும் பத்து மண்டலங் கொண்டால் அட்டமா. சித்தியாம். சொல்வது கேட்கும். சிவத்துலே கழுகு இரசம் சட்டியில் விட்டு வருக்கும் பொடி பத்ச வேகமும் பருக்கி சந்தி சற்பம் முற்ற.

<u>கொறக கற்பம்:-</u>

சாயவேர் பொடி.உ, கடுக்காய் பொடி.உ, தானிக்காய் பொடி.உ, நெல்லிகா பொடி.உ, வெருகங் கிழங்கு பொடி.உ, சீந்திக் கொடி பொடி.உ, இவை தன்னீரில் ஒக்க கொண்டு பொடி செய்து வஸ்திர காயம் பண்ணித் தமுச் சட்டியில் இட்டு முருக்கு மரத் தண்டு நசுக்கி கையாந்த கரை சாறு விட்டு கடைந்து வெய்யிலில் வைக்கவும். இப்படி பதினைந்து நாள் கடைந்து வைக்கவும். இந்த பொடி வெரு கடி பிரமாணம் கொள்ளவும். அந்திக்கு பசுவி நெய்யில் கொள்ளவும். இதக்கு புசனிக்காய் கறப்பு புளிப்பு தவிர்க்கவும். ஏற்றிருபது நாள் கொள்ளவும். வெய்யிலிக் காற்றுபடாமல் சட்டை போட்டு இருக்கவும். முவ்வாயிரம் வருஷம் இருப்பான், கொற கற்பம் முற்றும்.

<u>கோடா சூளிக் குளிகை:-</u>

இரசம் ஒரு பலம், பச்சை நாபி ஒரு பலம், அரிதாலம் ஒரு பலம், கெந்தகம் ஒரு பலம், கடுக்காய் ஒரு பலம், தானிக்காய் ஒரு பலம், நெலலிக்காய் ஒரு பலம், திப்பிலி ஒரு பலம், திரிகடுகு ஒரு பலம், இருபி ஒரு பலம், மரேசிஇலை ஒரு பலம், நேர் வாளம்.யஉ இவை எல்லாம் கையாந்த கரை சாறு வார்த்து அரைத்து நாள் ஒன்றக்கு பத்து நாழிகை அளவு அரைத்து இப்படி நாலு நாள் அரைத்து உளுந்தப் பிரமாணம் உருண்டை பண்ணி நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும். இதிலொரு உருண்டை பசுவின் மோராகுதல் எச்சங் காய் சாற்றிலாகுதல் இடக் கிராணி தீரும். விளக் கெண்ணெயில் வயிறு பேதிக்கு பண்ணி பின்னை இந்தப் படி அவுடதம் அருப்பானங்குடனே வியாதிகளுக்கு இடவும். எலுமிச்சம் பழச் சாற்றில் இட விஷம் மீளும். இஞ்சி சாற்றிலிட தேள் விஷம் மீளும். பசுவின் நெய்யில் இட வாதம் மீளும். பசுவின் பாலில் ஆகுதல் கையாந்த கரை சாற்றிலாகுதல் சுரம் போம். உழலை தீரும். வெள்ளாட்டு பாலில் இடக் கல்லெரிப்பு தீரும். எலுமிச்சம் பழ சாற்றிலிட காசம் போம். நெல்லிக்காய் சாற்றிலிட தாக சுரம் போம் கருப்பு கட்டியில் இட வெப்பாலை தீரும் சீனி சர்க்கரையில் இட பித்தம் போம். பழம் புளியில் இடச் சுரம் போகும். திப்பிலி கடுக் காய் தானிக்காய் நெல்லிப் பட்டை இவை எல்லாம் பொடி செய்து இட சர்வ வாதமும் போகும். வெற்றிலையில் இட சரீரம் அழகுண்டாம். தேனில் சரீரம் தாளிக்கும். திரிகடுகு வங்கமும் கட்டி இடகுலைவலி போம். குன்றி சாற்றிலாகுதல் எலுமிச்சம் பழ சாற்றிலாகுதல் விஷம் மீளும். முருங்கை வேர் சாற்றிலாகுதல் பசுவின் நெய்யாகுதல் இட குலை வலி போகும். தயிரில் இட அஜீரணம் போம். தண்ணீர் விட்டான் கிழங்கு சாற்றிலிட நீர் கடுப்பு நிற்கும். நெல்பொரியில் இட கெர்ப்பமுண்டாம். கொத்தமல்லிவிதை பசுவின் நெய்யிலிட விஷம் தீரும். வசம்பிலிட வாயு நடுக்கந் தீரும். கோமூத்திரத்திலிட கிரந்தி போம். இலவாக பட்டைச் சாற்றிலிட வீக்கம் போகும். பழந் தண்ணீரிலிட படர் தாமரை போம். நல்லெண்ணெயில் உரைத்து நிமையிலும் நெற்றியிலும் இட கண்ணேக்காடு போம். பாக்கு வெற்றிலையிலிட அஜீரணம் போம். காடி புள்ளி குக்கில் பசு வெண்ணெயில் கட்டி பின்னை பெத்தப் பிரசவ வலிக்கு இது போம். வசம்பு, கோஷ்டம், பெருங்காயம், இந்துப்பு, அசமதாகம் இவை தன்னிலொக்க கொண்டு பொடி செய்து எருக்கலம் பாலில் கட்டி இட சர்வ வாதமும் போகும். செண்பக பூவில் கொடுக்க உடம்பு நாற்றம் போம். வாய் நாற்றம் போம். கருங்காலி விரைத் தயிலம் இறக்கிட நீரழிவு தீரும். பாக்கில் கொடுக்க நீர் கடுப்பு தீரும். எலுமிச்சம் பழச் சாற்றிலரைத்து கண்ணிலிட மாசாட்டம், போம். கருப்பு கட்டியில் கொடுக் கண்ட சுத்தியாம். பழந் தண்ணீரில் கொடுக்க கண் மாசாட்டம், போம். கடப்பம் கொட்டையில் உரைத்து கட்டியிட கழுத்து கண்ட மாலை தீரும். ஜாதிக்காயில் கொடுக்க மூல வியாதி போம். மாசம் பட்டை சாற்றில் கொடுக்க செவ்வட்டைக் கடி போம். மஞ்சள் கிழங்கில் கொடுக்க வெண் குஷ்டம் போகும். சந்தனத்தில் கொடுக்க பெரும்பாடு போம். கொட்டை காந்தை சாற்றில் கொடுக்க மருந்தீடு போம். புரசம் விரையிலும் கருப்பு கட்டியிலும் இட மருந்தீடு

போம். சூலைக் கட்டு போம். சந்தனத்தில் கொடுக்க வெள்ளெருப்பு தீரும். வயறு கழிச்சலுக்கு விளவிலும் மகிழம் கொழுந்து காசித் தண்ணீரும் இட அற மாத்திரையில் வயறு கடுப்பு தீரும். மேல் மூச்சுக்கு ஆடாதோடை யிலை நொச்சி யிலை புட்டு கட்டி எடுத்துப் பிழிந்து கொண்டு அதிலே ஒரு உருண்டை இட தீரும். இருமலுக்கு தூதுவளையிலை குண்டை இலை சங்கிலை முருக்கிலை ஆடாதோடை செம்முள்ளி யிலை இவை எல்லாம் விட்டு கட்டி பிழிந்து அதிலே ஒரு உருண்டை இட தீரும். சூலை வியாதிக்கு மூலங் கிழங்கு தண்ணீரிலிட தீரும். தூதுவளையிலை இன்புரல் ஆடாதோடை இலை, செம்முள்ளி இலை, நொச்சி யிலை கருங்க இலை, அத்தியிலையும் ஒவ்வோர் பிடியாக கொண்டு பொரு பொருவை வச்சேல வத்துப் பிழிந்து சாத்தி வைத்து வெதம் விதிப்பாக கொடா குளிகை மிக அரைத்துத் திப்பிலி மேல் பொடியும் தூவி கொடுக்க உளமாந்தை, சுவாசம் போம். வாத சிலேத்தும வாய்வு எல்லாம் கோடா குளி மருந்து தானே இது வெல்லாம் சுத்தி பண்ணித் திங்களக்கிழமையிலுள் காலமே சுத்தி பண்ணி உபவாசத்தோடே இருந்து கைம்பாந்த கரை சாறு விட்டு நாள் ஒன்றுக்கு பத்து நாழிகை அளவு அரைத்து செவ்வா புதன் வியாழன் வெள்ளி நாளன்று நாலும் தினம் இந்தப் படி உபவாசத்துடனே அரைத்து எடுத்து மருந்து சுடாமல் கல்லில் இருக்க விட்டு நாலாம் நாள் உருந்தப் பிரமாணம் உருண்டை பண்ணி நிழலில் உலர்த்தி எடுக்கவும்.

சுர உருண்டை:-

பொன்னரி தாரம் ஒரு பலம், துத்தம் ஒரு பலம், துருசு ஒரு பலம், கெவுரி பாஷாணம் ஒரு பலம், இரசம் ஒரு பலம் இவை பொன்னுமத்தைச் சாறு ஜாமக்கு சாறு வார்த்தரைத்து குன்றி பிரமாணம் உருண்டை பண்ணி செப்பு வட்டிலகையில் உலர்த்தி வைத்து சுரத்தில் வயறு சுளுந்திலத்து நொந்து நொந்து கணக்கு இருந்தால் அன்று கடைந்த மோரிலே ஒரு உருண்டை இட அம காரத்தில் வயறு கழியாமல் வெதுப்பு பொறுக்க வேண்டினால் ஒரு உருண்டை பழ மோரிலே உரைத்துக் கொடுக்கவும். குளிரும் வெதுப்பும் வந்தால் இள வெந்நீரிலே ஒரு உருண்டை உரைத்திட சுரம் தீரும்.

தாப சுரத்துக்கு:-

துத்தம், துருசு, திப்பிலி, நெருவிஷம், அரிதாரம், வெள்ளை பாஷாணம் இது தன்னில் ஒக்க கொண்டு ஊமத்தை இலை சாறு வார்த்தரைத்து மிளகுப் பிரமாணம் உருண்டை பண்ணி நிழலில் உலர்த்தி வைத்து ஒரு உருண்டை முலைபாலில் இட தாப சுரம் தீரும். இதற்கு பத்தியம் பால் கஞ்சியும் சோறுமிடவும்.

தாப சுரத்துக்கு:-

வெள்ளை பாஷாணம் ஒரு பலம், கெவுரி பாஷாணம் ஒரு பலம், துத்தம் அரை பலம் வெங்காரம் பணவிடை, இரசம் இவை பாவ இலை சாறு வார்த்து அரைத்து பயறு பிரமாணம் உருண்டை பண்ணி வைத்து ஒரு உருண்டை குளிர்ந்த தண்ணீரிலிட இதுக்கு மற்றும் வெந்நீரில் கொடுக்க தாப சுரம் தீரும்.

விரோசனத்துக்கு:-

பச்சை நாவி.1, சாதிலிங்கம்.1, வெங்காரம்.3 நேர்வாளம்.4 பலம் இவை கூட்டி சிறுக்கீரை வார்த்தரைத்து குன்றி பிரமாணம் உருண்டை பண்ணி வைத்து ஒரு உருண்டை வாழைப் பழத்திலிட வயிறு கழியும். வயிறு வீங்கி கையும காலும் சால வீங்கி இருந்தால் செருப்படியும் கடுக்காயும் மஞ்சளும் இவை மூன்றும் கூட்டி அரைத்து கோமூத்திரத்தில் பிசைந்து வடித்து கொண்டு முற்பட்ட குளிகை ஒன்று இட வயிறு கழிந்து கை கால் வீக்கமும் வாடும். இதுக்கு பத்தியம் மோருஞ் சோறும்.

சீத சுரத்துக்கு:-

இரசம், ஊமத்தைச் சாறு விட்டு மத்திக்க நீரும். இந்த ரசம் ஒரு பலம் மஞ்சிலை ஒரு பலம், கெந்தகம் ஒரு பலம், அரபொடியிலே நாவல் பட்டையும் மருதம் பட்டையும் வைத்து சாறு கொண்டு அரிப் பொடியில் வார்த்து வெய்யிலில் வைக்க பற்பமாம். இந்த பற்பம் ஒரு பலம் இது வெல்லாம் கூட்டி பொடி செய்து ஒரு பணவிடை பொடி மோரிலாகுதல்

சுக்கு தண்ணீரில் கொடுக்க சித்த சுரம் நிற்கும்.

<u>சுரத்துக்கு நெய்</u> :-

சீதேவியார் செங்கழுனீர் சாறு முன்னுழி இதக்கு பசுவின் நெய் இரண்டு நாழி, இதக்கு கற்கம், ஏலம், லவுங்கம், அதிமதுரம், சாதிக்காய், கிரும்பு, சாஸ்திர வேதி, கொத்தமல்லி, சாதிப்பத்திரி நாகப்பூ மரமஞ்சள் சிறுதேக்கு தேவதாரம், திப்பிலி கடுகு ரோகணி சந்தனம் பசுவின பால் இவை

<u>எதிர் கவிகை சூனம்</u> :-

வயற்று புத்து குன்மம். இது சூனம் செரியாமல் வரும் உடம்பு அசந்தும் மனம் துவண்டும் வரும் வுலா புறத்திலே ஊசி இட்டு குத்தினது போல் சிவுக்கு சிவுக்கு என்று நோகும். நீர் கழியும். பின்ப சலம் அடைக்கும். வலப் புற விலாவி நோகும். பெருங்காயம் மூன்று பலம் இந்துப்பு மூன்று பலம், சுக்கு, மிளகு ஆழாக்கு சன்ன சாலே கடுகு ஆழாக்கு கல்லுப்பு ஆழாக்கு வெங்காயம் ஒரு பலம் இவை எல்லாம் பொடி செய்து வெள்ளாட்டு ஈரலில் ஒக்கப் போட்டு அரைத்து வைப்பது. நிற்றம் தாந்தாலே ஒரு நெல்லிக்காய் பிரமாணம் மருந் தின்ன எள்ளு கழுவிய தண்ணீர் போல் சலங் களியும். எதிர் கவிசை முற்று.

<u>பக்க கவிசைக்கு விக்கத்தில் கட்டுவது</u> :-

செங்கொடி வேலி வேர், வசம்பு அரைத்து பூசி திரித் தண்டு நெருக்க கட்ட பக்க கவிசை நிற்கும்.

<u>அருவைக்கு மேல் கவிசைக்கு</u> :-

இரண்டு பழ விடத் தேங்காய் கொண்டு வந்து உடைத்துத் திருவி பால் பண்ணி இந்த பாலில் கொன்றை கொழுந்து ஒரு பிடி நில ஆவிரை வேர் ஒரு பிடி இது இரண்டும் நசுக்கிப் பாலில் போட்டு காய்ச்சி நெய்யாம். அந்த நெய்யை நக்க இடவயிறு கழிந்த மற்ற நாள் வெற்றிலே போல் இருக்கிற எரியால் இலே பறித்து வந்து ஒரு சூண்டு வட்டி நிறைய அமுக்கி வயிற்றில் வியாதி இருக்கிற பிறத்தே கவிழ்த்து ஒரு சீலே கொண்டு கட்டி வைக்க அந்த வியாதி கூப்படும். கூப்பிட்டு அமந்த பின் அவிழ்த்து போட்டு இப்படி மூன்று நாள் கட்டி அவிழ்த்து போடவும். பின்பு 7 நாழி என்ணெயில் சொதுகத்தாரி வேர் அலிசி வேர் நொச்சி வேர் கொடிவேலி வேர், பிறத் தொலம் கிா வேர் இலை தன்னில் ஒக்க கொண்டு கோமூத்திரம் வார்த்து அரைத்து நாழி என்ணெயிலே எரித்து பதத்தில் வடித்து வைத்து முன் உவருக மருந்து கட்டி அவ்வது இந்த என்ணெ நக்கி வர ஆருவை மோக விசை இவை கறந்சு போம். இது கை கண்டது.

<u>பொடி</u> :-

நாழி, கள்ளிப் பூ நாழி பதாவல்லி சமூலமும் பொடி நாழி மிளகு பொடி உழக்கு சுக்கு பொடி, உழக்கு இந்துப்பு, உழக்கு எட்டி காய் நாற் கழஞ்சு வெள் வெங்காயம் உரி இவை எல்லாம் கூட்டி பொடி செய்து அரைத்து சுண்டாங்கி பண்ணி வைத்து நித்தம் தின்ன அருவை கரையும்.

(வேறு) வயிற்றில் விப்புருதிக் குணம் கண்டால் இரத்தம் விழும். கை குடந்து உடம்பு வலித்து கீழ் வயிறு முன்னிட்டு குத்திறப் போல் இருக்கும். தலே வலிக்கும். உடம்பு வெதும்பும். மின் னெழி போல் உலேச்சு வலிப்பாயி உடம்பெல்லாம் எழுந்திருக்கும். சோறு வேண்டிஇராது. நித் திரை வராது. இதக்

<u>இதுக்கு மருந்து</u> :-

குப்பை மேனிச் சாறு, சாறணையிலே சாறு, எழுத்தாணி பூட்டுச சாறு பேய் கொமட் டிக் காய் விரை வாங்கிப் போட்டு உள்ளில் சதையை இந்த சாற்றில் அரைத்து இதில் ஆழாக்கு கள்ளிப் பால் வார்த்து வசம்பு வெள் வெங்காயம் கூட்டி அரைத்து மேற் கெண்ணெயில் எரித்து மூன்று நாள் இரண்டு காசத்தனே என்ணெ நக்க வயிற்று விப்புருதி உடையும். சீரிப் புழுவும் விழும். திரு மேனி புழும் விழும். விப்புருதி உடைந்ததன் பிறகு பிசின் பிரண்டை கிழங்கும் கரிப்

பிரண்டை வேரும் ஒரு விளாங்காய் மாத்திரம் அரைத்து சுக்கு, மிளகு, வெள் வெங்காயம், கல்லுப்பு இவை தண்ணீரில் ஒக்க கொண்டு ஒரு விளாங்காய் மாத்திரம் அரைத்து சற்று நல்லெண்ணை கூட்டி மோரிலே கலாச்சி மூன்று நாள் உண்ண மடிவாதம் வயத்திலே விப்புருதி இவை பைய்யோடே விழும்.

ஒரு விப்புருதிக்கு :-

குமிளம் வேர் பாவட்டை வேர் கொடி வேலி வேர், குறிஞ்சா வேர் இவை தண்ணி லொக்க கொண்டு அரைத்து எருமை பாலிலே சொலுக்கி மூன்று நாள் உண்ண இதுக்கு தீரும் வியாதி ஒரு விப்புருதி வெப்பாலை, நீராமை, பெரு வயறு, வயிற்றிலுண்டான வியாதிகள் எல்லாம் தீரும். இது கை கண்டது.

கரப்பான் செய்யுங் குணம் :-

செவ்வாப்பு முற்றிலல் கரப்பா நென்றறிக. இதுக்கு குணம். அடை, இடுப்பு, முகம், மெல்லாம் எழுந்து சிவந்து சிவந்து இருக்கும். உடம்பெல்லாந் தடித்திருக்கும். செவ்வட்டை கடி போல் சிவந்து தடித்திருககும். ஒரு இடத்திலே புறப்படு மாப் போல் இருக்கும். கொடி வழுதங்காய் போலே கண்டியிருக்கும். சற்றே வெதைப்பு வரும்.

இதுக்கு மருந்து :-

கொடிவேலி வேர், முன் காவிளை வேர், சத்தி சாறணை வேர், புளியன் பிறண்டை வேர் செல்ல கோவைக் கிழங்கு குரட்டை கிழங்கு, காட்டு சாறணைக் கிழஙகு, அவுரி வேர், கோழியாவரை வேர், மூக்கறட்டை வேர், மிளகறணை வேர், தலை சுத்தி வேர், வக்கணம் பட்டை, விழும்பி வேர், கடுக்காய், வசம்பு, வெள் வெங்காயம் இவை கூட்டி இடித்து நெய்யா குதல் விளக் கெண்ணை ஆகுதல் வார்த்து பதத்தில் வடித்து உள்ளுக்கு நக்க மேலுக்கு பூச கரப்பான் தீரும். இது மிதாற்வெவிலே மிளக்க வேணும். முத்தி நெஞ்சிலே கட்டினுல் மீளாது.

இதுவும் கரப்பானுக்கு :-

வேம்பாடம் வேர், முடக் குருந்தம் பட்டை, வேப்பம் பட்டை, புங்கம் பட்டை உசிலம் பட்டை, கொல்லன் கோவைக் கிழங்கு சிறு குறிசா வேர், வளமரம் பட்டை பொன முசுட்டை வேர், கழச்சி வேர், அவி வேர், முடப் பிடத்தி வேர், சூட்டை வேர், வெள்ளை காவளை வேர், கருத்தூரை வேர் பட்டை ஞெருகொட்டை வேர், சிற்றவரை வேர், வசம்பு, வெள் வெங்காயம், சாதாணம் கருஞ்சீரகம், பூதாவிருக்கம், குங்குலியம், வெள்ளிச்சிப் பிசின், கத்திரி மஞ்சள் இவை தன்னில் ஒக்க கொண்டு நசுக்கி விளக் கெண்ணையில் எரித்து இந்த எண்ணை உள்ளுக்கு நக்கி மேலும் பூச கரப்பான் தீரும். புண்ணுளதும் தீரும்.

கரப்பானுக்கு :-

மாதளை வேரும், சிறு வரைக் கிழங்கும், செந்நாயுருவி வேரும், பசுவின் நெய்யில் எரித்து நக்க இட்டு மேலும் பூச கரப்பான் தீரும்.

குடல் வாதத்தக் குணம் :-

ஒரு பிச்சதை ஏர் பற்றி வலிக்கும். இரங்க பற்றி இசிஞ்சாப் போல் வலிக்கும். கீழ் வயறு பொருமும். வயறு கள கள வென்று மின்னி மினிர்தாப் போல் வயற்றை எங்கும். பொருமும்.. உலழ்க்கும். சோறு செரியாது. தாகமில்லை. தலை நடுக் கென்று நோக்கும். காலோஞ்சிருக்கும். இடது புறத்து புறங்கால் ஓய்ந்திருக்கும். இதுக்கு ஒரு இடது புறங் காலில் சிறு விரலில் மொழியில் நரம்பில் ஒரு கோல் வைக்கவும். வலது பக்கத்தில் அரையில் நாடியில் மொழியில் ஒரு கோல் வைக்கவும். குடல் வாதம் மீளும்.

இதுக்கு மருந்து :-

ஆடு தின்னு பாளை இலை குறுவை அரிசியில் இடித்து களி கிளறி எலுமிச்சங்காய் அளவு தின்ன கருப்பு கட்டி நெய் பருப்பு பொடி செய்து சாறணை இலை சாற்றில் பிசைந்து கலத் தில் தப்பி வெய்யிலில் வைத்து சீலையில் இட்டுப் பிழிய எண்ணை போல் விழும். இந்த தைலத்தை வெற்றிலையில் தடவித் தின்ன குடல் வாதம் பொரி வாதம் தீரும்.

இசிவும் குடல் வாதத்துக்கு:-

நல்லெண்ணெய், வேப்பெண்ணெய், இலுப்பெண்ணெய், புங்கெண்ணெய், விளக்கெண்ணெய் இலங்க யிலை முதியார் கூந்தல் விழுதி யிலை, கொடிக் கவழல் யிலை, முடக் கொற்றான் யிலை, புங்கன் கொழுந்து சாறணை யிலை மாவிலிங்க யிலை, முருங்க யிலை, நொச்சியிலை இவை ஒவ்வொன்றும் ஒரு பிடி அளவு கொண்டு கழல் மணி பத்து வெள் வெங்காயம் நாழி, பெருங் காயம் கு இந்துப்பு கு பலம், திப்பிலி மூன்று பலம் இவை எல்லாம் சாறணை சார் வார்த்து அரைத்து ஐந்தெண்ணெய் கூட்டி எரித்து பதத்தில் வடித்து நக்க குடல் வாதம் தீரும்.

அமுத சர்க்கரை சூரணம்:-

அமுத சர்க்கரை விலாமிச்சம் வேர், அமுக்கிரா வேர் இருவேலி வேர், நெருஞ்சி வேர், செப்பு நெருஞ்சி வேர், நன்னாரி வேர், முத்த காசு, தாமரை வளையம், மருதில் பூ, உலகந்தாம் ஆவாரை வேர் பட்டை இதின் பூவுங் கொழுந்தும் விரையும் ஆலம் விரையும், முசுட்டை விரை அத்தி விரை இவை தன்னில் ஒக்க கொண்டுஒரு கூறு அமுத சர்க்கரை சீரகம், கருஞ்சீரகம், தாளிசப் பத்திரி, கோஷ்டம், திரிகடுகு, திரிபலம், ஓமம், ஏலம், அரேணுகம், முந்திரிகை பழம், பேரீச்சம் பழம், குங்குமம், நாகப்பூவு ஜாதிக்காய், சந்தனம், கற்பூரம், அதிமதுரம், கற்கடக சிங்கி, இவை தன்னில் ஒக்க பொடி செய்து முன் சொன்ன வேர் விரை உள்ளதுகளை வடி கொண்டு சீந்திப் பொடி ஒரு கூறும் கண்ட சரக்கு பொடி ஒரு கூறும் வேர் விரையும் கூட்டி பொடி செய்து ஒரு கூறும் ஆக மூன்றும் இதுக்கு சரி சர்க்கரை கூட்டி கலந்து வைத்துக் கொண்டு இது ஆள் காயத்துக்கு தேனிலும் இளச் சார்ந்துக்கு நெய்யிலும் ஒரு வெருக் கடி பிரமாணம் கொள்ள தீரும் வியாதி காமாலை, பாண்டு ரோகம், கருங்குட்டம், ரெத்த பித்தம், கால் கை எரிப்பு பிரமியம் நீர் கடுப்பு, உடம்பு கடும் இவை எல்லாம் தீரும். இது கை கண்டது.

சீதேவியார் செங்கழு நெய் நோவுக்கு:-

சீதேவியார் செங்கழுநீர் வேர் பலம் இருபத்தி நான்கு, பொன்னாங்கண்ணி வேர் கற்றாழை வேர், இலாமிச்சம் வேர், வெட்டி வேர், நீர் பூலா வேர், குன்று மணி வேர், சீந்தி வேர், செங்கழு நீர் கிழங்கு, தாமரை வளையம் ஆக இவை வகைக்கு பலம் ஐந்துமாக கூட்டி இடித்து இரு நாழி நீர் விட்டு குறுணியாக காய்ச்சி பிசைந்து வடித்து இதுக்கு கற்கம் ஏலம் இலவங்கம் செண்பகப்பூ, கோஷ்டம், அதிமதுரம், சந்தனம், இலாமிச்சம் வேர், சந்தனக் காசு, முத்தக் காசு, கடுகுரோகணி நாகப்பூ, நன்னாரி வேர், இவை வகைக்கு பலம் மூன்று கொண்டு முந்தின கசாய நீர் வார்த்து அரைத்து கரைத்து இதிலே பசுவின் நெய் நாழி புகட்டி எலுமிச்சம் பழச் சாறு மூன்று படி புகட்டி மூன்று நாள் [illegible] மெழுகு பதத்தில் வடித்து தலைக்கு வசித்து கட்டி தலை நோவும் மண்டை வியாதியும் தீரும்.

வியாதி பலதுக்கும் நெய்:-

நாவல் பட்டை பலம் அறுபது உலர்த்தி பொடித்து இரு நாழி நீர் விட்டு கசமற பாகமாக காய்ச்சி பிசைந்து சீலை வடி கொண்டு இதுக்கு கற்பம் அதிமதுரம், வெள்ளி பாத்திரம், இலவம் பிசின், தாமரை வளையம், செங்கழு நீர் கிழங்கு, முந்திரிகை பழம், பேரீச்சம் பழம், வெட்பாலை அரிசி, கார்த்திகைப்பூ, கண்ட சக்கரை விளாவரிசி, மாதளை பிஞ்சு, பங்கம் பாலை வேர், முத்தக் காசு, ஓமம், மாங்கொட்டை, நாவல் கொட்டை கொட்டி கிழங்கு பன்றி மோத்தான் கிழங்கு விளாம்பிசின் வறன் தன்டில் இவை வகைக்கு பலம் நான்கு கொண்டு அரைத்து கரைத்து நாழி நெய்யும் புகட்டி மூன்று நாள் வெந்து பதத்தில் வடித்து கொள்ள தீரும் வியாதி ரத்த பித்தம், அதிசாரம், பெரும்பாடு வெண்மாசு, எலும்புருக்கி, கிராணி இவை தீரும்.

வியாதி பலதுக்கும் பஞ்ச திரவிய நெய்:-

சித்தாமுட்டி வேர் பலம் இருபத்தி நான்கு இடித்து இரு நாழி நீர் விட்டு நாலிலொன்றாக காய்ச்சி பிசைந்து வடிகட்டி இதுக்கு பெரு வாகை வேர் பெருங் குமிழ் பாதிரி வில்வ வேர் கொன்று, சிற்றாமல்லி, பேராமல்லி சிறு வழுதிலை, கண்டங்கத்திரி

நெரிஞ்சி வேர் இவை வகைக்கு ஆறு பலம் இடித்து ஆவி நீர் விட்டு குருணியாக காய்ச்சி பிசைந்து வடித்து இதுக்கு பசுவின் நெய் நாழி இதுக்கு கற்கம் அரத்தை மரமஞ்சள் மஞ்சட்டி சந்தனம், நன்னாரி வேர், கோஷ்டம், சதகுப்பை இந்துப்பு, செவ்வியம், அதிமதுரம் சாறணை வேர், அமுக்கிரா வேர், நீர் வள்ளிக் கிழங்கு, பலகோவை கிழங்கு, திரிபலம், ஓமம், ஏலம், இலவங்கம், கோஷ்டம், பெருங்காயம், கொடுவேலி வேர், செவ்வியம் இவை ஒவ்வொன்றும் மூன்று பலம் கொண்டு முந்தின கசாயம் நீர் வார்த்து அரைத்துக் கரைத்து சதுர கள்ளி பால் உழக்கு கருப்பு கட்டி பலம் ஒன்று, தயிர் நாழி கொடுந்திர நாழி, சாவகச் சாறு நாழி, நெய் மூன்று நாழி, கூட்டி கலந்து மூன்று நாள் வெந்து பதத்தில் வடித்து வைத்து ஒரு காசளவு நக்க இதுக்கு தீரும் வியாதி பெருவயறு, வயறு பொருமல், குடல் வாதம், வயிற்று விப்புருதி, உடம்பெல்லாம் வீங்கினது இவை எல்லாம் தீரும். மஹா பஞ்சாங்க கிருதம் முற்றும்.

<u>வேம்பின் கற்பம்:-</u>

வேப்ப மரம் முற்றினது மரத்தின் வேர் ஆழத் தோண்டி நடு விருந்த வேரை நறுக்கி அதின் கீழே பழகின யானையை வைத்து அந்த குழியை மண் கொண்டு மூடி வைக்கவும். அந்த பானையில் தயிலம் இறங்கும். அந்த தயிலத்தில் கடுக்காய் பொடியும் கஞ்சாப் பொடியும் போட்டு பிசைந்து அதில் ஒரு சீப்பு பேயன் வாழைப் பழம் போட்டு வைக்க காயாம். அந்த காயை ஒரு மண்டலம் கொள்ள காயா முத்தியாம். காற்று, வெய்யில் படாமல் கிருமத்துடன் கொண்டு வரவும். பூசா விதி செய்து ~~[illegible]~~ கொள்ளவும்.

வியாதி பலருக்கும், கையாந்த கரை என்னை கையாந்த கரை சாறு மருணி இதுக்கு கற்கம் வெட்பாலை அரிசி, பெருங் குரும்பை சிறு தேக்கு, கடுகுரோகணி பெரு மரப் பட்டை, திரிகடுகு, அதிமதுரம், ஏலம், செவ்வியம், பங்கம் பாளை வேர், நற்சீரகம் அசமதாகம், விளச்சி சிறு வசம்பு பெருங்காயம், அத்தி, திப்பிலி சிறுமூலகம் கொடிவேலி வேர், ஈக அவை ஒவ்வொன்றும் மூன்று பலம் கொண்டு அரைத்து கரைத்து நல்லெண்ணை, மூன்று நாழி கூட்டி மூன்று நாள் வெந்து நாலாம் நாள் பதத்தில் வடித்து காசளவு என்னை கொள்ள இதுக்கு தீரும் வியாதி கூய சத்தி வாதம், சேற்றும விகாரம், இருப்பு சூரையும், குன்மமும், மூல ரோகமும், கிரியும் தொஷமாகிய ஜன்னியும் இவை எல்லாம் தீரும்.

<u>அதப்பை நோவுக்கு:-</u>

சருவாங்கமும் வீங்கும்.

<u>இதுக்கு மருந்து</u>: கிளி முக்கின் கிழங்கு, ஆட்டு கோமயத்தில் அரைத்து குடிக்க வயிறு கழியும். [illegible] பெரும் குறட்டை கிழங்கு வெள் வெங்காயமும் விளக்கெண்ணையில் எரித்து நக்க அதப்பை நோவு, வீக்கமும் வாடும். இது கை கண்டது.

<u>பெருந்தலை நோவுக்கு குணம்:-</u>

தலையை நருக்கு நருக்கு என்று நோவும். செவி சில்லென்றுயிருக்கும். புருவம் நொந்திருக்கும். நாசியிலே தண்ணீர் விழும். பிடரி சுற்று கழுத்து நொந்திருக்கும். கண் விழி யொட்டிருக்கும்.

<u>இதுக்கு மருந்து</u>:- செங்குருவி இலை, பாகயிலை, வெள் வெங்காயம், வசம்பு இவை எல்லாம் கூட்டி நருக்கி சிறுநீரில் நசியம் பண்ண பெருந்தலை நோவு தீரும்.

<u>இரத்த ரோகத்து குணம்:-</u>

மலங் கழியும் போது இரத்தமாய் விழும். கை கால் ஓய்ந்து வரும். உடம்பு வற்றியிருக்கும். ஊண் குறைந்திருக்கும்.

<u>இதுக்கு மருந்து</u>:- புன்னைக்கிலை ஒரு பிடி பறித்து வந்து வெள் வெங்காயம் சமன் கூட்டி அரைத்து எருமை தயிரில் மூன்று நாள் குடிக்க இரத்த ரோகம் தீரும்.

<u>பித்தத்தின் குணம்:-</u>

சிரித்து வரும், தலையை சுழற்றும். பேய் பிடித்தது. கண் மசண்டிருக்கும். கையை கொட்டி பாடுவதும் கண் விழியா தொழிவதுவும். அம்மையை உதை வலிப்பதும் வேண்டா

தெல்லாம் வேண்டி கத்துவதும் கையை சரியா நொடிப்பதும் பலவாகப் பிதத்தும். மையை புரையாய மடந்தை நல்லா யிருந்தால் பித்தத்தின் குணமிது.

இதுக்கு_மருந்து:- 23.3.63.

தாமரை விழுது சீவிப் போட்டு சிறுசாகப் பிழிந்து அரைத்து பிழிந்த சாறு கொண்டு சர்க்கரை யிட்டு ஒரு நாள் குடிக்கவும். பித்தம் நீங்கும்.

பித்து_பிடித்துவதற்கு:-

நிலவேர் ஒரு சேரை எடுத்து மஞ்சளவிப் போட்டுப் பசுவின் பாலில் அரைத்து ஒரு பச்சை பாக்கு மாத்திரம் கரைத்து சர்க்கரையும் போட்டு மூன்று நாள் குடிக்க பித்தமும் மறுகும் நீங்கும். இது கை கண்டது.

சர்க்குருவித் தலையும் தெற்றுன் கொட்டையும் அரைத்து முலைபாலில் குடிக்க பித்தம் தீரும்.

பித்தத்துக்கு பசுவின் பால் நீர் படாமல் கறந்து இதில் நாயுருவி வேர் சிறுக்கீரை வேர், குன்றுமணி வேர் இவை ஒவ்வொன்றும் எலுமிச்சங்காய் மாத்திரம் அரைத்து மூன்று நாழி பசுவின் பாலில் கரைத்து தயிராகத் தவைச்சு மற்று நாள் தடைந்து வெண்ணை எடுத்து இந்த வெண்ணையில் ஏலம், லவுங்கம், அதிமதுரம், கோஷ்டம், சாதிரை பேதி, இவை சம பாக மாக சர்க்கரையும் மூன்று நாள்குடிக்க பித்த நீங்கும். முத்தின் வாழை வேர் பட்டையும் எருமை மோரும் சர்க்கரையும் மூன்று நாள் குடிக்க பித்தம் தீரும்.

பித்தமாயித் தலை மயிர் கழிகிறதுக்கு தலையை வலிக்கும். மயிர் திறைந்து போம். கண் மசண்டிருக்கும். நெஞ்சு கனத்திருக்கும். வயிறு எரிக்கும். விழுகிடும். உடம்பு கனத்துத் திமித்து இருக்கும். சொல்லுகிறது செவியிற் புகாது.

இதுக்கு_மருந்து:-

பிறபிக் கொழுந்து ஒரு பிடி, கையாந்த கரை ஒரு பிடி, கடுக்காய் நாலு விரை போக்கிப் பொடி செய்து ஒக்கப் போட்டுச் கோமியத்திலே குடிக்க வயிறு கழியும் நன் றாய் வயிறு கழிற தருவாயிலே வெள்ளையவரை இலையும், பறைத் தோரிலை ஊவைத்து தலை யிலே பிழிந்து கையிலும் பிழிந்து தேய்க்க பித்தம் வராது.

பித்தத்துக்கு சுரைக் கொழுந்து அவைத்து பசுவின் பாலில் பிசைந்து வடித்துச் கொண்டு சர்க்கரை போட்டு குடிக்க பித்தம் தீரும்.

பித்தமாய்_தலை_மயிர்_கழியிறதுக்கு_எண்ணை_வடிக்க:-

குன்று மணியிலை சாறு புளி இலை சாறு, கற்றுளை வேர் அவைத்த சாறு கொண்டு இவை ஒவ்வொன்றும் நாழி சாறுக கொண்டு செண்பக மொட்டு நெல்லிக்காய் தாமரை வளை யம் செங்கழுநீர் கிழங்கு, சீந்தி தண்டு அதிமதுரம், முத்தக் காசு, நாகப்பூ, தற்கோலம், கோஷ்டம், குடப் பாலை வேர், ஏலம், லவுங்கம், கார்போகரிசி, மரமஞ்சள், தானிக் காய், தக்கோலம், அகில் மலை மஞ்சள், மஞ்சட்டி இருவேலி வேர் இலாமிச்ச வேர், கண் வேந்திரம் இவை ஒவ்வொன்றும் முனை பலம் கொண்டு அரைத்து கரைத்து பசுவின் பால் நாலு படி, நீர் பூலாயிலைச் சாறு நாழி இதிலே நல்லெண்ணை படி நாலு கூட்டி மூன்று நாள் வெந் பதத்தில் எடுத்து உடம்பு எங்கு மிட்டு தலைக்கும் அடிக்கடி இட்டு தேய்க்க தலைமயிர் பிரியா உள வெக்கையும், பித்தமும் தீரும்.

பித்தத்துக்கு_எண்ணை_வடிக்க:-

சிற்று மட்டி வேர், சீந்திக் கொடி, நன்னாரி வேர், முத்தக் காசு, நெல்லிக்காய் இவை ஒவ்வொன்று இருபது பலம், செண்பகப்பு, சந்தனம் இருவேலி வேர், இலாமிச்சம் வேர் இவை ஒவ்வொன்றும் இரண்டு பலம் கொண்டு முன் சொன்ன மருந்து இரவும் ஒக்க கூட்டி இடித்து தூணி பதக்கு நீர் விட்டு நாலில் ஒன்றாக காய்ச்சிப் பிசைந்து வடித்துக் கொண்டு இதுக்கு கற்கம் ஏலம், லவுங்கம், நாகப்பூ, பச்சிலை, அதிமதுரம், கடுகுரோகணி, சாதிக்காய், மரமஞ்சள், தற்கோலம், செண்பகப்பு, செவ்வள்ளிக் கொடி, கத்திரி மஞ்சள்,

மம், சந்தனம், வெட்டி வேர், விலாமிச்சை வேர், நன்னாரி வேர், தாமரை வளையம்
கழுநீர் கிழங்கு இவை ஒவ்வொன்றும் ஒ பலம் கொண்டு அரைத்துக் கரைத்து இதிலே
படி நல்லெண்ணெயும் புகட்டி மூன்று நாள் வெந்து நாலாம் நாள் பதத்தில் வடித்துக்
கிட்டு தேய்த்து முழுக பித்தம் தீரும்.

பிரமியத்துக்கும். பிரமிய சீழ் விழுகிறதுக்கும். கடுக்கு கடுக்கு என்று நோவுகிறதுக்
கு:-

புளி இலை ஒரு பிடி தண்ணீரில் காய்ச்சி பிசைந்து சீலை வடி கொண்டு இந்த சாற
்கு வெள்ளாடு கருத்த ஆட்டுப் பால் உரியும் கூட்டி சர்க்கரையும் இட்டு குடிக்க பிரமியமி
ும்.

<u>ல பிரமியத்துக்கு:-</u>

கல்நார், கிரக்கீரை வேர், சர்க்கரை, சிந்தாமுட்டி ~~செ~~ வேர், சிறுபீளை வேர்,
ரங்கோரை விரை, நீர்முள்ளி வேர், பொன்னாங்கண்ணி வேர் இவை தன்னில் ஒக்க கொண்டு
ின் பால் வார்த்து அரைத்துகுடிக்க சுக்கில பிரமியம் நிற்கும்.

<u>ல பிரமியத்துகளு நெய் வைக்க:-</u>

செங்கழுநீர் கிழங்கு, தாமரை வளையம், இவை ஒவ்வொன்றும் ஒரு பலம்,
ரிகை பழம் ஐந்து பலம், அதிமதுரம் ஐந்து பலம், கோஷ்டம் ஒரு பலம், குன்று மணிச்
உரி, பருத்தி இலை சாறு நாழி, கிரக்கீரை சமூலமும் அவைத்து பசுவின் பால் வார்த்து
ந்த சாறு நாழி, பொன்னாங்கண்ணி சமூலமும் நவைத்து பசுவின் பால் வார்த்து பிசைந்து சாறு
முன் சொன்ன மருந்தெல்லாம் இந்த சாற்றில் அரைத்துக் கரைத்து இரு நாழி பசுவின்
கூட்டி மூன்று நாள் வெந்து நாலாம் நாள் பதத்தில் வடித்து நாள் ஒன்றுக்கு முக்கழஞ்சு
நக்கவும். சுக்கில பிரமியம் நிற்கும்.

<u>ல பிரமியத்துக்கு நெய் வடிக்க:-</u>

ஓமணக்கன் கிழங்கு, பெண் பாலை கிழங்கு, தண்ணீர் விட்டான் கிழங்கு, நெருஞ்சி
மும் கிரக்கீரை சமூலமும் பொன்னாங் கண்ணி சமூலமும் மொசு மொசுக்கை சமூலமும்
ல தாமரை சமூலமும் தாமரை வளையம், செங்கழுநீர், கிழங்கு, நிலப் பனை கிழங்கு,
ழு விழுது, வல்லாரைச் சாறு ஒரு பிடி சீந்தி தண்டு இவை ஒவ்வொன்றும் பலம் வைத்துக்
ண்டு இடித்து தூளி பதக்கு தண்ணீர் விட்டு நாலில் ஒன்றாகக் காய்ச்சி பிசைந்து சீலை
கொண்டு இதற்கு கங்கம் ஏலம், லவங்கம், அதிமதுரம், சாதிக்காய், கிராம்பு,
ரகப்பு, கோஷ்டம், சந்தனம், இலாமிச்சை வேர், வெட்டி வேர், தேற்றான் கொட்டை
லி முள்ளி, சாஸ்திர பேதி இவை ஒவ்வொன்றும் மூன்று பலம் கொண்டு அரைத்து கரைத்து
நாழி பசுவின் நெய் கூட்டி மூன்று நாள் வெந்து நாலாம் நாள் பதத்தில் வடித்து
கொண்டு நாள் ஒன்றுக்கு மூன்று பலம் நெய் நக்க சீனியும் கண்ட சர்க்கரையும் அமுத
க்கரையும் கலந்து நக்க சுக்கில பிரமியம் நிற்கும்.

<u>நாள் மாறலுக்கு:-</u>

திரிகடுகு நெய்யும் எண்ணெயும் ஒக்க கொண்டு வேக வைத்து வெந்த பிறகு குளிர்ந்த
த்தில் மூக்கிலே விடவும். நாலு நாள் மாறலும் மூன்று நாள் மாறலும் சீத சுரத்தையும்
ும். நொச்சிச் சாற்றை மூக்கில் நசியம் பண்ணவும். கடுகு எண்ணெயை விடு. சிவ மரம்
சாறும் உள்ளி சாறும் விடு. சிவ மரம் சுக்கு உள்ளி நொச்சி சாறு காடி விடு.

சிவ மரம் மூக்கிலே விடவும். நாலு நாள் மாறல் மூன்று நாள் மாறல் சீத சுரம்
வெல்லாம் மாறும்.

பெரு வாதத்தின் இலைச் சாறும் நல்லெண்ணெயும் கூட்டி நக்க நாலு நாள் மாறல்
. சிறு தேக்கு முத்த காசு, பற்படாகம், சிறுகாஞ்சோரி ஆடாதோடை, சுக்கு, நில
ம்பு கோஷ்டம், திப்பிலி, முள்ளி வேர், சீந்தி தண்டு, வேப்பன் தோல் குடிநீராவது
ருத்தால் நாலு நாளை மாறல், மூன்று நாளை மாறல் ஒன்றுவிட்டு ஒரு நாள் வருகிறதும்

விடாமல் வருகிறதையும் விட்டு விட்டு வருகிறதையும் ஜ்வரமும் போக்கும்.

சிறு குறிஞ்சி வேர், சீந்தில் தண்டு, ஆடாதோடை முத்த காசு, கடுக்காய், ஓமம், தோல் சுக்கு, இக்குடிநீர்க்கு மேல் பொடி கண்ட சர்க்கரை இட்டு குடிக்க மாறல் போக்கும்:

சிறு தேக்கு பாலைகா மூலம், கடுக்காய், பற்பாடகம், முத்த காசு, சுக்கு ~~திப்பிலி~~ மூலம் பத்ரம் இக்குடிநீர் நாலு நாளை மாறல் விட்டு விட்டு வருகிறதும் விடாமல் வருகிறதும் ஜன்னி வாத சுரத்தையும் கன்ன வெதுப்பையும் ~~போக்கும்~~. போக்கும்.

<u>இதுக்கு புகை:-</u>

கோழிக் காரமும, கோஷ்டமும், மீறம், வசம்பும், கடுகும், வேப்பம் இரை விறகிட்டு புகை காட்ட சீத சுரமும், மாறல் வகையும் போகும்.

வேப்ப இலையும், நாறத்தை இலையும் உள்ளியும் கூட்டி கருநீரில் காய்ச்சி முக்காடு இட்டு ஆவி கொள்ளவும்.

<u>மாறல் வகைக்கு:-</u>

குளிர் வெதுப்புக்கு ஆலம்பால் எருக்கம் பால், அத்திப் பால், வேலிப் பருத்திப் பால் இப்பால்களில் களிப் பாக்கை பிரட்டி வெத்திலையில் தின்ன நாலு நாள் மாறல் போகும்.

<u>ராம பாணம்:-</u>

இரசம்.2, நாபி.2, கெந்தகம்.1, இலவங்கப் பட்டை.1, சாதிக்காய் ஆறு கிராம் எட்டு இந்த ஆறு மருந்தும் சூரணம் பண்ணிப் பழச் சாறு வார்த்து அரைத்து நாலு நாழிகை அரைத்து மருந்து ஊறமல் வைத்து கொண்டு குன்றி பிரமாணம் குளிகை பண்ணி மூன்று மாதம் போக விட்டு சிலேற்பன சுரத்துக்கு இஞ்சி சாற்றிலிடவும். தாப சுரத்துக்கு மிளகு பதினெண்மம் பொடி செய்து ஒரு உருண்டை கூட்டி வென்னீரில் கொடுக்கவும். பயித்திய சுரத்துக்கு கொத்தமல்லிகைகூட்டி வென்னீரில் கொடுக்கவும். இருமலுக்கு திரிகடுகு கூட்டி தேனில் குழைத்து நக்கவும். இரத்த பிரமியத்துக்கு முத்த காசு, சந்தனம், சர்க்கரை கூட்டி கொடுக்கவும். பெரும்பாட்டுக்கு இப்படிக் கொடுக்கவும்.

<u>இரச மிருகாங்கிஷம்:-</u>

ரசம் எட்டு, நாபி ஏழு, கெந்தகம் ஆறு, வெங்காரம் ஆறு, நேர்வாளம் திரிகடுகு, கொடுவேலி வேர் இது வெந்த கசாயத்தில் அரைத்து பொடி செய்து பாளை யில் அடைத்துக் கொண்டு ஒரு நெல்லிடை நீர்க்கிருள் நீர் சர்க்கரை இது கூட்டி இடவும். சர்வ சுரமும் சன்னியும் நாசமாமே.

இதுவும் பொன்னரிதாரம் ஆறு கூட்டிக் கொள்ளவும்.

<u>காந்தாதி குளிகை:-</u>

காந்தகம், இரதம்; அரிதாலம், நாபி, கடுகுரோகணி இவை சமன் கூட்டி எலுமிச்சம் பழச் சாறு வார்த்து அரைத்து ~~கடுகளவு~~ கடுகளவு உருண்டை செய்து குமரிச் சாற்றி லாகுதல் மூலைப் பாலிலாகுதல் சுரம் நாலு நாலு நாழிகையில் விடும்.

<u>இதுக்கு கசாயம்:-</u>

சீந்தில், முத்தகாசு, கருவேம்பு, காக்சோரி பருத்த கொத்தமல்லி சுக்கு இக் கசாயம் இதுக்கு பத்தியம் பருப்பும், கஞ்சியும் சப்பை கஞ்சி கொடுக்கவும். ராத்திரி பத்தியம் முருங்க யிலை சாறு கூட்டவும். இது ராம பாணமே.

<u>ஜன்னி வாத தோஷம் இதுக்கு உருண்டை:-</u>

புள்ளி மான் கொம்பு சீவின பொடியன் ~~கலை~~ வெளி மான் கொம்பு, சீவின பொடி எட்டு நாபி நாலு கார்த்திகை கிழங்கு, நாலு கெந்தகம், இரதம் நாலு இது வெல்லா

கொண்டு கார்த்திகை கிழங்கு, கோமயத்திலே வைத்து சுட்டவும். இப்படி மருந்தெல்லாம் சுத்தி பண்ணி சுட்டிக் கொண்டு கொடுவேலி கசாயத்தில் ஏழு நாள் அரைத்து குன்றி மணிப் பிரமாணம் உருண்டை பண்ணி நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு தோஷ சாந்தகை ஜன்னி வாத சுரத்துக்கு கசாயத்தில் கொடுக்கவும்.

வியாதி அறிந்து அநுப்பானம் விசேஷத்தில் கொடுக்கவும். பத்தியம் இச்சாப் பத்தியம்.

<u>பயித்திய வாய்வுக்கு:-</u>

வெள்வெங்காயம் ஒரு சேரை மிளகு ஒரு சேரை மிளகை வறுத்துப் பொடி செய்து பிரண்டைச் சாற்றில் இந்த மிளகுப் பொடியும் வெள் வெங்காயம் அரைத்துக் குடிக்கவும். பயித்திய வாய்வு தீரும். கசப்பும், புளிப்பும் தவிர்க்கவும். இது கை கண்டது.

பேய் முட்டி வேர் பலம் பத்து, கடுக்காய் வேர், நெல்லிக்காய் வேர், தானிக்காய் மரத்தின் வேர், சிறு மல்லி வேர், பேராமல்லி வேர், வெட்டி வேர், விலாமிச்ச வேர், சிறுகாஞ்சொறி வேர், நன்னாரி வேர், ஆதவளை வேர், நுவளை வேர், மாதளை வேர், , தாமரைக் கிழங்கு, தாமரை வளையம், அல்லிக் கிழங்கு, பேய் வெட்டி வேர், நெய்தல் கிழங்கு, நிலயாவரை வேர் இந்த பதினெட்டு வேரும் தொண்ணூறு பலம் கூட்டி முந்தின பேய்முட்டி வேர் பத்து பலமும் ஆக நூறு பலம் கூட்டி நசுக்கி இடித்து ஒரு தூணி நீர் வார்த்து அஷ்ட பாகமாக காய்ச்சி இந்த லேகியத்திலே விட்டுகிற கற்கம்.

தேவதாரம், ஏலம், மஞ்சள், மரமஞ்சள், சிறும்பு, மஞ்சட்டி, தாளிச பத்திரி, நாகப்பூ, வாயவிளங்கம், சதகுப்பை, கோஷ்டம், நல்ல சந்தனம், சாஸ்திர பேதி, சாதிக்காய், சாதிபத்திரி, அதிமதுரம், இலவங்கப் பட்டை, நற்சீரகம், நெருஞ்சிக்காய், முத்தக் காசு, மிளகு உரி பாலை வெல்லம் உரி சீனி உரி இளநீர் குறுணி பசுவின் பால் குறுணி இதுவெல்லாம் இந்த பாலிலே அரைத்துக் கரைத்து முந்தின லேகியத்திலே விட்டு பசுவின் நெய்யாகுதல் வெள்ளாட்டு நெய்யாகுதல் தேடிக் கொண்டு முந்தின லேகியத்திலே இட்டுக் காய்ச்சி மெழுகு பதமாக வடித்து சாடி புடத்தில் வைத்து தினம் முக்கழஞ்சு நெய் நக்கவும். இதுக்கு தீரும் வியாதி உம்மாதம், பயித்தியம், விஷ சுரம், நாலு நாளை மாறல் காசம், சுவாசம் உட்டினம், குஷ்டரோகம், பித்தம், தலை நடுக்கு வச்சா மாறு படம், முசல் சன்வலி, பிரமியம், மூத்திர கிச்சம், கல்லெரிப்பு, இரத்த சாய பெரும்பாடு இது வெல்லாம் தீரும். இந்த மருந்தை மலடிக்கு நாற்பது நாள் கொள்ளத் புத்திர சந்தானம் உண்டாகும். மூன்றுங் குளியில் அல்லது நாலாங் குளியில் தப்பாது.

<u>கண்டப் பிட்டிகை பல்லும் வகை:-</u>

வெள்அள்ளி தோல் போக்கியது பலம் நூறு, எள்ளு பலம் ஐம்பது, திருகின பசுவின் மோர், சுக்கு, கொத்தமல்லிகை, செவ்வியம், ஓமம், கொடுவேலி வேர், கசு, திப்பிலி, லவங்கப் பட்டை, ஏலம், திப்பிலி மூலம், மிளகு, சிறு திப்பிலி, நற்சீரகம், அதிமதுரம் இஞ்சி, கடுக்காய், பெருங்காயம், இந்துப்பு, வெடிலவணம், காசி லவணம், எவாச்சாரம், இது வெல்லாம் ஒவ்வொன்றும் பலமாக நிறுத்து கொண்டு இதுக்கு சர்க்கரை பலம் எட்டு நல்ல வெல்லம் பலம் எட்டு, நல்லெண்ணை பலம் எட்டு, காடி அடி வண்டல் பலம் முப்பது இதுவெல்லாம் இடித்து தூளாக்கி முந்தின லேகியத்துடனே கூட்டி பிசைந்து தினமானம் சூரிய புடமாக வைத்து இந்த கடுகு இரண்டு காசிடை உருக்கு காடியிலே கரைத்து வெகு சென பதத்திலே காய்ச்சி வடித்து இதிலொன்று காசிடை தேன் கலந்து கொடுக்கவும். குடித்தாப் போலே இரண்டு காசிடை சீனி கொள்ளவும். மருந்து செரித்தாபோலே தயிரும் சோறும் உண்ணவும். இந்த மருந்து உள்ளே கொள்ள இதுக்கு தீரும் வியாதி எண்பது வகை பயித்தியம், இருபத்தி நாலு வகை சிலேற்பனமும், இருபது வகை பிற மேகமும் மகோதரமும், எட்டு மூல வியாதியும் எட்டும் குஷ்டமும், பதினெட்டு ***** குஷ்யாதிரகம் பன்னிரெண்டு வகை சோகையும் நாலு வகை குலையும் இந்த வியாதிகள் எல்லாம் தீரும்.

விஷ முட்டித் தயிலம் :-

எட்டிப் பழம் நஞ்சு இருக்கிறது பலம் ருரு, காடி பதக்கு எலுமிச்சம் பழச் சாறு படி மூன்று , எட்டிக் கொட்டையை இடித்த பொடி நாழி; சிற்று மலக்கெண்ணை படி. 4, நல்லெண்ணை படி. 4, வசம்பு பலம் ஐந்து, வெள்ளுள்ளி பலம் பத்து இது கூட்டி பதத்தில் வடித்து மேலும் பிடிக்க வாத மென்னப் பட்டதெல்லாம் தீரும்.

(வேறு) திரிகடுகு, இது மூன்றும் சமன் கொண்டு, சிற்று மணக் கெண்ணெயில் குழைத்து விழுங்க சர்வாங்க வாதமும் தீரும்.

சித்த விபிரமமான சுரமும் :-

ஜன்னிக்கும், ஜூரம் கட்டி கொள்ளும் அழும். சிரிக்கும். சுரம்விட்டு விட்டு வரும் தலை சுழற்றும்.

இதக்கு குடிநீர் :-

முலைப்பால், சந்தனம், கோழிக் காரம் கூட்டிக் கொடுக்கவும். பேயன் பழமும் கருப்பு கட்டியும் கோழிக் காரமும் கூட்டி தின்னவும். சர்க்கரையும், அதிமதுரம், திப்பிலி நிலவேம்பு, ஆடாதோடை, சந்தனம், நன்னாரி வேரு, இருவேலி, சுக்கு பற்படாகம், முத்தக் காசு, சீந்தி தண்டு இவை பனிரெண்டும் கஷாயம் போட்டு கொடுக்கவும். பின்னையும் முலைபால் சந்தனம் சீந்தி தண்டு கண்டங்கத்திரி, பேய்புடல், சித்தரத்தை, சுக்கு, விஷ்ணு கிறந்தி, இது கூட்டி காய்ச்சி அசனத்துக்கு மேல் கொடுக்கவும். இரண்டு திப்பிலி போட்டு கொடுக்கவும்.

சன்னி வாதத்துக்கு :-

எருக்கம் வேர், அகத்தி, முருங்கை, சாறணை வேர், வெள்ளை காவளை, வேப்பமுத்து, வெள்ளுள்ளி, வசம்பு, கொடிவேலி, கஸ்தூரி மஞ்சள், குங்குலியம், குப்பைமேனி, இவை வேர் பட்டை இவை எல்லாம் கூட்டி நல்லெண்ணை ~~செ~~பெண்ணை ஆமணக்கெண்ணை இவை மூன்றும் சமமாக கூட்டிப் பதத்தில் வடித்து மேலுக்கும் பூசி உள்ளும் கொண்டு நசியம் பண்ண பதிமூன்று வகை ஜன்னி வாதமும் தீரும்..

தசை வருசிப் பண்ணும் உதரக் களிச்சலுக்கு மருந்து :-

நொச்சியிலை சாறு, பொடுதலைச் சாறு, பிரண்டைச் சாறு, சதிர் கள்ளிச் சாறு, கையாந்த கரை சாறு, குப்பை மேனிச் சாறு, சாறடைச் சாறு, எருக்கிலைச் சாறு, நீர் மேல் ~~நெருப்பு~~ தழுதலைச் சாறு இந்தக் கூலி ஒரு நாழி சாறும் கொதிக்கிற போது வெள்ளுள்ளியும் இடித்துப் போட்டு கடி. 2, பசுவின் மோர். 2 கொட்டை போக்கின கடுக்காய் நாழு, சுக்கு பலம் இருபது இந்துப்பு பலம் இரண்டு இதிலே இடித்துப் போட்டு ஏழு நாள் ஊறக் கொதியிட்டு எட்டா நாள் சுருக்கி பதத்திலே நல்லெண்ணை உரி நெய் உரி வார்த்து பிசறி பதத்திலே சுருக வறுத்து இது ஏற்ற பொடிக்கு வேப்பிலை இந்துப்பு நற்சீரகம், ஓமம், திரிகடுகு, கொடுவேலி வேர், அதிவிடயம், வட்டத் திருப்பி இது வெல்லாம் வகைக்கு நாலு பலம் நிறுத்துப் பெருங்காயம் பலம் ஒன்று இது வெல்லாம் வறுத்து பொடி செய்து முந்தின லேகியத்தில் கூட்டி சூரியப் புடம் பண்ணி வைத்துக் கொண்டு இரண்டு தேச காலமும் கொள்ள இதுக்கு தீரும் வியாதி வாயு அக்கிரணி சித்த கிராணி, இரத்த கிருணி வருண்டி கிரணி சர்வ கிருணியும் அதிசாரமும் மூல வாய்வும் பித்த பாண்டுவும் பிள்ளை பெற்றவருக்கு அதிசாலமும் வயிற்றிலுள்ள பல வியாதியும் எல்லாம் தீரும்

இதுவும் தேங்காய் பால் உரி, வெள்ளுள்ளி மிளகு உரி, முடக் கொற்றான் இலை இதுவெல்லாம் பால் வார்த்து அரைத்து சுருக்கின பதத்திலே கொதிக்க வைத்து தினம் ஒரு கொட்டைப் பாக்களவு கொள்ளவும். விரை வாங்கி இருந்தாலும் நாயுருவிக் காயிலை கொழுந்து கட்டவும். நன்னாரி வேர், பாலை வேர், சுக்கு, மிளகு, திப்பிலி, வெள்ளுள்ளி பசுவின் பாலிலே கொள்ளவும். மஞ்சள், மரமஞ்சள், இரண்டு மூன்று காசிடை உள்ளுக்கு பசுவின் கோமியத்தில் கொள்ளவும். இரண்டு உழக்கு கூட்டி கொள்ள தீரும்.

<u>ஏலாதிச் சூரணம்</u>:-

ஏலம், லவுங்கம், லவுங்கப் பட்டை, லவுங்க பத்திரி, சட்டாங்கிஷ நாகப்பூ, திப்பிலி, திப்பிலி மூலம், செவ்வியம், முந்த காசு, கொத்தமல்லிகை, பேரீச்சம் பழம், முந்திரிகை பழம், தாளிசப் பத்திரி, சாதிக்காய், சாதிப் பத்திரி, வெட்டி வேர், இலாமிச்சை வேர், சந்தனம், காட்டெருமை பால், நெருஞ்சிக்காய், சாறணை வேர், நிலப் பனைகிழங்கு, நிலவேம்பு, அமுக்கிரான் வேர் இது வெல்லாம் சமன் கொண்டு சூரணம் பண்ணி கொண்டு அபானம் சூரணம் இரு களஞ்சு நெய்யுங் கூட்டிக் கொள்ள இதக்கு தீரும் வியாதி படர் தாமரை, செவ்வட்டை கடி, குட்டம், ஆனைச் சொரி, பெருந்தினல் வண்டு கடி, மந்தாக்கினி, பயித்தியம், காமாலை சோகை, ஈளை இரும்பல், பாண்டு, குழப்பை மருந்தீடு வயிற்றில் பல வியாதியும் தீரும், ஏலாதிச் சூரணம் முற்றும்.

<u>கிராணிக்கு</u>:-

கடுக்காய் கொட்டை போக்கி கருக்கின பலம்.8, சுக்கு கருக்கின பொடி பலம்.7, நற்சீரகம் பலம்.2, கருஞ்சீரகம் பலம்.2, ஜாதிப் பத்திரி பலம்.2, பொன் முசுட்டை வேர் பலம்.2, புங்கம் பட்டை பலம்.2, கொடுவேலி வேர் பலம்.2, முள் கொஞ்சி பலம்.2, சாறணை வேர் பலம்.2, கருவேப்பிலைப் தண்டு பலம்.2, பெரு மரப் பட்டை பலம்.2, ஆயப் பட்டை பலம்.2, நல்ல வேளை வேர் பலம்.2, வெள்ள வெங்காயம் பலம்.2, இந்த சாட்டு மருந்து மாத்திரம் ஐந்து குருணி தண்ணீர் விட்டு பதக்கு ஆக காய்ச்சி இதில் தயிர் முக்குருணி, மோர் முக்குருணி, பச்சரிசிக் கழுநீர், ஜா விப் பதக்கு இது வெல்லாம் தூள் பண்ணி அந்த சும்பில் போட்டு மணல் போலே உதிருகிற பதத்திலே இறக்கவும். நாள் ஒன்றுக்கு வெரு கடி பிரமாணம் கொள்ளவும். இப்படி பத்து நாள் கொள்ளவும். பத்தியம் கார்ப்பு, புளிப்பு தவிர்க்கவும். இதக்கு தீரும் வியாதி சகல கிராணியும்மூல ரோகமும் தீரும்.

<u>சத்தி குன்மத்துக்கு</u>:-

பச்சை பயறு பிடி ஒன்று, இள வறுப்பாக வறுத்துக் கொண்டு உடைத்து பருப்பு பண்ணிப் பொங்கி வைத்து வேறே சட்டி காய வைத்து இதில் நெய் ஒரு பிடி வார்த்து காய்ச்சி இறக்கு கற்கம் பெருங்காயம் காசிடை.உ, இந்துப்பு காசிடை இரண்டு பொடி செய்து போடவும். முற்றின தேங்காய் சுருவிப் போடவும். சீனி சர்க்கரை அரைப்படி போடவும். வெள் வெங்காயம் அரை அரைப் படி உரிச்சு அரைத்துப் போடவும். நன்றாக கடைந்து இறக்கி வெதும்ப வைத்துக் கொண்டு வெருகடி பிரமாணம் தின்னவும். சத்தி குன்மம் தீரும்.

<u>பிறதாபங்க சுரம்</u>:-

இரதம்.1, அப்பிரகம்.2, கெந்தகம்.3, லோகம்.5, சங்கம்.4, நாபி.6, நேர்வாளம். இது வெல்லாம் வேப்பம் வேர் கசாயம் வைத்துக் கொண்டு மூன்று ஜாமம் அரைத்து உளுந்துப் பிரமாணம் குளிகை பண்ணி நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு ஜன்னிக்கு அநுபானம் விசேஷங்களில் கொடுக்கவும்.

<u>குசிகா கற்பம்</u>:-

சாதிலிங்கத்தில் வாங்கின இரதம், குழிக்கல்லில் இட்டு நாக பாம்பின் நஞ்சு வாங்கி இந்த இரதத்தில் கூட்டிப் போட்டு மத்திச்சால் வெண்ணை போலாம். பின்பு மயில் பித்து கூட்டி மத்திக்கவும். பின்பு மயில் கால் குழாயில் இட்டு வைத்துக் கொண்டு இந்த எலும்பு கொண்டு மூடி கட்டி தானியப் புடம் ஒரு மாசம் சென்று எடுத்துக் கொண்டு விஷயக பசை பண்ணி சன்னியும் திரிதோஷங்களும் வெதுப்பும் மெடுத்து கண்ணூவு செத்த பல் கட்டி சுயகால் குளிந்து நாக்கும் விழுந்தால் இவற்றுக்கு கால் பெருவிரலில் சத்திரமிட்டு ஊசி கொண்டு மருந்து எடுத்துப் பெரு விரல் சத்திரமிட்ட விடத்திலிட உடம்பெல்லாம் அனல் எடு எடுக்கும். சரு வாகமும் எரித்து அனல் எடுக்கும். இதுகது மரத்து தயிரும் சோறும் இடவும். முந்திரிகை பழம் தின்னவும். மாதளம் பழம் தின்னவும். சர்க்கரை தின்னவும். கரும்பு தின்னவும். தேன் தின்னவும். நெய் தின்னவும். பேரீச்சம் பழம் தின்னவும். இது வெல்லாம் கொடுக்கவும். இது குசிக கற்பம் முற்றும்.

[illegible]
[illegible]

பற்பம் இந்த ஐந்தும் சம பாகமாக நிறுத்துக் கொண்டு பெருஞ் செருப்படி சாற்றில் மூன்று நாள் அரைத்து கசக்கி சுகச்சிகுப்பி ஏழு சீலை மண் கொண்டு உலர்த்தி இதில் மருந்து ரப்பி மாங்கல் கொண்டு குப்பி வாய் மூடி எரி இட்டுப் பிறகு சிறு சூண்டு சட்டியில் நால் விரல் அளவில் மணல் இட்டு அதின் மேல் குப்பியை வைத்து சுற்றி வர மட்டம் மணல் வார்த்துக் கும் கொண்டு குப்பி வாய் தெரியாமல் மூடி குப்பிக்கு மேல் நால் விரல் உயரம் மணல் வார்த்து பின் இரண்டு ஜாமம் சிறுக எரித்து சாங்க சீதளமாக ஆற விட்டு எடுத்துச் சூரணம் பண்ணி செருப்படி சாறு ஆகுதல் இஞ்சி சாறு ஆகுதல் விட்டு அரைத்து மிளகுப் பிரமாணம் உருண்டை பண்ணி நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு இதற்கு அநுபானம் இஞ்சி சாற்றில் கொடுக்க ஜன்னி வாத சுரம், தோஷம் நீங்க குணமாம். முலைப் பால் கலைங் கொம்பு உத்திராட்சம், முசுறு முட்டை, நாக பாம்பு இவைகளில் கொள்ள ஜன்னி வாத சுரம் தோஷங்கள்முதலான வியாதி எல்லாம் குணமாம்.

(வேறு) ரசம், கெந்தகம், வெங்காரம், பொன்னரிதாரம், மனோசிலை இந்த ஐந்தும் சம பாகமாக கூட்டி செருப்படி சாற்றில் அரைத்து கடலை பிரமாணம் உருண்டை பண்ணி நிழலில் உலர்த்தாக உலர்த்தி காசிகுப்பியில் ரப்பி அந்திச் சுவைத்து சூண்டு சட்டியில் நால் விரல் மணல் வார்த்து மேல் காசி குப்பியை வைத்து சுற்றி வர மணல் விட்டு. மேலே நால் விரல் உயரம் மணல் விட்டு ஆறு ஜாமம் கமலாக்கினியாக எரித்து சாங்க சீதளமாக இறக்கி வைத்துக் கொண்டு செருப்படி சாற்றிலாகுதல் இஞ்சி சாறு ஆகுதல் விட்டு அரைத்து கொண்டு குன்றி பிரமாணம் உருண்டை பண்ணி நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு அநுபான விசேஷமாக கொடுக்கவும். ஜன்னி வாத முதலான தோஷங்கள் எல்லாம் குணமாம்.

<u>மகா அக்கினி குமாரன்</u>:-

இரசம், நாபி, அபரக் கெந்தகம், தாளகம், சூங்குலிங்கம், எலிப் பாஷாணம், தாம்பிர பற்பம் இந்த எட்டும் சமபாகமாக நிறுத்துக் கொண்டு கையாந்தரை சாறு வார்த்து அரைத்து அரைத்து கடலை பிரமாணம் உருண்டை பண்ணி நிழலில் உலர்த்தி காசி குப்பியில் வார்த்து மாங்கல் கொண்டு மூடி செறி இட்டு சூண்டுச் சட்டியில் நால் விரல் உயரம் மணல் வார்த்து அதின் மேல் குப்பியை வைத்து சுற்றி வர மணல் விட்டு மூடி மேலே நால் விரல் உயரம் மணல் விட்டு சிறுக நாலு ஜாமம் எரித்து சுரங்க சீதளமாக ஆற விட்டு இறக்கி வைத்துக் கொண்டு கையாந்த கரை சாறு விட்டு அரைத்து கடலை பிரமாணம் உருண்டை பண்ணி நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு அநுபான விசேஷமாக கொடுக்கவும். சர்வ ஜன்னியும் தோஷங்களும் தீரும்.

(வேறு) துரிசு, மனோசிலை, இரசம், கெந்தகம் இந்த நாலும் சமபாகமாக நிறுத்துக் கொண்டு எருக்கிலம் பால் வார்த்து ஏழு நாள் அரைத்து காசி குப்பியில் போட்டு வாய் மாங்கல் கொண்டு மூடி எரி இட்டு ஏழு சீலை மண் கொண்டு சூண்டு சட்டியில் குப்பியை வைத்துச்சுற்றி வர உப்புக் கொண்டு மூடி வாய் மட்டும் வைத்து கால் அக்கினியாக எரித்து ஒரு நாள் எரித்து சாங்க சீதளமாக இறக்கி வைத்துக் கொண்டு பிறகு கற்றாழைச் சாறு தேவதாரச் சாறு கொடுவேலி வேர், முருங்கை வேர்ச் சாறு இந்த நாலும் கூட்டிப் பாவனை பண்ணி ஏழு நாள் பண்ணி பிறகு இந்த நாலு சாற்றிலும் அரைத்து பிறகு நாலு சாற்றிலும் கூட்டி மருந்து மறையச் சாறு வார்த்து மூன்று நாள் சூரிய புடம் வைத்து எடுத்துக் கொண்டு இதுக்கு அநுபானம் கற்றாழைச் சாறும் சர்க்கரையும் பணவிடை மருந்து கூட்டிக் கொடுக்கவும். சீத சுரம், ஜன்னி வாதமும், பித்த சுரம், சர்வ சுரமும் தீரும்.

<u>ரசக் குளிகை</u>:-

ஊமத்தங் காயில் அந்தி சாற்றை விட்டு இரசமும் கூட விட்டு வறளியில் குக்கிட புடமிட ஒரு புடமிட வலியு மாசம் வலிய க்கு ஊமத்தை பிலையும், கையாந்த கரையும் களஞ்சு ரசமும் விட்டு அரைத்து உருண்டை பண்ணி ஊமத்தங்காய் குள்ளே வைத்து வறளியில் இப்படி பனிரெண்டு காயில் பனிரெண்டு புடம் இடக் குளிகையாம்.

(வேறு) ரசம் கழஞ்சு நாலு கொண்டு வந்து, புல்லரி வாளிக் கிழங்கும், செந்திராய் சமூ

சமூலமும் இந்த மருந்து இரண்டையும் அரைத்துக் குகை பிடித்துக் குகை உள்ளே ரசம் விட்டு, அந்த குகை அடுக்கு மத்தங்காய்க் குள்ளே வைத்துக் காய் தெரியாமல் ரிஷபத்தின் சாணத்தைப் பூசி வேகிற நெல்லில் வைத்துப் புடமிடவும்: இப்படி முப்பது காயில் முப்பது புடமிட குளிகை யாம்.

(வேறு) நாலு நாள் மாறலுக்கும் தழுதலையை நொச்சி சாறு வார்த்து அரைத்து உருண்டை பண்ணி பாக்கு வெற்றிலையில் தின்னவும் மாறல் நிற்கும்.

தாப_சுரத்துக்கு:-

அதிமதுரம், சாஸ்திர பேதி, கல்நார், கடுரோகிணி, கொத்தமல்லி, செண்பகப்பூ, ஏலம் சமம். இளநீர் வார்த்து அரைத்து உருண்டை பண்ணி குளிர்ந்த தண்ணீரில் கொடுக்க சுரம் நிற்கும்.

சீத_சுரத்துக்கு:-

